பக்கங்கள்: 20 விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஐப்பசி 04 சனிக்கிழமை 21.10.2017 கதிர் 349

குறைந்த செலவில் குடும்பமாக கனடாவில் குடியேற...
WINSTAR VISA CONSULTANTS
இல.106, தபாற்பெட்டிச் சந்தி, திருநெல்வேலி,யாழ்ப்பாணம்.
web: www.winstarjaffna.com
fb.winstar visa consultants
தொலைபேசி: 021 300 4641

★ ஜனாதிபதியுடனான சந்திப்பில் ஏமாற்றம்

★ அக்கறை கொள்ளாத தமிழ் அரசியல் தலைமைகள்

# அரசியல் கைதிகளுக்காகப் புதன் வரை யாழ். பல்கலை மாணவர் பகிஷ்கரிப்பு

## திங்களும் செவ்வாயும் கவனவீர்ப்பு போராட்டம்

யாழ்ப்பாணம், ஒக்ரோபர் 21

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பாக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவை நேற்று முன்தினம் சந்தித்த யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் அந்தச் சந்திப்பு தொடர்பில் ஏமாற்றம் வெளியிட்டனர்.

இவ்விடயத்தில் ஒரு பதில் தருவதற்குப் புதன்கிழமை வரை ஜனாதிபதி தரப்பு கால அவகாசம் கோரியிருக்கின்றமையால், அந்த விடயத்துக்கு அழுத்தம் தரும் விதத்தில், அத்தினம் வரை வகுப்புப் பகிஷ்கரிப்பை முன்னெடுக்க யாழ். பல்லைக்கழக மாணவர்கள் தீர்மானித்துள்ளனர். பக்கம் 18

புதன்கிழமைக்குள் தீர்வு கிட்டாவிடில்

## பல்கலை மாணவரின் போராட்டம் வேறு வேறு வடிவங்கள் எடுக்குமாம்

யாழ்ப்பாணம், ஒக்.21

எதிர்வரும் புதன்கிழமை வரை ஜனாதிபதிக்கும் அரசுக்கும் கால அவகாசம் வழங்கி, அதற்கு அழுத்தம் தரும் வகையில் அந்தக் கால அவகாசம் வரை தமது வகுப்புக்களைப் பகிஷ்கரிக்கத் தீர்மானித்துள்ள யாழ். பல்கலைக் கழக மாணவர்கள், தமது கோரிக்கைப்படி தமிழ் அரசியல் கைதிகளின் விடயத்துக்கு ஜனாதிபதியும், அரசுத் தரப்பும் அக் கால அவகாசத்தில் உரிய தீர்வை தரத் தவறினால் பல்கலைக்கழக மாணவர் பக்கம் 18

அரசியல் கைதிகள் விவகாரம்

# திங்கள் அல்லது செவ்வாய் ஜனாதிபதியின் தீர்மானம்

சம்பந்தனிடம் அவரே தெரிவிப்பு



கொழும்பு, ஒக்ரோபர் 21

தமிழ் அரசியல் கைதிகள் விவகாரம் தொடர்பில் சில தீர்க்கமான முடிவுகளை நாளை மறுதினம் திங்கட்கிழமை அல்லது செவ்வாய்க்கிழமை தாம் எடுப்பார் என ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன கூறியிருக்கின்றார்.

நேற்று முன்தினம் மாலையில் ஜனாதிபதி மாளிகையில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் தமக்கு அருகில் இருந்த எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தனிடம் இந்த விடயத்தை அவர் கூறினார் என உறுதியான தகவல்கள் கிடைத்துள்ளன. பக்கம் 18

## யாழ். பல்கலைக்கழக மாணவர்கள் ஆளுநரை நம்பி ஏமாந்தனராம்!

(எஸ்.நிதர்ஷன்)

அரசியல் கைதிகள் விடயம் தொடர்பாக சாதகமான தீர்வொன்றைப் பெற்றுத் தருவார் எனக் கூறி ஜனாதிபதியைச் சந்திக்க எம்மை அழைத்துச் சென்ற வடமாகாண ஆளுநர், தங்களை ஏமாற்றியுள்ளார் என யாழ்.பல்கலைக்கழக மாணவர் ஒன்றியம் தெரி பக்கம் 18

மியன்மார் அகதிகள் மீது தாக்குதல்

## தலைமறைவான பிக்கு பொலிஸாரிடம் சிக்கினார்

கொழும்பு, ஒக்.21

கல்கிஸையில் தங்கியிருந்த மியன்மாரின் ரோஹிங்கியா அகதிகள் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்தவரும், சுமார் ஒரு மாத காலத்துக்கு மேல் தலைமறைவாக இருந்து வந்தவருமான 'ஜாதிக பல முழுவ இயக்கம்' என்ற சிங்கள பக்கம் 18

## சட்டமா அதிபர், நீதி அமைச்சருடன் முதலில் பேச விரும்புகிறார் சம்பந்தன்

அதன் பின்னர்தான் ஜனாதிபதியுடன் சந்திப்பாம்



கொழும்பு, ஒக். 21

"தமிழ் அரசியல் கைதிகள் விடயத்தை இனியும் இழுபட விட முடியாது. ஒரு தீர்க்கமான முடிவை நாம் எடுத்தாக வேண்டும். அதற்கு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுடன் உறுதியான சில விடயங்களை வெட்டு ஒன்று துண்டு இரண்டாக நாம் பேசி முடிக்க வேண்டியிருக்கும். அதற்கு முன்னர் நீதி அமைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோருடன் பேசி அவர்களின் கருத்து நிலைப்பாட்டை அறிய விரும்புகிறேன்."

– இவ்வாறு தமக்கு நெருக்கமானவர்களிடம் எதிர்க்கட்சித் தலைவரும், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் தலைவருமான இரா.சம்பந்தன் கூறியிருக்கின் றார் எனத் தெரிய வருகின்றது. பக்கம் 18

## ரயில்வே வேலை நிறுத்தம் தள்ளி வைப்பு

கொழும்பு, ஒக்.21

நேற்றுநள்ளிரவுமுதல் தாம் மேற்கொள்ளத் திட்டமிடப்பட்டிருந்த பணிப்புறக்கணிப்புச்செயற்பாடு தற்காலிகமாக விலக்கிக் கொள்ளப்பட்டுள்ளதாக பக்கம் 18

உள்ளூராட்சித் தேர்தல் தாமதம்

## விடயத்தை விரைந்து தீர்க்க கட்சித் தலைவர்களின் கூட்டம்

கொழும்பு, ஒக். 21

உள்ளூராட்சித் தேர்தலை நடத்துவதற்கான சட்டங்களைஒழுங்குபடுத்தி வழங்குவதில் ஏற்பட்டுள்ள தாமதத்தை நீக்குவது குறித்து ஆராய்வதற்காக அடுத்த வாரத்தில் நாடாளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் கட்சிகளின் தலைவர்களின் கூட்டத்தைக் கூட்டுவதற்குத் தீர்மானிக்கப்பட்டிருக்கின்றது. பக்கம் 18

## நடுக்கடலில் தத்தளித்த 7 தமிழக மீனவர்கள் மீட்பு

பத்திரமாகக் காப்பாற்றிய இலங்கை மீனவர்கள்

கொழும்பு,ஒக்.21

நடுக்கடலில் உயிருக்குப் போராடிகொண்டிருந்த தமிழக மீனவர்கள் ஏழு பேரை இலங்கை மீனவர்கள் பத்திரமாக மீட்டனர்.

தூத்துக்குடியில்இருந்து மாலைதீவுக்குப் பொருள்களைதமிழகமீனவர்களின் பக்கம் 18

# பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே எதிர்காலத்தில் பாடசாலைக்கு இணைப்பு!



## பிரதமர் ரணில் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

சிறப்பான பிரஜை நாட்டுக்கு பங்களிப்பு செய்வதற்காக தேவையான கல்விக்கான அடிப்படை எதிர்வரும் மூன்று தசாப்த காலத்தில் பாடசாலைகளில் உருவாக்கப்படும் என்று பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

தேசிய கல்வியியற் கல்லூரிகளில் கற்கைநெறியை பூர்த்தி செய்தவர்களுக்கு ஆசிரியர் நியமனங்களை வழங்கும் நிகழ்வில் பிரதமர் இந்த விடயங்களைக் குறிப்பிட்டார்.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை அலரிமாளிகையில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதமர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போது நாட்டில் மொத்த ஆசிரியர் தொகையில் 60 சதவீதமானோர் டிப்ளோமா அல்லது பட்டப்படிப்பு தகுதி இன்றி கற்பித்தல் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளனர்.

இதுவரையில் பயிற்சிகள் பெறாத அனைத்து ஆசிரியர்களுக்கும் பயிற்சிகளை வழங்குவதற்குத் தேவையான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டிருக்கின்றன .

எதிர்காலத்தில் பயிற்சி பெற்ற ஆசிரியர்கள் மாத்திரமே பாடசாலைக்கு இணைத்துக் கொள்ளப்படுவார்கள் . 2050 ஆம் ஆண்டளவில் இலங்கையை இந்துமா சமுத்திர பிராந்தியத்தின் கல்விக்கேந்திர நிலையமாகத் தரமுயர்த்துவதே அரசின் நோக்கமாகும்.

கல்வித்துறை மேம்பாட்டுக்காகத் தேவையான நிதி ஒதுக்கப்பட்டு இதனை சிறப்பான சேவையாகத் தரமுயர்த்தப்படும்.

கல்வித்துறையில் உயர் வளர்ச்சியைப் பெற்றுள்ள நாடுகளின் அனுபவங்கள் எடுத்துக்காட்டுக்கள் இதற்காகப் பெற்றுக்கொள்ளப்படும் என்றும் பிரதமர் தெரிவித்தார்.

நாட்டிலுள்ள 19 கல்விக் கற்கை நெறிகளில் பூர்த்தி செய்த 3,336 பேருக்கு இதன் போது பிரதமர் நியமனக் கடிதங்களை வழங்கினார். இதில் 1,078 பேர் தமிழ்மொழி ஆசிரியர்கள் ஆவர்.

இந்த நிகழ்வில் கல்வி அமைச்சர் அகிலவிராஜ் காரியவசம் , இராஜாங்க அமைச்சர் வி.இராதாகிருஷ்ணன் மற்றும் அதிகாரிகள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



# சார்க் நாடுகளின் குழு மைத்திரியுடன் சந்திப்பு!

கொழும்பு, ஒக்.21

ஹர்மன் லூஸ் வெற்றிக் கிண்ண முகாமை பார்வையிடுவதற்காக வருகை தந்துள்ள ஐந்து சார்க் நாடுகளின் தேசிய சாரணர் குழு ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவைச் சந்தித்தனர்.

கொழும்பு கோட்டையில் உள்ள ஜனாதிபதி மாளிகையில் நேற்று முற்பகல் இந்தச் சந்திப்பு இடம்பெற்றது.

பங்களாதேஷ், இந்தியா, நேபாளம், பாகிஸ்தான் மற்றும் மாலைதீவு ஆகிய நாடுகளைப் பிரதிநிதித்துவபடுத்தி சாரணர் குழுக்களும் அதிகாரிகளும் இந்தச் சந்திப்பில் கலந்துகொண்டனர்.

ஒவ்வொரு குழுவுக்கும் பொறுப்பான உயர் அதிகாரிகளுக்கு ஜனாதிபதி அன்பளிப்புகளை வழங்கினார். அந்த அதிகாரிகளும் ஜனாதிபதிக்கு நினைவுச் சின்னமொன்றை வழங்கினர்.

# யாழ். மறைமாவட்ட குருக்களுக்கான ஓய்வு விடுதி வளலாயில் திறந்து வைப்பு!





வளலாய் வடக்கில் நிர்மாணிக்கப்பட்டுள்ள யாழ். மறைமாவட்ட குருக்களுக்கான ஓய்வு விடுதி மறைமாவட்ட ஆயர் யஸ்ரின் பேணாட் ஞானப்பிரகாசத்தால் நேற்றைய தினம் திறந்து வைக்கப்பட்டுள்ளது.

யாழ்.மறைமாவட்ட ஆயர் வடக்கு கடற்படை தளபதியிடம் விடுத்த வேண்டுகோளுக்கு இணங்க, கடற்படை வீரர்களின் பொறியியல் பிரிவினரின் மனித வலுவின் மூலம் இந்த விடுதி அமைக்கப்பட்டுள்ளது.

ஒரு கோடியே 50 லட்சம் ரூபா நிதியில் சேர் சிற்றம்பலம் கார்டினரின் நிதியத்தின் ஊடாக ஆரம்பகாலப்பகுதியில் 15 பரப்பு காணியில் இந்த ஆயர்களுக்கான ஓய்வு விடுதி வளலாய் பகுதியில் அமைக்கப்பட்டிருந்தது.

இந்த விடுதி 1950 ஆம் ஆண்டில் இருந்து யாழ்ப்பாணம் றோமன் கத்தோலிக்கத் திருச்சபையின் பாவனையில் இருந்தது.

ஆயருக்கும், பெரிய குருமட அருட்சகோதரர்களும் தங்களுக்கு உரிய ஓய்வு விடுமுறை காலங்களில் இங்கு தங்கி செல்லவும் நற்கருணை வழிபாடுகளின் போது தங்கும் வசதி கொண்டதாக இந்த விடுதி அமைக்கப்பட்டிருந்தது.

இந்த நிகழ்வின்போது, கடற்படைதளபதி ட்ராவிஸ்சின்னையா பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

மேலும் வடக்கு கட்டளைத் தளபதி ஜெயந்த.டி.சில்வா, கடற்படை அதிகாரிகள் மற்றும் பங்குத் தந்தைகள் என பலர் கலந்து கொண்டனர்.

(க)

# வவுனியா ஊடகவியாளருக்கு இரத்தினதீப விருது வழங்கல்!

வவுனியா, ஒக். 21

மலையக கலைகலாசார சங்கம் மற்றும் என். வி. சி. வானொலி ஊடகவலையமைப்பு இணைந்து நடத்தும் சமூக சேவையாளர்களுக்கான இரத்தின தீப தேசிய சமூக விருதுகள் வழங்கும் நிகழ்வு இன்று வவுனியா ஓவியா விருந்தினர் விடுதியில் இடம்பெறஉள்ளது.

வவுனியா மாவட்டத்தில் ஊடகத்துறையில் நீண்ட காலமாக அர்ப்பணிப்புடன் பணியாற்றியவர்களான பொ. மாணிக்கவாசகம், சு.வரதகுமார், ந.கபில்நாத், கே.வசந்தரூபன், எஸ்.கஜேந்திரகுமார், ஜி.ரட்ணகாந்தன், சிங்கள ஊடகங்களில் கடமையாற்றிய ஊடகவியாளர்கள் நால்வர் உட்பட 10 ஊடகவியலாளர்கள் உட்பட மற்றும் சமூக சேவைகளில் கல்வித் துறையில் பணி யாற்றியவர்களான 44 பேருக்கு இரத்தினதீப விருது வழங்கும் நிகழ்வு இடம்பெறவுள்ளது.

# மூன்றாம் கட்ட வறட்சி நிவாரணத்துக்கு வவுனியாவுக்கு ரூ. 6 கோடி நிதி ஒதுக்கீடு

வவுனியா மாவட்டத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட நிவாரணத்திற்காக 6 கோடி ரூபாய் நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது என மாவட்ட அனர்த்த முகாமைத்துவப் பிரிவு தெரிவித்துள்ளது.

நாட்டில் ஏற்பட்ட சீரற்ற காலநிலை காரணமாக வவுனியா மாவட்டத்தில் 25 ஆயிரத்து 132 குடும்பங்கள் வறட்சி காரணமாக பாதிப்படைந்துள்ளனர். அவர்களுக்கான முதலாம் மாதத்திற்கான இரண்டு கட்ட நிவாரணத்திற்காக 1 கோடியே 30 லட்சம் ரூபாய் ஒதுக்கீடு செய்யப்பட்டு நிவாரணங்கள் வழங்கப்பட்டன இரண்டாம் மாதத்திற்கான அதாவது மூன்றாம் கட்ட நிவாரணத்திற்காக 6 கோடி ரூபாய் நிதி கிடைக்கப்பெற்றுள்ளது.

விரைவுபடுத்தி மூன்றாம் கட்ட நிவாரணத்தை வழங்க நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அனர்த்த முகாமைத்துவப் பிரிவு மேலும் தெரிவித்துள்ளது.

# அன்று – தமிழர்களின் கொக்கச்சான்குளம் இன்று – சிங்களவரின் கலாபோவஸ்வெவ!

## காணி உறுதி வழங்கல் நிகழ்வில் ஜனாதிபதி, பிரதமருடன், சம்பந்தரும்?

வவுனியா உள்ள கொக்கச்சான்குளம் என்ற தமிழர்களுக்குச் சொந்தமான வயல்காணிகள், கலாபோவஸ்வெவ என்ற சிங்களக் கிராமமாகப் பெயர் மாற்றம் செய்யப்பட்டு, இன்று சனிக்கிழமை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் காணி உறுதிகள் கையளிக்கப்படவுள்ளன எனத் தெரியவருகிறது

இவ்வாறு உருவாக்கப்பட்ட, சிங்களக் கிராமத்தில் நாடாளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷவின் பெயரைக் கொண்ட, சிறிய சிங்கள உப கிராமம் ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது. நாமல்புர என்று அதற்கு பெயரிடப்பட்டுள்ளது

வவுனியா சைவப்பிரகாசா மகளிர் கல்லூரியில் இன்று சனிக்கிழமை பாரிய நடமாடும் சேவை நடைபெறவுள்ளது. இந்த நிகழ்வில் கலந்துகொள்ள ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, எதிர்க்கட்சித் தலைவர் இரா.சம்பந்தன் மற்றும் சுமந்திரன் எம்.பி. ஆகியோர் இன்று சனிக்கிழமை வவுனியாவுக்குப் பயணம் செய்யவுள்ளனர்.

நடமாடும் சேவையை ஆரம்பித்து வைத்த பின்னர், ஐயாயிரம் குடும்பங்களுக்கு காணி உறுதிப் பத்திரங்களை ஜனாதிபதியும் பிரதமரும் கையளிக்கவுள்ளனர். சிங்களக் கிராமமாக பெயர் மாற்றம் செய்யப்பட்டுள்ள கலாபோவஸ்வெவ மற்றும் சிதம்பரபுரம் ஆகிய கிராம மக்களுக்குக் காணி உறுதிகள் வழங்கப்படவுள்ளன.

சிதரம்பரபுரத்தில் 206 தமிழ் குடும்பங்களுக்கு மாத்திரமே காணி உறுதிப்பத்திரம் வழங்கப்படவுள்ளது. இந்தக் குடும்பங்கள் பாரம்பரியமாக அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகின்றன. ஆனால் கலாபோவஸ்வெவ கிராமம் திட்டமிட்டு படையினரின் ஒத்துழைப்புடன் உருவாக்கப்பட்டு மேற்கொள்ளப்பட்ட குடியேற்றமாகும் எனப் பிரதேச மக்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

2009ஆம் ஆண்டு மே மாதம் யுத்தம் முடிவுற்ற பின்னர், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கொக்கச்சான்குளத்தை கலாபோவஸ்வெவ எனப் பெயர் மாற்றி, அம்பாந்தோட்டை, காலி ஆகிய தென் மாகாணங்களில் வாழ்ந்த மூவாயிரத்து 500 சிங்களக் குடும்பங்களை அழைத்து வந்து குடியமர்த்தினார்.

அவ்வாறு குடியமர்த்தப்பட்ட சிங்களக் குடும்பங்களுக்குரிய காணிகளின் உறுதிப்பத்திரங்களை நல்லாட்சி அரசாங்கம் தயாரித்து கையளிக்கவுள்ளது. அத்துடன் மஹிந்த ராஜபக்ஷவின் மகன், நாமல் ராஜபக்ஷவின் பெயரில் உள்ள நாமல்புர என்ற கிராமத்தையும் நல்லாட்சி அரசாங்கம் ஏற்றுள்ளதாகத் தகவல் கிடைத்துள்ளது.

நெடுங்கேணிப் பிரதேச செயலக பிரிவில் உள்ள கொக்கச்சான் குளத்தில் நெடுங்கேணியில் வாழும் தமிழர்களின் வயல்களும் விவசாயக் குளங்களும் இருந்தன. ஆனால் 2009ஆம் ஆண்டு மே மாதத்தின் பின்னர் அந்த வயல்காணிகளில் விவசாயம் செய்வதற்குப் படையினர் தடை விதித்தனர்.

தற்போது மூவாயிரத்து 500 சிங்கள குடும்பங்கள் குடியமர்த்தப்பட்டமையால் நெடுங்கேணியில் வாக்காளர் விகிதாசாரத்தில் பாரிய மாற்றங்கள் ஏற்படும் என சமூக ஆர்வலர்கள் கூறுகின்றனர்

இந்த விவகாரம் தொடர்பாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பு, பல தடவைகள் நாடாளுமன்றத்தில் பிரேரணை சமர்ப்பித்து கொக்கச்சான்குளத்தில் மேற்கொள்ளப்படும் சிங்கள குடியேற்றங்களைத் தடுத்து நிறுத்துமாறு வலியுறுத்தியது. அதன் பாரம்பரிய பெயரையும் சிங்களப் பெயராக மாற்ற வேண்டாம் எனவும் கூட்டமைப்பு கோரிக்கை விடுத்திருந்தது.

ஆனால் படையினரின் ஒத்துழைப்புடன் சிங்களக் குடியேற்றங்கள் செய்யப்பட்டு இன்று நல்லாட்சி அரசாங்கம் உறுதிப்பத்திரம் வழங்கவுள்ளது.

அதேவேளை முல்லைத்தீவு மாவட்டத்தில் உள்ள கொக்கிளாய் கிராமத்திலும் சுமார் நான்காயிரம் சிங்களக் குடும்பங்கள் குடியேற்றப்பட்டுள்ளன.

கரைத்துரைப்பற்று பிரதேச செலயகத்துடன் இணைந்திருந்த கொக்கிளாய் பகுதி, தற்போது தனியான பிரதேச செயலகமாக மாற்றப்பட்டுள்ளது.

கொக்கிளாய் பிரதேசத்திற்கென அடுத்த ஆண்டு தனியான பிரதேச சபை ஒன்றும் உருவாக்கப்படவுள்ளதாக அதிகாரிகள் கூறுகின்றனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

மகாவலி ‘எல்’ வலயம் என்ற பிரிவுக்குள் கொக்கிளாய் பிரதேசம் அபிவிருத்தி செய்யப்படுகிறது. அங்கு சிங்களப் பாடசாலைகள், புத்தர் கோவில்கள் கட்டப்பட்டு பூர்த்தியடைந்துள்ளன

கொக்கிளாய் பிரதேசத்தில் வாழ்ந்த தமிழ் மக்கள், யுத்தம் காரணமாக 1984- 85ஆம் ஆண்டுகளில் இடம்பெயர்ந்து வேறு பிரதேசங்களில் வாழ்ந்து வருகின்றனர். ஆனால் அந்த மக்களை மீள் குடியேற்றாமல், சிங்கள மக்கள் படையினரின் ஒத்துழைப்புடன் குடியேற்றம் செய்யப்படுகின்றனர் என நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம் சுமத்தினார். (உ)

## யாழ். இந்து பாரிசுத் தினம்

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரியின் இவ்வாண்டுக்கான பரிசுத் தினம் நாளை மறுதினம் திங்கட்கிழமை காலை 9 மணி முதல் கல்லூரியின் குமாரசுவாமி மண்டபத்தில் கல்லூரி அதிபர் ஐ.தயானந்தராஜா தலைமையில் நடைபெறும்.

இலங்கை எல்லை நிர்ணய ஆணைக்குழுவின் தலைவர் கலாநிதி கனகரட்ணம் தவலிங்கம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார். திருமதி நந்தினி தவலிங்கம் வெற்றி பெற்றோருக்குப் பரிசில்களை வழங்குவார். (உ)

## மாதாந்த திரைப்படம் இன்று ‘ஒருத்தி’ இலவச காட்சி

யாழ்ப்பாணம், ஒக்.21

தேசிய வாசிப்பு மாதத்தை முன்னிட்டு யாழ். பொதுசன நூலக வாசகர் வட்டம் நடத்தும் மாதாந்த திரைப்படக் காட்சி வரிசையில் ‘ஒருத்தி’ எனும் திரைப்படம் யாழ். பொதுசன நூலக கேட்போர் கூடத்தில் இன்று சனிக்கிழமை பிற்பகல் 3 மணிக்கு இலவசமாகக் காட்சிப்படுத்தப்படும்.

கி.ராஜநாராயணனின் ‘கிடை’ குறுநாவலை அடிப்படையாகக் கொண்டு அம்ஷன்குமார் ‘ஒருத்தி’ திரைப்படத்தை நெறியாக்கம் செய்திருந்தமை இங்கு குறிப்பிடத்தக்கது.

ஆர்வலர்களைக் கலந்து கொள்ளுமாறு பொதுசன நூலக வாசகர் வட்டத்தினர் தெரிவித்துள்ளனர். (இ

## பள்ளிவாசல் பரிபாலனம் இன்று கருத்தரங்கு

யாழ்ப்பாணம், ஒக்.21

யாழ். மாவட்ட ஜும்ஆ பள்ளிவாசல் நிர்வாகிகளுக்கான கருத்தரங்கு இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு யாழ். பொது நூலக கேட்போர் கூடத்தில் முஸ்லிம் சமய பண்பாட்டலுவல்கள் திணைக்களத்தின் பணிப்பாளர் எம்.ஆர்.எம்.மலிக் தலைமையில் நடைபெறும்.

முக்கியத்துவம் வாய்ந்த இக் கருத்தரங்கில் பள்ளிவாசலின் தலைவர், செயலாளர், பொருளாளர் ஆகியோர் கலந்து பள்ளிவாசல் பரிபாலனம், இலங்கை வக்பு சட்டங்களின் விதிமுறைகள் பற்றிய பூரண அறிவைப் பெற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளனர். (இ-19)

## வித்தியா படுகொலை வழக்கு; பொலிஸாருக்குப் பணப்பரிசு

புங்குடுதீவு மாணவி வித்தியா கொலை வழக்கில் சிறப்பாகச் செயற்பட்டனர் என்று கூறப்படும் பொலிஸ் அலுவலர்களுக்கு 13 லட்சத்து 12 ஆயிரத்து 500 ரூபா பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

மேல்மாகாண சபை நுண்கலை கேந்திர நிலையத்தில் நேற்று சட்ட ஒழுங்கு மற்றும் தெற்கு அபிவிருத்தி அமைச்சர் சாகல ரட்ணாயக்க தலைமையில் நடைபெற்ற நிகழ்விலேயே அமைச்சரால் இந்தப் பணப் பரிசில் வழங்கப்பட்டுள்ளது.

புங்குடுதீவு மாணவி கொலை வழக்கில் விசாரணைகளை முன்னெடுத்த குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் அப்போதைய பணிப்பாளர் சுதத் நாஹமுல்ல, விசாரணைகளை நெறிப்படுத்திய குற்றப்புலனாய்வுத் திணைக்கள உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் பீ.ஏ.திசரா, பிரதான விசாரணை அதிகாரி பொலிஸ் இன்ஸ்பெக்டர் நிஷாந்த டி சில்வா உள்ளிட்ட 33 பொலிஸ் அதிகாரிகளுக்கும் 13 லட்சத்து 12ஆயிரத்து 500 ரூபா பணப்பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் தொடர்பில் புங்குடுதீவைச் சேர்ந்த 09 பேர் கைது செய்யப்பட்டு, அவர்களுக்கு எதிரான விசாரணைகள் நடத்தப்பட்டு கடந்த மாதம் 27ஆம் திகதி 07 பேர் குற்றவாளிகளாக இனங்காணப்பட்டு மரண தண்டனை விதிக்கப்பட்டமையுடன், தலா 30 ஆண்டு கடூழிய சிறைத்தண்டனையும், மாணவியின் குடும்பத்துக்கு குற்றவாளிகள் தலா பத்து லட்சம் ரூபா இழப்பீடு வழங்க வேண்டும் எனவும் 40 ஆயிரம் முதல் 75 ஆயிரம் ரூபாய் வரையில் தண்டம் விதித்தும் தீர்ப்பளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# மக்களைத் தவறாக வழிநடத்த சில தீயசக்திகள் தீவிர முயற்சி!

## எச்சரிக்கிறார் ஜனாதிபதி



கொழும்பு, ஒக்.21

புதிய அரசமைப்பிற்கான சட்டவரைவு கூட தயாரிக்கப்படாத நிலையில் அது தொடர்பாக மேற்கொள்ளப்படும் தவறான விமர்சனங்கள் தொடர்பில் மக்கள் புரிந்துணர்வுடன் செயற்படவேண்டுமென ஜனாதிபதி தெரிவித்தார்.

தீபாவளி பண்டிகையை முன்னிட்டு நேற்று முன்தினம் மாலையில் கொழும்பில் ஜனாதிபதி மாளிகையில் இடம்பெற்ற தீபாவளி விழாவின்போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டார்.

நாட்டில் ஏற்படும் பிரச்சினைகளுக்கு சந்தர்ப்பத்திற்கேற்றவாறு பொருத்தமான முறையில் தீர்வுகளை பெற்றுக்கொடுக்காமையினாலேயே மூன்று தசாப்த கால கொடிய யுத்தத்திற்கு நாம் முகங்கொடுக்க நேர்ந்ததெனக் குறிப்பிட்ட ஜனாதிபதி, நாட்டை நேசிக்கும் உண்மையான மனிதர்கள் என்ற வகையில் சகல இனங்களுக்கிடையிலும் அமைதி, நல்லிணக்கம் என்பவற்றை கட்டியெழுப்புவதற்கு ஒன்றுதிரளுமாறு சகல இலங்கையருக்கும் தாம் அழைப்பு விடுக்கிறார் எனவும் தெரிவித்தார்.

முப்பது வருடகாலமாக இடம்பெற்ற கொடிய யுத்தம் காரணமாக எம்மால் இழக்கப்பட்ட இனங்களுக்கிடையிலான சகவாழ்வு, நட்புறவு மற்றும் அந்நியோன்னிய பிணைப்புக்களை மீண்டும் கட்டியெழுப்புவதற்கான நடவடிக்கைகள் தற்போதைய அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சில பிற்போக்குவாதிகளினால் அந்நடவடிக்கைகளில் தடங்கல்களை ஏற்படுத்துவதற்கு முயற்சிகள் மேற்கொள்ளப்படுகின்றன – என்றும் ஜனாதிபதி அங்கு குறிப்பிட்டார்.

சகல இனங்களினதும் கலாசார அடையாளங்களை இனங்கண்டு, அவற்றிற்கு மதிப்பளித்தே சகல நடவடிக்கைகளையும் மேற்கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

புதிய அரசமைப்பிற்கான சட்ட வரைவு கூட தயாரிக்கப்படாத நிலையில் – அரசமைப்பு தயாரிப்புக்கான அடிப்படை விடயங்கள் உள்ளடங்கிய அறிக்கை மாத்திரமே தற்போது நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த ஜனாதிபதி, அனைவரது கருத்துக்களும், முன்மொழிவுகளும் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னரே பொருத்தமான செயற்பாடுகளை நடைமுறைப்படுத்த எதிர்பார்க்கின்றார் எனவும் தெரிவித்தார்.

இந்து கலாசார அம்சங்களால் வண்ணமயமாகிய இந்நிகழ்வில் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க, சபாநாயகர் கரு ஜயசூரிய, எதிர்க்கட்சித் தலைவர் ஆர். சம்பந்தன், அமைச்சர் டி.எம். சுவாமிநாதன், இராஜாங்க அமைச்சர் வீ. இராதாகிருஷ்ணன், மத்திய வங்கி ஆளுநர் இந்திரஜித் குமாரசுவாமி, ஜனாதிபதியின் செயலாளர் ஒஸ்ரின் பெர்ணான்டோ உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## சாத்தான் ஓதும் வேதம்

நாட்டின் ஜனாதிபதியும் பிரதமரும் நேற்றுமுன்தினம் - ஒக்ரோபர் மாதம் 19 ஆம் திகதி - ஒரே சமயத்தில் ஊடகங்கள் குறித்துக் கருத்துத் தெரிவித்திருக்கின்றார்கள்.

இரண்டு பேருமே தங்கள் முதுகில் உள்ள புண்களைப் பற்றிச் சிந்திக்காமல் மற்றையவர்கள் முதுகில் இருக்கும் புண்களைச் சுரண்ட முற்படுகின்றார்கள் போன்றே தெரிகிறது. அதுவும் அவர்கள் இந்தக் கருத்துக்களைத் தெரிவித்த நாள், ஊடகத்துறையைப் பொறுத்தவரை - அதுவும் தமிழ் ஊடகத்துறையைப் பொறுத்தவரை - மிக முக்கியமானதும், குறிப்பிடத்தக்கதுமான நாளாகும்.

புதிய அரசமைப்பு உருவாக்கம் தொடர்பில் பௌத்த மதபீடங்களின் நிலைப்பாடுகள் குறித்து நேற்றுமுன்தினம் ஊடகங்களில் - குறிப்பாக அச்சு ஊடகங்களில் - பத்திரிகைகளில் - வெளியான செய்தி குறித்துச் சீறியிருக்கின்றார் பிரதமர்.

மல்வத்தை மற்றும் அஸ்கிரிய பீடாதிபதிகள் புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை எதிர்க்கின்றார்கள் என ஊடகங்கள் செய்தி வெளியிட்டிருக்கின்றன என்று குறிப்பிட்ட பிரதமர், அந்தச் செய்திக்கு இரண்டு பீடாதிபதிகளின் படங்களையும் சேர்த்து ஊடகங்கள் பிரசுரித்துள்ளன, ஆனால், அந்தப் பீடாதிபதிகள் இது தொடர்பான கூட்டத்தில் பிரசன்னமாகி இருக்கவேயில்லை என்றும் சீறியிருக்கின்றார்.

இதில் பிரதமர் சீறுவதற்கு - ஊடகங்கள் மீது பாய்வதற்குக் காரணம் இருப்பதாகத் தெரியவில்லை.

கண்டியில் நடந்த இந்தக் கூட்டம் குறித்து யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 'காலைக்கதிர்' நாளிதழ் கூட 'புதிய அரசமைப்புக்கு அவசியமே இல்லை; அஸ்கிரிய, மல்வத்த பீடங்கள் ஒன்றுகூடி முடிவு அறிவிப்பு' என்றுதான் தலைப்பிட்டுச் செய்தி வெளியிட்டது. அந்தச் செய்தியுடன் பிரதமர் குறிப்பிடுகின்றமை போல் மல்வத்த மற்றும் அஸ்கிரிய மகாநாயக்கர்களின் படத்தை 'காலைக்கதிர்' நாளிதழ் பிரசுரிக்கவில்லை. ஆனால், பிரசுரித்திருந்தாலும்கூட அது பிரதமர் ரணில் விக்கிரமசிங்க சீறிப் பாயும் அளவுக்கு தப்பானது அல்ல என்பதுதான் எமது கருத்து.

சரியோ, பிழையோ மேற்படி இரண்டு பீடங்களின் கூட்டுக் குழுவான காரக சபாவில் ஆராயப்பட்டு எடுக்கப்பட்ட முடிவையே ஊடகங்கள் - குறிப்பாகப் பத்திரிகைகள் - செய்தியாக வெளியிட்டிருந்தன.

அத்தகைய கூட்டுக் குழுவின் முடிவு - தீர்மானம் - சரியானதாக இருக்கலாம். அல்லது பிழையானதாக இருக்கலாம். தமது அரசுக்கு மக்கள் வழங்கிய ஆணையைத் தாம் நிறைவேற்றவிடாமல் தடுக்கும் முடிவாக அமைந்துள்ளது என பிரதமர் கருதலாம்.

ஆனால், கூட்டம் நடந்ததையும் அங்கு எடுத்த தீர்மானத்தையும் அந்தத் தரப்புத்தான் மறுக்க வேண்டும். பிரதமர் அல்லர்.

அத்தோடு இரு பீடங்கள் பற்றிய செய்திகளைப் பிரசுரிக்கும் போது அந்தப் பீடாதிபதிகளின் படங்களை ஊடகங்கள் பிரசுரிப்பது தவறேயல்ல.

பிரதமரும், ஜனாதிபதியும் நேரடியாகச் சம்பந்தப்படாத அரசுச் செய்திகளிலும், விழாக்களிலும் அவர்களின் படங்களைப் பயன்படுத்துவது போன்றே அது.

ஆகவே, அப்படிச் செய்தி வெளியிட்டமைக்காக ஊடகங்கள் மீது பிரதமர் குறை கூறுவதற்கு எந்த முகாந்திரமும் இல்லை என்பதுதான் நமது கருத்து; நிலைப்பாடு.

இதேசமயம், நேற்றுமுன்தினம் கொழும்பில் சிரேஷ்ட ஊடகவியலாளர் அமரர் டி.பி.தனபாலவின் முத்திரை வெளியீட்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, ஊடகவியலாளர்களுக்குப் பேருபதேசம் செய்திருக்கின்றார்.

"ஊடகவியலாளர்களும், பத்திரிகையாளர்களும் எப்போதும் சரியானவற்றைத் தெரிவு செய்து, உண்மைக்கு மதிப்பளித்து, நேர்மையுடன் செயற்படுவதற்குத் தமது பேனா முனையைப் பயன்படுத்த வேண்டும்" - என்று தொடங்கி, ஊடகத்துறை தொடர்பில் நீண்ட பல உபதேசங்களை முழங்கியிருக்கின்றார் அவர்.

ஆனால், ஜனாதிபதியும், பிரதமரும் ஊடகத்துறை நோக்கி சுட்டு விரலை நீட்டும் அதே தினம், அவர்களை நோக்கியும் குற்றச்சாட்டு விரல் நீளுகின்றது என்பதை அவர்கள் மறந்து போய் நின்றமைதான் வேடிக்கையானது.

ஆம், தமிழ் ஊடகவியலாளர் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்ட தினம் அதுதான். நவம்பர் மாதம் 19 ஆம் திகதி - சரியாக 17 ஆண்டுகளுக்கு முன்னர் - 2000 ஆம் ஆண்டில் - இந்தத் தினத்தில்தான் நிமலராஜன் படுகொலை செய்யப்பட்டார்.

அன்றுமுதல் நல்லாட்சி அரசு ஆட்சிக்கு வரும் வரை, தமிழ் ஊடகவியலாளர்களுக்கு எதிராகக் கட்டவிழ்ந்த கொடூரங்களை, கொலைகளை, தாக்குதல்களை, கடத்தல்களை, சித்திரவதைகளை, கைதுகளை, தடுப்புக்காவல் சிறைவாசங்களைப் பற்றி எள்ளளவும் சிந்திக்காமல் புறமொதுக்கி நடக்கும் பிரதமரும் ஜனாதிபதியும் -

இந்தக் காலகட்டத்தில் சிங்கள ஊடகவியலாளர்களுக்கு எதிராக இழைக்கப்பட்ட எல்லா - ஒவ்வொரு - அத்துமீறல்கள் குறித்தும் மிக 'ஸீரியஸான' விசாரணைகளைத் தமது அரசின் கீழ் முன்னெடுக்கும் ஜனாதிபதியும், பிரதமரும் -

ஊடக தர்மம் குறித்துப் பேசுவதற்கு எந்தவித அருகதையுமே அற்றவர்கள் என்பதுதான் உண்மை.

தமிழ் ஊடகவியலாளர்களுக்கு நியாயம் செய்ய மறுத்தபடி, ஊடக தர்மம் பற்றி அவர்கள் பேசுவது முழுக்க முழுக்க சாத்தான் வேதம் ஓதுவதற்கு ஒப்பானது.

### கூட்டு நலன்களைப் பெற்றுக்கொள்ள

# பாகிஸ்தானிய முன்னாள் பட்டதாரிகள் சங்கம் தலைநகர் கொழும்பில் ஆரம்பித்து வைப்பு



கொழும்பு, ஒக். 21

முன்னாள் பட்டதாரிகளை மீள் இணைப்பதனூடாக கூட்டு நலன்களைப் பெற்றுக்கொள்ளும் இலக்குடன் பாகிஸ்தானிய முன்னாள் பட்டதாரிகள் சங்கம் நேற்றுமுன்தினம் கொழும்பில் ஆரம்பித்து வைக்கப்பட்டது.

பாகிஸ்தானிய வெளியுறவு செயலாளர் தெஹ்மீனா ஜான் ஜிவா இந்த நிகழ்விற்கு பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு முன்னாள் பட்டதாரிகளின் சங்கத்தை ஆரம்பித்து வைத்தார்.

இந்த நிகழ்வில் அமைச்சர்கள், பிரமுகர்கள், பாதுகாப்பு பிரிவின் பிரதிநிதிகள், கல்வித்துறை பிரதிநிதிகள் மற்றும் வெவ்வேறு துறைசார் நபர்களும் கலந்துகொண்டனர்.

பல்வேறுபட்ட கல்விப் புலமைப்பரிசில்களூடாக இரு நாட்டினதும் பல்கலைக்கழகங்களை இணைப்பது இந்தச் சங்கத்தின் நோக்கமாகும்.

முன்னாள் பட்டதாரிகள் சங்கத்தினூடாக அரச, தனியார் அதேபோல சிவில் சமூகங்கள் இரு நாடுகளினதும் மேம்பட்ட அறிவின் வளர்ச்சிக்கு பங்களிப்புச் செய்யக்கூடிய நிபுணர்களை உருவாக்குதல் மற்றும் வலையமைப்புக்களை விஸ்தரித்தலை மேற்கொள்ள வழி வகுக்கும்.

பாகிஸ்தான் உயர் கல்வித்துறையில் குறிப்பாக சமூக விஞ்ஞானம், முகாமைத்துவம், பொறியியல், மருந்தகம், பல் மருத்துவம் போன்ற துறைகளில் சிறந்து விளங்குவதாக பாகிஸ்தானிய வெளியுறவு செயலாளர் இந்த நிகழ்விலே உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

கடந்த பல தசாப்தங்களாக ஆயிரக்கணக்கான இலங்கை மாணவர்கள் மற்றும் நிபுணர்கள் பாகிஸ்தானில் கல்வி மற்றும் பயிற்சியைப் பெற்று நன்மையடைந்துள்ளனர் எனவும் அவர் கூறினார்.

பாகிஸ்தானிய பிரதமர் கடந்த வருடம் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டபோது, இலங்கையின் சிவில், இராணுவம் மற்றும் மாணவர்களுக்கு புலமைப்பரிசில்கள், பல்கலைக் கழகங்கள் மற்றும் பயிற்சி நிறுவனங்களினூடாக கல்வித் துறையை அபிவிருத்தி செய்வதற்கு வழங்கிய வாய்ப்பை இதன்போது பாகிஸ்தானிய வெளியுறவு செயலாளர் நினைவூட்டினார்.

பிரதமரின் பாக்.-லங்கா அறிவு நீள்பாதை எனப் பெயரிடப்பட்ட இம்முயற்சி பாகிஸ்தானிய உயர் கல்வி நிறுவனங்களில் கல்வி கற்பதற்கு இலங்கைக் குடிமக்களுக்கு அதிகப்படியான வாய்ப்புக்களை புலமைப் பரிசில்களூடாகவழங்குகின்றது எனவும் வெளியுறவு செயலாளர் தனது உரையில் குறிப்பிட்டார்.

பாகிஸ்தானிய முன்னாள் பட்டதாரிகள் சங்கம் பன்முக சமூகத்தின் நலன்களுக்காக பயிற்சி மற்றும் கற்றலின் பொழுது பெறப்பட்ட அனுபவங்கள் மற்றும் நினைவுகளை கற்றுக்கொள்ளல், ஒருங்கிணைத்தல் மற்றும் பகிர்ந்து கொள்வதில் அங்கத்துவர்களை ஈடுபடுத்தும் என இலங்கைக்கான பாகிஸ்தானிய தூதுவராக நியமிக்கப்பட்டுள்ள கலாநிதி ஷாஹித் அஹ்மத் ஹஷ்மத் குறிப்பிட்டார்.

இவ்வாறு புதிதாக ஆரம்பிக்கப்பட்ட இந்தச் சங்கத்தின் பொறுப்பாளர்களுக்கு தனது பாராட்டுக்களையும், இந்த முயற்சி எதிர்காலத்தில் பெரு வெற்றிபெறுவதற்கு வாழ்த்துக்களையும் தெரிவித்தார். இந்த நிகழ்வில் உரையாற்றிய பிரதித் தூதுவர் - இந்தச் சங்கத்தின் வாய்ப்புக்கள், பணி, நோக்கு மற்றும் இடைக்கால நிர்வாகக் குழு தொடர்பாகவும் இதன்போது விளக்கினார்.

பாகிஸ்தானில் நிபுணத்துவம் பெற்ற, குறுகிய அல்லது நீண்டகால பயிற்சி நெறிகளை முடித்த அனைத்து இலங்கையர்களும் இந்தச் சங்கத்தில் இணைந்துகொள்ள முடியும் என்பது குறிப்பிடத்தக்கது.

## 'கியூடெக்' தீபாவளிக் கொண்டாட்டம்

கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தின் தீபாவளிக் கொண்டாட்ட நிகழ்ச்சிகள் நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 3 மணிக்கு, நாவாந்துறை கண்ணாபுரம் சனசமூக நிலைய முற்றத்தில் இடம் பெறவுள்ளது.

பிரதம விருந்தினராகக் கியூடெக் கரித்தாஸ் நிறுவன கணக்காளர் எஸ்.விக்னேஸ்வரன் கலந்து கொள்வார்.

இந்த நிகழ்வில் IRA இணைப்பாளர்யோசப்பாலா நிகழ்வின் நோக்கம் பற்றியும், சன சமூக நிலையத் தலைவர் தலைமையுரையையும் ஆற்றுவார். சிறுவர் பாடல், சிறுவர் நடனம் மற்றும் சமுர்த்தி முகாமையாளர் தீபாவளி பற்றி சிறப்புரை ஆற்றுவார்.

போட்டிகளாக கிடுகு பின்னல், முட்டி உடைத்தல், விழுமியக் கல்விப் போட்டி, முதியோர் நடை, மாலை கட்டுதல், கோலம் போடுதல் போன்றன இடம்பெறவுள்ளன. பரிசில்களை ஜே/84, 85 கிராம உத்தியோகத்தர் வழங்குவார். (இ - 19)

## ஆசிரிய இடமாற்றம்: நாளை கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், ஒக். 21

வடக்கு மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பில் அவசர கலந்துரையாடல் ஒன்று நாளை ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11 மணிக்கு, யாழ். மத்திய கல்லூரியில் இடம்பெறும்.

பயிற்றப்பட்ட ஆசிரியர்களின் இடமாற்றம் தொடர்பாக தீர்வைப் பெறுவதற்கு தொழிற்சங்க நடவடிக்கையில் ஈடுபடு வது தொடர்பில் தீர்மானங்களை எடுக்கவுள்ள காரணத்தால் 2012 - 2014 கோப்பாய், பலாலி ஆசிரியர் கலாசாலையில் பயிற்றப்பட்ட ஆசிரியர்கள் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு வட மாகாண பயிற்றப்பட்ட ஆசிரியர் சங்கத்தினர் அறிவித்துள்ளனர். (இ)

**உலக மார்பகப் புற்றுநோய் விழிப்பூட்டல் மாதம் ஐப்பசி - 2017**

மார்பகத்தின் வெளித் தோற்றத்தில் தோன்றும் அசாதாரண மாற்றங்களை அறிந்து கொள்ளுங்கள். அந்த மாற்றங்கள் உங்களில் தென்பட்டால், உடன் வைத்திய ஆலோசனை பெற்றுக்கொள்ளுங்கள்.



Be Breast Aware

தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

## நாளை

22.10.2017
ஞாயிற்றுக்கிழமை

நட்சத்திரம் : விசாகம் பி.ப. 12.46 வரை
திதி : திரிதியை பி.இ. 4.22 வரை

சுபநேரம் : 9.02 – 10.32 வரை
இராகுகாலம்: 4.32 - 6.02 வரை

# யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு பிரச்சினைக்குத் தீர்வு காணுங்கள்

கொழும்பு, ஒக். 21

வடக்கு மாகாணசபை யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு, பிரச்சினைகளுக்குத்தீர்வு காண்பதற்கு முன்வரவேண்டும் என்று புதுடில்லியில் நடத்தப்பட்ட, வடக்கு மாகாண சபை உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கில் வலியுறுத்தப்பட்டுள்ளது.



வடக்கு மாகாணசபையின் உறுப்பினர்கள் மற்றும் அதிகாரிகளுக்கான வலுவூட்டல் கருத்தரங்கு கடந்தவாரம் புதுடில்லியில் இடம்பெற்றது.

புதுடில்லியில் உள்ள ஓ.பி. ஜின்டால் குளோபல் பல்கலைக் கழகத்தின் அரச மற்றும் பொதுக்கொள்கை வகுப்பு கல்லூரியால், ஒருவார காலம் நடத்தப்பட்ட இந்தக் கருத்தரங்குக்கு, ஆஸ்திரேலியா நிதிப்பங்களிப்பை வழங்கியிருந்ததுடன், ஆசிய மன்றம் இதற்கான ஏற்பாடுகளையும் மேற்கொண்டிருந்தது.

## வடமாகாணசபை உறுப்பினர்களுக்கு புதுடில்லியில் அறிவுரை!



வடக்கு மாகாணசபையின் 14 உறுப்பினர்களும், ஐந்து அதிகாரிகளும் பங்கேற்ற இந்தக் கருத்தரங்கில், இலங்கை விவகாரங்களுடன் தொடர்புடைய மற்றும் அதனை உன்னிப்பதாக அவதானித்து வரும் இந்தியாவின் இராஜதந்திரிகள், கல்வியியலாளர்கள், ஊடகவியலாளர்கள் எனப் பலரும் பங் கேற்று உரையாற்றியிருந்தனர்.

ஊடகவியலாளர் எம்.கே. நாராயணசாமி, முன்னாள் இந்திய வெளிவிவகாரச் செயலரும், இலங்கையில் இந்திய தூதுவராகப் பணியாற்றியவருமான நிருபமா ராவ், கலாநிதி சி.ராஜ்குமார், கலாநிதி ஆர்.சுதர்சன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் கலாநிதி எம்.சுதர்சன நாச்சியப்பன், கலாநிதி மோகன்குமார், மேலும் பலர் இந்த வலுவூட்டல் கருத்தரங்கில் விரிவுரைகளை நிகழ்த்தியிருந்தனர்.

இனசமத்துவம், அதிகாரப் பகிர்வு, சமூகங்களுக்கு இடையிலான நல்லிணக்கம், தேசிய பாதுகாப்பு, இலங்கை இனப் பிரச்சினையில் இந்தியாவின் தலையீடுகள், தற்போதைய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு வடமாகாணசபை ஆற்ற வேண்டிய முக்கிய பணிகள் தொடர்பாக இந்தக் கருத்தரங்கில் கூடுதல் கவனம் செலுத்தப்பட்டது.

இந்தக் கருத்தரங்கில், தற்கால புவிசார் அரசியல் சூழலில், தமிழ் மக்களின் பிரச்சினைகளைத் தீர்ப்பதில் இந்தியா உள்ளிட்ட சர்வதேச பங்களிப்புக்கு வாய்ப்புகள் இல்லை என்றும், யதார்த்தத்தைப் புரிந்துகொண்டு செயற்படுமாறும் வலியுறுத்தப்பட்டது எனத் தெரிகிறது.

இதுதொடர்பாக, இந்தக் கருத்தரங்கில் பங்கேற்றிருந்த வடமாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா தெரிவித்தவை வருமாறு:-

இலங்கையில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அரசியல் சவால்களை வென்றெடுப்பதற்கு இந்தியா உள்ளிட்ட உலக நாடுகளின் பங்களிப்பை சமகால பூகோள அரசியலில் பெரியளவில் எதிர்பார்க்க முடியாது என்பதை, இந்தப் பயணத்தின்போது உணரக் கூடியதாக இருந்தது.

வலுவூட்டல் கருத்தரங்கில் உரையாற்றியவர்கள், யதார்த்தத்தை உணர்ந்து அதன் அடிப்படையிலேயே தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்க முன்வர வேண்டும் என்ற கருத்தை முன்வைப்பது போன்று இருந்தது.

இரண்டாம் உலகப் போருக்குப் பின்னர் இனரீதியான போராட்டங்கள் உலகில் வெற்றி பெற்றமை மிக அரிது என்ற கருத்தை அவர்கள் வெளிப்படுத்தினர்.

போராட்டம் ஓரளவு பலத்தைக் கொண்டிருந்த காலப் பகுதிகளில் தீர்வை நோக்கிச் சென்றவர்கள் ஓரளவு அதிகார வலுவுடைய தீர்வுகளைப் பெற்றிருக்கின்றனர்.

ஆனால், போராட்டங்கள் வலுவிழந்த நிலையில் தங்களது அரசியல் அபிலாஷைகளை முழுமையாகப் பூர்த்தி செய்யக் கூடிய தீர்வைப் பெறுவதற்கான சாத்தியக் கூறுகள் அரிது எனவும் அவர்கள் குறிப்பிட்டனர் என்று அவர் தெரிவித்துள்ளார்.

# ரயில் பாதைகளின் எண்ணிக்கை இரட்டிக்கப்பட வேண்டும்!

## அத்துரலிய ரத்ன தேரர் கோரிக்கை



கொழும்பு, ஒக். 21

ரயில் பாதைகளின் எண்ணிக்கை இரட்டிக்கப்பட வேண்டும் என நாடாளுமன்ற உறுப்பினர் வண.அத்துரலிய ரத்ன தேரர் கோரியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மக்களின் போக்குவரத்துப் பிரச்சினைக்குத் தீர்வாக அதிவேக நெடுஞ்சாலைகளை அமைப்பதை விடுத்து, ரயில் பாதைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்த வேண்டும்.

மத்திய அதிவேக நெடுஞ்சாலை அமைக்கும் பணிகள் குருநாகலுடன் நிறுத்திக் கொள்ளப்பட வேண்டும். கண்டி வரையில் பாதை அமைப்பதால் ஏற்ப டக் கூடிய சுற்றாடல் பாதிப்புக்களை வரையறுக்க வேண்டும்.


ரயிலில் பயணிக்கும் பயணிகளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது.

மூன்று ரயிலில் பயணிக்க வேண்டிய பயணிகள் ஒரே ரயிலில் பயணிக்கின்றனர்.

ரயில்பாதைகளின் எண்ணிக்கையை இரட்டிப்பாக உயர்த்தினால் அதன் ஊடாக மக்களின் செயற்திறனை 50 வீதமாக உயர்த்த முடியும் என வண. அத்துரலிய ரத்ன தேரர் தெரிவித்துள்ளார்.

கடும் காற்று; பலத்த மழை

# 200 வருட பழைமையான மரமும் கொழும்பில் அடியோடு சரிந்தது!



கொழும்பு, ஒக். 21

கொழும்பின் பல பிரதேசங்களிலும் நேற்று அதிகாலை பெய்த கடும் மழை காரணமாகப் போக்குவரத்து சிக்கல்கள் ஏற்பட்டுள்ளன.

கொழும்பு பிரதான வீதியோரமாகக் காணப்பட்ட சுமார் 200 வருடங்கள் பழைமையான மரம் ஒன்றும் முறிந்து வீழ்ந்துள்ளது. நேற்று அதிகாலை வீசிய காற்று மற்றும் கடுமையான மழை காரணமாக மரம் முறிந்து வீழ்ந்திருக்கலாம் என்று கூறப்படுகிறது.

இதன் காரணமாக கொழும்பு, ஐந்து லாம்பு சந்தியில் இருந்து பிரதான வீதி நோக்கி வாகனங்களோ பாதசாரிகளோ செல்ல முடியாத நிலை ஏற்பட்டிருந்தது.

அத்துடன், கொழும்பு - தும்முல்லை சந்தி உள்ளிட்ட பல இடங்களில் காலை நேரத்தில் பாதையில் நிரம்பியிருந்த வெள்ள நீர் காரணமாகவும் வாகன சாரதிகள் போக்குவரத்து சிக்கல்களை எதிர்கொள்ள நேரிட்டிருந்தது எனத் தெரிவிக்கப்படுகிறது.

## ஏறாவூர் இரட்டைப் படுகொலை சம்பவம்:

# உயிரிழந்த மதுசனுக்காக நீதி கோரி சக மாணவர் நேற்று ஆர்ப்பாட்டம்!










மட்டக்களப்பு, ஒக். 21

ஏறாவூர், சவுக்கடி இரட்டைப் படுகொலைச் சம்பவத்தில் உயிரிழந்த பி.மதுசன் என்ற மாணவனுக்கு நீதி கோரி பாடசாலை மாணவர்களால் மட்டக்களப்பில் நேற்றைய தினம் ஆர்ப்பாட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டுள்ளது.

கொலையுண்ட அந்த மாணவன் கல்வி கற்ற குடியிருப்பு கலைமகள் வித்தியாலயத்தில் இருந்து மாணவர்கள் மற்றும் பழைய மாணவர்கள், ஆசிரியர்களால் இந்த ஆர்ப்பாட்டம் முன்னெடுக்கப்பட்டுள்ளது.

பாடசாலையில் இருந்து பேரணியாக ஆரம்பமாகி பின்னர் மட்டக்களப்பு பிரதானவீதியில்உள்ளசிறுவர் நன்னடத்தை அலுவலகதுக்கு முன்பாக பெரிய ஆர்ப்பாட்டமாக முன்னெடுக்கப் பட்டது.

கொலையாளிகளை கைது செய்யக்கோரியும், மாணவர்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்தக் கோரியும் பல்வேறு கோரிக்கைகளை போராட்டத்தில் ஈடுபட்ட மாணவர்கள் முன்வைத்திருந்தனர்.

இதன்போது, மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எஸ். வியாழேந்திரன், பாடசாலையின் ஆசிரியர்கள், மாணவர்கள், பழைய மாணவர்கள் மற்றும் பொதுமக்கள் எனப் பலர் கலந்துகொண்டிருந்தனர்.

ஏறாவூர்சவுக்கடி படுகொலைச் சம்பவத்தில் மாணவன் மதுஷனுடன் அவரது தாயார் பீதாம்பரம் மதுவந்தி (வயது - 26) என்பவரும் கொல்லப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது. (க)



# இந்திய மீனவர்களின் விளக்கமறியல் நீடிப்பு!

யாழ்ப்பாணம், ஒக். 21

இலங்கைக் கடலில் அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டு, கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள 10 இந்திய மீனவர்களுக்குமான விளக்கமறியல் மீண்டும் நீடிக்கப்பட்டுள்ளது.

கடந்த 8 ஆம் திகதி காரைக் காலில் இருந்து மீன்பிடிக்கச் சென்ற 10 இந்திய மீனவர்களே இலங்கையின் நெடுந்தீவுக் கடற்பரப்பிற்குள் அத்துமீறி பிரவேசித்ததையடுத்து இலங்கை கடற்படையினரால் கைதுசெய்யப்பட்டு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டனர்.

இந்த நிலையில் விளக்க மறியலில் வைக்கப்பட்டிருந்த 10 இந்திய மீனவர்களையும் நேற்று இரண்டாவது முறையாக ஊர்காவற்றுறை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தினர்.

வழக்கை விசாரித்த நீதிமன்ற நீதிவான் எம்.எம். ரியாழ் மீனவர்களை எதிர்வரும் நவம்பர் மாதம் 2 ஆம் திகதி வரை விளக்க மறியலில் வைக்க உத்தரவிட்டார்.

(க)

# அரிசி ஆலை மாடிப் படியிலிருந்து தவறி விழுந்த குடும்பஸ்தர் சாவு!

மட்டக்களப்பு, ஒக். 21

மட்டக்களப்பு ஏறாவூர், ஐயங்கேணி அரிசி ஆலையொன்றில் வேலை செய்த தொழிலாளி ஒருவர் அதன் மாடிப்படியிலிருந்து சறுக்கி கீழே விழுந்து படுகாயமடைந்த நிலையில் சிகிச்சை பெற்று வந்தபோது சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

இவருக்கு சிகிச்சை அளித்த வைத்தியசாலை இதனை உறுதிப்படுத்தியுள்ளது. சந்திவெளி கிராம வாசியான செல்லத்தம்பி மனோகரன் (வயது 43) என்பவரே இவ்வாறு விபத்துக்குள்ளாகி உயிரிழந்துள்ளார்.

கடந்த 16 ஆம் திகதி மாலையில் மேற்படி அரிசி ஆலையில் உள்ள மாடிப் படியில் ஏறும் போது இந்த விபத்து நேர்ந்துள்ளது.

கீழே விழுந்த அவருக்கு தலைப்பகுதி பாதிக்கப்பட்ட நிலையில் மயக்கமடைந்திருந்த நிலையில் உடனடியாக ஏறாவூர் ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு



பின்னர் மட்டக்களப்பு போதனா வைத்தியசாலைக்கு மேலதிக சிகிச்சைக்காக மாற்றப்பட்டார்.

அங்கு சிகிச்சை பெற்று வந்த நிலையில் சிகிச்சை பலனின்றி மரணமடைந்து விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டது. (க)

## விண்கல் பூமிக்கு வந்த காட்சி:

# வீடியோ இருந்தால் தருமாறு கோரும் ஆர்தர் சி கிளார்க் மத்திய நிலையம்!

விண்கல் ஒன்று பூமிக்கு வந்த காட்சியை வீடியோ எடுத்தவர்கள் அதனை தமக்கு கையளிக்குமாறு ஆர்தர் சி கிளார்க் மத்திய நிலையம் கோரியுள்ளது.

கடந்த புதன் கிழமை இரவு நாட்டின் தென் பகுதியில் பெரிய வெளிச்ச தோற்றம் ஒன்று அவதானிக்கப்பட்டுள்ளது. பின்னர் ஆராய்ச்சியின்மூலம் அது விண்கல் என்று கூறப்பட்டது.

இந்த நிலையில் உண்மையான வீடியோ படம் கிடைத்த பின்னரே உறுதியான செய்தியைக் கூறமுடியும் என்று நிலையத்தின் ஆராய்ச்சியாளர் சரோஜ் குணசேகர தெரிவித்துள்ளார்.

இந்த விண்கல் எந்தத் திசையில் இருந்து வந்தது. எந்தளவு நேரம் வானத்தில் இருந்து எரியுண்டது என்ற விடயங்களை ஆராய்ச்சி செய்ய வேண்டியுள்ளது.

எனவே, மக்களில் யாராவது வீடியோ எடுத்திருந்தால் அதனை தமக்கு கையளிக்க வேண்டும் என ஆர்தர் சி கிளார்க் மத்திய நிலையம் கோரிக்கை விடுத்துள்ளது.

(மற்றொரு செய்தி 7 ஆம் பக்கத்தில்)

# கூட்டறிக்கைக்குப் பின்னால் மகாநாயக்கர்களே உள்ளனர்!

## அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஒக். 21

அஸ்கிரிய, மல்வத்த பீடங்களின் மகாநாயக்கர்களும், இரு பீடங்களின் காரக சங்க சபாவின் கூட்டுக் கூட்டத்தில் எடுக்கப்பட்ட முடிவுக்குப் பின்னால் இருக்கின்றனர் என அஸ்கிரிய பீடத்தின், செயலாளர் வண. மெதகம தம்மானந்த தேரர் தெரிவித்துள்ளார்.

புதிய அரசமைப்புக்கு மகாநாயக்கர்கள் எதிர்ப்புத் தெரிவிக்கவில்லை என்று பிரதமர் கூறியுள்ள நிலையில், நேற்று முன்தினம் இரவு கொழும்பு ஆங்கில ஊடகம் ஒன்றுக்குக் கருத்து வெளியிட்ட, அஸ்கிரிய பீடத்தின் செயலாளர் வண. மெதகம தம்மானந்த தேரர்



மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

புதிய அரசமைப்பு உருவாக்க முயற்சிகளை உடனடியாக கைவிட வேண்டும் என்று வெளியிடப்பட்ட கூட்டு அறிக்கைக்குப் பின்னால் அஸ்கிரிய, மல்வத்த பீடாதிபதிகள் உள்ளனர்.

தற்போதைய அரசமைப்பின் மீது இரு மகாநாயக்கர்களும் திருப்தி கொண்டுள்ளனர். புதியதோர் அரசமைப்புத் தேவையில்லை என்ற நிலைப்பாட்டைக் கொண்டிருக்கின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

அதேவேளை, முன்மொழியப்பட்டுள்ள அரசமைப்பு மாற்றங்களை நிராகரித்து, உறுதியான நிலைப்பாட்டை வெளிப்படுத்தியுள்ள மல்வத்த, அஸ்கிரிய பீடங்களின் காரக சங்க சபாவின் முடிவை, பாராட்டுகிறார் என ராமன்னய மகா நிக்காயாவின் காரக சங்க சபாவின் உறுப்பினரான பேராதனை ராஜபவனாராமய விகாரையின் பிரதம விகாராதிபதி வண. கெபிட்டியாகொட சிறி விமல நாயக்க தேரர் தெரிவித்துள்ளார்.

இரு பீடங்களினதும், இந்த முடிவு பொருத்தமானது என்றும் சரியான நேரத்தில் எடுக்கப்பட்டது என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

## இரத்தினபுரியில் அனர்த்த எச்சரிக்கை



கொழும்பு, ஒக். 21

தற்பொழுது பெய்து வரும் கடும் மழையின் காரணமாக இரத்தினபுரி மாவட்டத்தில் குருவிட்ட மற்றும் எஹலியகொட பிரதேச செயலக பிரிவுகளில் மண்சரிவு அனர்த்த எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளது .

கடந்த 24 மணித்தியாலங்களில் 100 மில்லிமீற்றர் மழைவீழ்ச்சி பதிவாகியுள்ளது. மழை தொடருமாயின் மண்சரிவு, சாய்வு இடிந்து விழுகை , பாறை விழுதல், நிலவெட்டுச் சாய்வு , தரைஉள்ளிறக்கம் போன்றவை ஏற்படக்கூடும்.

இதன்காரணமாக இந்த பகுதிகளில் உள்ள மக்கள் அவதானத்துடன் செயற்படுமாறு இடர் முகாமைத்துவ மத்திய நிலையத்தின் உதவிப் பணிப்பாளர் பிரதிப் கொடிப்பிலி தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நாட்டில் தற்பொழுது நிலவும் மழையுடன் கூடிய காலநிலை மேலும் அதிகரிக்கக்கூடும் என்று வளி மண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது. (க)

## கொழும்புத் துறைமுகத்துக்கு இந்தோனேசிய போர்க் கப்பல்!

கொழும்பு, ஒக். 21

இந்தோனேசியக் கடற்படையின் இலகு ரக பலநோக்குப் போர்க்கப்பல் ஒன்று கொழும்புத் துறைமுகத்துக்கு நல்லெண்ணப் பயணமாக வந்துள்ளது.

நேற்று முன்தினம் கொழும்புத் துறைமுகத்தை வந்தடைந்த இந்தக் கப்பல், மூன்று நாள்கள் இங்கு தரித்திருக்கும் என்று இலங்கைக் கடற்படை தெரிவித்துள்ளது.

கே.ஆர்.ஐ. பங் ரோமோ என்ற இந்தப் போர்க்கப்பலில், 107 இந்தோனேசியக் கடற்படை மாலுமிகள் பணியாற்றுகின்றனர். கொழும்புத் துறைமுகத்தின் தரித்து நிற்கும் போது, இலங்கை கடற்படையினருடன்



இணைந்து, இந்தோனேசியக் கடற்படையினர் பயிற்சிகளிலும் நிகழ்வுகளிலும் பங்கேற்க உள்ளனர்.

## தென்பகுதியில் வெடிப்புக்கு காரணம் சீனாவின் விண்வெளி நிலையமா?

கொழும்பு, ஒக். 21

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இலங்கையின் தென் பகுதியில் வானிலிருந்து மர்ம பொருள் விழுந்தமையால் பரபரப்பு நிலை ஏற்பட்டது.

இது குறித்து பல்வேறு விதமான கருத்துக்கள் வெளியாகி இருந்தன.

ஆனால், கடலில் பெரிய சத்தத்துடன் உடைந்து விழுந்தது சீனாவின் மியென்கொன் விண்வெளி நிலையம் எனச் சந்தேகம் வெளியிடப்பட்டுள்ளது.

இந்த நிலையம் 2017ஆம் ஆண்டு ஒக்ரோபர் மற்றும்



2018ஆம் ஆண்டு ஏப்ரல் மாதத்துக்கு இடைப்பட்ட காலப் பகுதியில் பூமியில் உடைந்து விழும் என சீன விண்வெளி அதிகாரிகளின் அமைப்பு அறிவிப்பு விடுத்தது.

இந்த நிலையில், இந்த விண்வெளி நிலையம் தமது கட்டுப்பாட்டை இழந்துள்ளது என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

8 தொன் நிறையுடைய விண்வெளி நிலையம் பூமிக்கு வரும் போது அது 100 கிலோ துண்டுகளாகும் என அவர்கள் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், அது உடைந்து விழும் இடம் தொடர்பில் தெளிவில்லை என சீன விண் வெளி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

இலங்கையின் தெற்கு கடலில் உடைந்து விழுந்தது சீனாவின் விண்வெளி நிலையம் என சீனா இன்னமும் உறுதி செய்யாத நிலையில் அது விண்கல் என சிலர் கூறி வருகின்றனர்.

## சூரியவெவ பகுதியில் அரசுக்கு எதிராக மக்கள் உண்ணாவிரதப் போராட்டம்!

கொழும்பு, ஒக். 21

அம்பாந்தோட்டை சூரியவெவ பிரதேசத்தில் ஆரம்பிக்கப்பட்ட சாகும் வரையிலான உண்ணாவிரதப் போராட்டம் மூன்றாவது நாளாக நேற்றைய தினமும் தொடர்ந்தது.

சூரியவெவ நபடகஹவெவ பிரதேசத்தில் பொது மக்களால் இந்தப் போராட்டம் கடந்த 17ஆம் திகதி ஆரம்பிக்கப்பட்டது.

அதிவேக நெடுஞ்சாலையில் மேற்கொள்ளப்படுகின்ற விரிவாக்கல் பணிகளால் அரசால் கைப்பற்றப் பட்ட காணிகளின் உரிமையாளர்கள் ஐவர் இந்த உண்ணாவிரதத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

தங்களது காணிகளுக்கான நட்டஈடு அல்லது வேறு மாற்றுக் காணிகளை வழங்க அரசாங்கம் தவறி விட்டது எனப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்துள்ளனர்.

இதேவேளை, இந்தப் போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்து 200 இற்கும் மேற்பட்ட பிரதேசவாசிகள் இன்றைய தினம் போராட்டம் நடத்தவுள்ளனர் என அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

வடமராட்சி வடக்குப் பிரதேச

# கலாசாரப் பேரவையில் இணைந்துகொள்ளலாம்

வடமராட்சி வடக்குப் பிரதேச கலாசாரப் பேரவைக்கு அங்கத்தவர்களை இணைத்துக்கொள்ள நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. வடமராட்சி வடக்கு, பருத்தித்துறை ஆகிய பிரதேசங்களுக்குட்பட்ட கலைஞர்கள், எழுத்தாளர்கள், ஆர்வலர்கள் பேரவையில் அங்கத்தவர்களாக இணைந்து கொள்ள முடியும் எனவும் அறிவிக்கப்பட்டுள்ளது.

அங்கத்தவர்களாக இணைந்துகொள்ள விரும்பும் ஆர்வலர்கள் வடமராட்சி வடக்குப் பிரதேச செயலக கலாசாரக் கிளையில் விண்ணப்பப் படிவங்களைப் பெற்று அவற்றைப் பூரணப்படுத்தி சந்தாப்பணத்துடன் எதிர்வரும் 25 ஆம் திகதி புதன்கிழமைக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்படுகிறது. (இ)

# வவுனியா இளைஞர், யுவதிகளுடன் பிரதமர் நாடாளுமன்றில் சந்திப்பு!

கொழும்பு, ஒக். 21

வவுனியாவில் உள்ள அன்புக்கும் நட்புக்குமான வலையமைப்பைச் சேர்ந்த இளைஞர், யுவதிகளுக்கும் பிரதமருக்கும் இடையிலான சந்திப்பொன்று நேற்றுமுன்தினம் நாடாளுமன்றத்தில் இடம்பெற்றது.

இதன்போது, புதிதாக வர உள்ள அரசமைப்பில் உள்ளடக்கப்பட வேண்டிய விடயங்கள் தொடர்பான கோரிக்கைகள் உள்ளடங்கிய அறிக்கை புத்தகம் ஒன்றை பிரதமரிடம் அந்தக் குழு கையளித்துள்ளது.

மேலும், வடக்கு, கிழக்கு பகுதிகளில் இளைஞர்கள், யுவதிகள் எதிர்நோக்கும் பிரச்சினை மற்றும் பொதுமக்களின் காணிகளை படையினர் கையகப்படுத்தி வைத்துள்ளமை, அதனை விடுவிக்க அரசு உடனடியாக நடவடிக்கை எடுக்கவேண்டும் மற்றும் காணாமல் ஆக்கப்பட்டோரின் விவகாரம், அரசியல் கைதிகளின் விடுதலை, சிறுபான்மை மக்களின் சமத்துவ உரிமைகள் பேணப்பட வேண்டிய அவசியம் குறித்த கோரிக்கைகளை முன்வைத்து இளைஞர், யுவதிகள் பிரதமருடன் உரையாடுவதற்கு சந்தர்ப்பம் கோரியிருந்தனர்.

எனினும், அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீட சங்க சபையின் அறிக்கையொன்று ஊடகங்களில் வெளியிட்டுள்ள முறை தொடர்பில் பிரதமர் ரணில் ஊடகங்கள் மீது அதிருப்தியைத் தெரிவித்து அங்கிருந்து வெளியேறியுள்ளார்.

இதனால், இளைஞர், யுவதிகள் எல்லோருக்கும் உரையாட



உரையாட சந்தர்ப்பம் வழங்காமையால் அதிருப்தி

சந்தர்ப்பம் வழங்கப்படவில்லை.

மாறாக, அன்புக்கும் நட்புக்குமான அமைப்பின் தலைவர் இரவீந்திராவுக்கு மாத்திரம் ஒரு நிமிடம் பேச அனுமதி வழங்கப்பட்டது எனவும், தாம் ஏமாற்றமடைந்தோம் எனவும் இளைஞர் யுவதிகள் கவலை வெளியிட்டுள்ளனர்.

## தெய்வீக இசையை நல்லூரில் ரசிக்கலாம்

நல்லூர், ஒக். 21

கந்தசஷ்டி விரதத்தை முன்னிட்டு நல்லூர் கந்தப் பெருமான் வெளிவீதி உலா வரும் மாலை வேளையில் யாழ்ப்பாணம் சின்மயா மிஷனால் தெய்வீக இசை நிகழ்த்தப்படவுள்ளது என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இசை ஆர்வலர்கள் மற்றும் மாணவர்களைக் கலந்துகொண்டு பயனடையுமாறு சின்மயா மிஷன் அறிவித்துள்ளது. (இ)

## ஆலய நிர்வாகத் தெரிவு; இன்று ஒன்றுகூடல்

கொக்குவில், ஒக். 21

கொக்குவில் கிழக்கு கிருபாகர சுப்பிரமணிய கோயில் நிர்வாகத் தெரிவுக்கான ஒன்றுகூடல் இன்று சனிக்கிழமை காலை 9 மணிக்கு ஆலய முன்றிலில் நடைபெற உள்ளது.

இந்த ஒன்றுகூடலில் கடந்த ஒகஸ்ட் மாதம் 23 ஆம் திகதி தெரிவு செய்யப்பட்ட நிர்வாக சபையின் உறுப்பினர்கள் ஆறுபேர் செப்ரெம்பர் மாதம் 7 ஆம் திகதி விலகுகின்றனர் என்று அறிவித்தனர். அதன் காரணமாகப் புதிய நிர்வாகம் தெரிவு செய்யப்படவுள்ளது என்று நல்லூர் பிரதேச செயலர் அறிவித்துள்ளார். (இ)

## சமாதான நீதவானாக சத்தியப்பிரமாணம்



காரைநகர் மொந்திப் புலத்தைச் சேர்ந்த தர்மலிங்கம் முரளிரூபன் அண்மையில யாழ். மாவட்ட நீதிமன்ற நீதிபதி ஜெ.கஜநிதிபாலன் முன்னிலையில் யாழ். மாவட்டத்துக்கான சமாதான நீதவானாகச் சத்தியப்பிரமாணம் செய்து கொண்டார்.

இவர் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் அலுவலகத்தில் பணியாற்றி வருகின்றமையுடன் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் வட்டுக் கோட்டைத் தொகுதியின் முன்னாள் செயலாளரும், காரைநகர் கிளையின் செயலாளராகவும் செயற்பட்டு வருகின்றார். 'நல்ல நண்பர்' விளையாட்டுக் கழகத்தின் உறுப்பினராகவும் உள்ளார்.

வடமாகாண சபை 2013 ஆம் ஆண்டு செயற்படத் தொடங்கியதில் இருந்து தண்ணீர் பற்றாக்குறையாக உள்ள கிராமங்களான பிட்டியெல்லை, ஊரி, பாலாவோடை போன்ற பின்தங்கிய மக்கள் வசிக்கும் பகுதிகளுக்கு நேரடியாக நாளாந்தம் 8 ஆயிரம் லீற்றர் இலவசத் தண்ணீரைக் கடந்த 4 வருடங்களாகத் தந்துதவுவதில் இவரின் பங்கு அளப்பரியது. வறுமைக்கோட்டின் கீழ் வாழும் குடும்பங்களுக்கு வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கான தையல் இயந்திரங்கள், கோழிக்கூடுகள், விளையாட்டுக் கழகங்களுக்கான விளையாட்டு உபகரணங்கள், வீதி விளக்குகள் மற்றும் மாணவர்களுக்கு சைக்கிள்கள் போன்றவற்றை மாகாண சபை உறுப்பினர்களின் நிதி ஒதுக்கீட்டின் மூலம் பெற்று வழங்கிவரும் இவர் ஒரு சமூகத் தொண்டனாகவும் செயற்பட்டு வருகின்றார்.

இவர் யாழ். பல்கலைக்கழகத்தில் நூலக விஞ்ஞான மாணி டிப்ளோமா கற்கை நெறியைப் பூர்த்தி செய்துள்ளார். பேராதனைப் பல்கலைக்கழக வெளிவாரிப் பட்டதாரியும் ஆவார். (இ)

## நாளை மின்தடை

யாழ்ப்பாணம், ஒக். 21

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை -

**யாழ். பிரதேசத்தில்** காலை 8.30 மணி முதல் மாலை 5 மணிவரை ö£õUPøn, FöµÊ, E¸®¤µõ´ QÇUS, ÷£õ°mi, Pµ¢uß -

**கிளிநொச்சி பிரதேசத்தில்** காலை 8.30 மணிமுதல் மாலை 5.30 மணிவரை AÔÂ¯À|Pº, NAITA QÎö|õa] &

**வவுனியா பிரதேசத்தில்** காலை 5 மணிமுதல் மாலை 5.30 மணிவரை £éõº Ãv, ªÀ Ãv, uº©¼[P® Ãv, \¢øu _ØÖÁmh Ãv, C¾¨ø£¯i, £mhõoa `›¼¸¢x ö|ÐUSÍ® FhõP Cµõ÷á¢ vµSÍ® Áøµ, J÷©Põ ø»ß, Aµ\ß A›] Bø», ]¯õ® A›] Bø», ÿµ[P® A›] Bø», öu´÷Á¢vµ® A›] Bø», _¯ß A›] Bø», AìÂ A›] Bø», ãÁß A›] Bø», uõsiUSÍzv¼¸¢x ]ßÚÁ»¯[Pmk Áøµ, ©ÓUPõÓ®£øÍ°¼¸¢x ©o¦µ® Áøµ, •ÒÎUSÍ®, R›_mhõß, ö|õ÷uºs£õ®, B]›¯º öuõÈ~m£UPÀ¿›-

**மன்னார் பிரதேசத்தில்** காலை 8 மணி முதல் மாலை 5.30 மணிவரை ©ßÚõº |Pµ®, £ÒÎ•øÚ, ]Ö|õÁØSÍ®, |õPuõÌÄ, v¸U÷PwìÁµ®, ©õ¢øu ÷©ØS, B÷Á©›¯õ Iì öuõÈØ\õø», ©ßÚõº C»[øPz öuõø»zöuõhº¦ {ø»¯®, ©ßÚõº }º¨£õ\Úz vønUPÍ®, ©ßÚõº ©õÁmhö\¯»P® ஆகிய இடங்களில் மின்விநியோகம் தடைப்பட்டிருக்கும் என்று மின்பொறியியலாளர் எம்.துவாரகன் அறிவித்துள்ளார். (இ)

## தினசரி ராசி பலன் 21.10.2017

2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஐப்பசித் திங்கள் 5 ஆம் நாள் சனிக்கிழமை. துவிதியைத் திதி பி.இ. 3.00 மணிவரை. பின்னர் திரிதியை. நட்சத்திரம் சுவாதி பகல் 10.17 மணிவரை. பின்னர் விசாகம். அமிர்தசித்தயோகம் முழுவதும்.

**ராகுகாலம்** - *காலை 8.57 மணிமுதல் 10.26 மணிவரை.*

**சுபநேரம்** - *மாலை 3.03 மணிமுதல் 4.33 மணிவரை.*

**திவசம் செய்ய வேண்டிய திதி** - *ஐப்பசி மாத துவிதியை.*

**பிறந்த நட்சத்திர வழிபாடு:** *சுவாதி.*

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம்:** மத்திமமான நாள். பொருளாதாரம் சுமாராக இருக்கும். முன்கோபம், உடல்நலக் கோளாறு வந்து நீங்கும். உத்தியோகத்தில் பொறுப்புகள் அதிகரிக்கும். சேமிப்புகள் கரையும்.

**ரிஷபம்:** மேன்மையான நாள். புதுத்திட்டங்கள் நிறைவேறும். எதிர்பார்த்த பணம் வந்துசேரும். வியாபாரத்தில் இரட்டிப்பு லாபம் உண்டாகும். உத்தியோகத்தில் உழைப்பால் உயர்வடைவார்கள்.

**மிதுனம்:** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. பணப்புழக்கம் அதிகரிக்கும். இங்கிதமாகப் பேசிப் பல காரியங்களைச் சாதிப்பார்கள். வியாபாரத்தில் தேங்கிக் கிடந்த சரக்குகள் விற்பனையாகும்.

**கடகம்:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். பிள்ளைகளால் அலைச்சல் ஏற்படலாம். செலவுகள் அதிகமாகும். வியாபாரத்தில் பாக்கிகளை போராடி வசூலிப்பார்கள்.

**சிம்மம்:** மேன்மையான நாள். பொருளாதாரம் ஏற்றமடையும். வியாபாரத்தில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும். சிலருக்கு வெளிநாட்டு நிறுவனத்தில் வேலை கிடைக்கும். சகோதர உறவு பலப்படும்.

**கன்னி:** மகிழ்ச்சியான நாள். வருமானம் வளமாக இருக்கும். குடும்பத்தில் மகிழ்ச்சி அதிகரிக்கும். நீண்டகாலம் காத்திருந்த சகோதரரைக் கண்டு மகிழ்வார்கள். வெளிநாட்டு வேலைவாய்ப்புக் கிடைக்கும்.

**துலாம்:** அதிஷ்டமான நாள். பணம் பல வழிகளாலும் வந்துசேரும். உத்தியோக உயர்வுகள் வலியக் கிடைக்கும். பூர்வீக சொத்து இழுபறியிலிருந்து கைக்கு வந்து சேரும். அதிஷ்டலாபச் சீட்டுகளால் லாபம் வரும்.

**விருச்சிகம்:** சலனம் மிகுந்த நாள். மனதில் ஒருவித யோசனை கவலை வந்து நீங்கும். பணவரவு குறையும். வியாபாரம் பெரும் நட்டமடையும். தொழிலில் போட்டி, பொறாமைகள் அதிகரிப்பால் கவலை அதிகரிக்கும்.

**தனுசு:** உயர்வான நாள். வருமானம் உயர்வடையும். வியாபாரம் நன்கு முன்னேற்றப் பாதையில் செல்லும். உத்தியோகத்தர்கள் திறமைக்கேற்ப உயர்வுகளைப் பெறுவார்கள்.

**மகரம்:** விருத்தியான நாள். பணப்புழக்கம் சரளமாக இருக்கும். எதிர்பார்த்த வேலைகள் தடையின்றி முடியும். உத்தியோகத்தில் சக ஊழியர்களுடன் இணக்கம் காணப்படும்.

**கும்பம்:** நன்மையான நாள். வருமானம் வளமாக இருக்கும். புதுத் தொழில் தொடங்கும் முயற்சி வெற்றியடையும். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையைப் பெறுவார்கள்.

**மீனம்:** குழப்பமான நாள். மனதில் தடுமாற்றம், சிந்தனை வந்து செல்லும் தனவரவு குறையும். உடல் நலம் பாதிப்படைந்து மருத்துவச் செலவுகள் உண்டாகும். பெண்களுக்குக் குடும்பப் பொறுப்புக்கூடும்.

சந்திராட்டமநாள்: பூரட்டாதி 4 ஆம் கால், உத்தரட்டாதி, ரேவதி ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் இன்று சுபகருமங்களைத் தவிர்க்கவும்.

# துன்புற்றவர்களை நாடிச் சென்று துயர் துடைத்தவர் ஆயர் பெருமகனார்



அருட்திரு. தமிழ்நேசன் அடிகளார்

மன்னார் மறைமாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் மேதகு இராயப்பு யோசேப்பு ஆண்டகை அவர்கள் ஆயர் பணியில் 25 வருடங்களை நிறைவுசெய்து வெள்ளிவிழாக் காண்கிறார். இவர் மன்னார் மறைமாவட்டத்தின் இரண்டாவது ஆயராக 1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி திருநிலைப்படுத்தப்பட்டார். இந்த ஆண்டு (2017) ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி இருபத்தைந்து பொன்னான வருடங்களை நிறைவு செய்கின்றார்.

### வாழ்க்கைக் குறிப்பு

ஆயர் யோசேப்பு ஆண்டகை 16.04.1940ஆம் ஆண்டு யாழ்ப்பாணத்தில் உள்ள நெடுந்தீவில் பிறந்தார். நெடுந்தீவு றோ.க. பாடசாலை, மன்னார் முருங்கன் மகா வித்தியாலயம், யாழ். புனித பத்திரிசியார் கல்லூரி ஆகியவற்றில் தனது பாடசாலைக் கல்வியைக் கற்றார். கண்டி தேசிய குருமடம், திருச்சி (இந்தியா) புனித பவுல் குருமடம் ஆகியவற்றில் குருத்துவக் கல்வியைக் கற்று 13.12.1967ஆம் ஆண்டு அன்றைய யாழ் ஆயர் மேதகு எமிலியானுஸ்பிள்ளை ஆண்டகை யாழ். மரியன்னை பேரால யத்தில் குருவாகத் திருநிலைப்படுத்தப் பட்டார்.

குருவாகிய இவர், 1968 - 1971வரை உதவிப் பங்குத்தந்தையாக உயிலங்குளம் முருங்கன், இளவாலை சேந்தாங்குளம் ஆகியபங்குகளில்பணியாற்றினார். 1971 - 1975 வரை உரும்பிராய் சுன்னாகம் பங்கின் பங்குத்தந்தையாகவும், 1975 - 1980 வரை பெரிய விளான் பண்டத்தரிப்பு பங்கின் பங்குத் தந்தையாகவும் பணியாற்றினார். 1981 - 1985 வரை உரோமைப் பல்கலைக் கழகங்களில் உயர்கல்விக்கான பல்வேறு கற்கைநெறிகளை மேற்கொண்டு ஈற்றில் திருச்சபைச் சட்டத்துறையில் கலாநிதிப்பட்டத்தைப்பெற்றுக்கொண்டார்.

நாடு திரும்பிய இவர் 1985 - 1992 வரை யாழ்ப்பாணம் புனித திருமுழுக்கு யோவான் ஆலயப்பங்குத்தந்தையாகப் பணியாற்றினார். அதேவேளை யாழ். கொழும்புத்துறை புனித பிரான்சிஸ்கு சவேரியார் உயர் குருத்துவக் கல்லூரியில்திருச்சபைச்சட்ட விரிவுரையாளராகவும், யாழ் மறைமாவட்ட திருமண நீதி மன்றத்தில் சட்டக் காவலராகவும் பணியாற்றினார்.

1992ஆம் ஆண்டு ஜூலை மாதம் 6ஆம் திகதி அன்றைய திருத்தந்தை இரண்டாம் அருள் சின்னப்பர் இவரை மன்னார் மறைமாவட்டத்தின் ஆயராக நியமித்தார். 1992ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 20ஆம் திகதி ஆயர் தோமஸ் சௌந்தரநாயகம் ஆண்டகை அவர்கள் இலங்கையின் ஏனைய ஆயர்கள் புடைசூழ மடுத்திருப்பதியில் இவரை ஆயராகத் திருப்பொழிவு செய்தார்.

### மறைமாவட்டம் சார்ந்த பணிகளை செவ்வனே செய்தார்

ஒரு மறைமாவட்ட ஆயர் என்றவகையில் ஆயர் இரா. யோசேப்பு ஆண்டகை அவர்கள் தன்னிடம் ஒப்படைக்கப்பட்ட மன்னார் மறைமாவட்டம் மட்டிலான தனது சமயக் கடமைகளைச் செவ்வனே நிறைவேற்றினார். ஒரு மறைமாவட்டத்தில் ஓர் ஆயர் செய்யவேண்டிய பணிகளை அவர் முழுமையான உற்சாகத்தோடு செய்தார். திருப்பலி, திருவிழாக்கள், பங்குத்தரிசிப்புக்கள், ஆலோசனைகள், கூட்டங்கள், மாநாடுகள், ஆலய மற்றும் பங்குமனைக் கட்டுமானங்கள், ஏழைகளுக்கான உதவிகள் என அவர் தன் கடமைகளைச் சிறப்பாகச் செய்தார்.

இவர் மன்னார் மறைமாவட்ட ஆயராகப் பொறுப்பேற்ற பின்னர் மறைமாவட்டத்தை ஆன்மீக, ஒழுக்க, சமூக, பொருளாதாரத் துறைகளில் முன்னேற்ற பல்வேறு புதிய முயற்சிகளை முன்னெடுத்தார். ஒவ்வோர் ஆண்டும் ஒவ்வொரு கருப்பொருளை அடிப்படையாகக்கொண்டுமறைமாவட்ட மேய்ப்புப்பணி மாநாடுகளைக் கூட்டி குருக்கள், துறவியர், பொதுநிலையினர் என அனைத்துத் தரப்பினரின் ஆலோசனைகளைப் பெற்று, திட்டங்களைத் தீட்டி அவற்றை நடைமுறைப்படுத்த முயற்சித்தார். இவருடைய காலத்தில் மன்னார் மறைமாவட்டத்தில் பல புதிய பங்குகள் உருவாக்கப்பட்டன. இவர் மறைமாவட்டத்தைப் பொறுப்பெடுத்த போது 15 பங்குகள் இருந்தன. இவர் ஓய்வுபெறும்போது 38 பங்குகளாக அவை அதிகரித்திருந்தன. புதிய பங்குகளின் உருவாக்கத்தால் மக்கள் மட்டிலான குருக்களின் அக்கறை அதிகரித்தது. மக்களின் ஆன்மீக மற்றும் சமூகத் தேவைகள் இயன்றவரை தீர்க்கப்பட்டன.

பங்குப் பணிகளோடு ஆணைக் குழுக்களையும் குருக்கள் நிர்வகித்து வந்த நிலையில் இவர் ஒவ்வோர் ஆணைக்குழுவுக்கும் தனியாகக் குருக்களை நியமித்து, தேவையான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுத்து, அந்த ஆணைக்குழுக்கள் சிறப்பாகச் செயற்பட வழிகோலினார். யுத்த சூழ்நிலையில் பல ஆலயங்கள், பங்கு மனைகள் அழிக்கப்பட்டன அல்லது சேதத்திற்கு உள்ளாக்கப்பட்டன. பல ஆலயங்கள் மற்றும் பங்குமனைகள் கால நீட்சியினால் பழுதடைந்த நிலையில் இருந்தன. இவ்வாறான நிலையில் பல்வேறு தரப்பிலிருந்து உதவிகளைப் பெற்று புதிய ஆலயங்களை, புதிய பங்குமனைகளைக் கட்டி எழுப்ப இவர் தனது முழுமையான ஒத்துழைப்பை வழங்கினார்.

### முதியோர் இல்லம்

பம்பைமடுவில் அன்னை திரேசாவின் அருட்சகோதரிகளை வரவழைத்து முதியோர் மற்றும் கைவிடப்பட்டவர்களைப் பராமரிக்க ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். முருங்கனில் டொன் பொஸ்கோ குருக்களை வரவழைத்து இளைஞர் யுவதிகளுக்கான தொழிற் பயிற்சிகளை வழங்க ஆவன செய்தார். அடம்பனில் இயேசு சபைக் குருக்களை வரவழைத்து அவர்களின் பணி மறைமாவட்டத்திற்கு கிடைக்க வழிசெய்தார். இந்தியாவில் இருந்து பல புதிய பெண் துறவற சபைகளை மன்னார் மறைமாவட்டத்திற்கு வரவழைத்து இந்திய அருட்சகோதரிகளின் பணியை மக்கள் பெறவழிவகுத்தார். புதிதாக உருவாக்கப்பட்ட பங்குகளில் புதிய கன்னியர் மடங்களையும் ஏற்படுத்திமக்களை ஆன்மீகத்திலும், ஒழுக்கத்திலும் வளர்க்கப் பாடுபட்டார். மடுத்திருப்பதியில் தியான இல்லம் ஒன்றைக் கட்டியெழுப்பி அதன் மூலம் மன்னார்மறைமாவட்டத்தைச்சேர்ந்தவர்களும் ஏனைய மறைமாவட்டத்தவர்களும் பயன்பெற வழிகோலினார்.

குருக்கள் துறவியர் நலனில் அக்கறையோடு செயற்பட்டார். பொதுநிலையினரின் உருவாக்கத்தில் அதிக கரிசனை எடுத்தார். திருச்சபையின் திருவழிபாடுகளை திருச்சபை ஒழுங்கு விதிகளுக்கு ஏற்ப நடத்தவேண்டும் என்பதை வலியுறுத்தினார். இவ்வாறு ஓர் ஆயர் என்ற வகையில் தனது மறைமாவட்டம் சார்ந்த கடமைகளில் அவர் அதிக ஈடுபாட்டோடு, அர்ப்பணிப்போடு உழைத்தார். இதைவிட இலங்கை ஆயர்பேரவையில்பல்வேறுகாலகட்டங்களில் பல்வேறு பொறுப்புக்களை ஏற்றுச் சிறப்பாகச் செய்தார்.

### துன்புற்ற மக்களின் துயர் துடைத்தார்

ஒரு கொடூரமான போர்ச் சூழலில் பல்வேறு நிலைகளில் துன்பங்களைச் சுமந்துநின்ற மக்களின் துயரங்களைத் துடைக்க அவர் அரும்பாடுபட்டார்.

சிறைகளில்வாடும் கைதிகளை அவர் அடிக்கடி சென்று பார்வையிட்டு அவர்களின் விடுதலைக்காகக் குரல் கொடுத்தார். அவர்களோடு தனிப்பட்ட தொடர்பாடல்களை வைத்திருந்தார். காணாமலாக்கப்பட்டவர்கள் சார்பாக நின்று அவர்களைக் கண்டுபிடிக்க அல்லது அவர்களின் கதியை வெளிக்கொணர ஓயாது உழைத்தார். யுத்தத்தால் தமது இல்லிடங்களை இழந்தவர்களுக்கு வீடுகளைக் கட்டிக்கொடுக்க முயற்சிகளை மேற்கொண்டார். முள்ளிக் குளத்தில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும், விடத்தல்தீவில் இருந்து இடம்பெயர்ந்த மக்களுக்கும் அவர் காணிகளை, வீடுகளை வழங்கியமை இதற்கு உதாரணமாகும். யுத்தத்தால் தொழில் வாய்ப்புக்களை இழந்தவர்கள் தொழில்களை ஆரம்பிக்க வேண்டிய உதவிகளைச் செய்தார்.

யுத்தத்தால் அங்கவீனர்களாக்கப் பட்டவர்களுக்கு வாழ்வுதய நிறுவனத்தின் உதவிக்கரம் பிரிவு மூலம் உதவிகளைப் புரிந்தார். வவுனியா பம்பைமடுவில் அமைந்துள்ள வரோட் நிறுவனத்தின் ஊடாகவும் இவர்களின் புனர்வாழ்வுக்காகப் பாடுபட்டார். யுத்தத்தாலும், சுனாமியாலும் பெற்றோரை இழந்து ஆதரவற்று நின்ற பெண் சிறார்களுக்கு வவுனியாவில் சலேசிய அருட்சகோதரிகளின் பராமரிப்பில் ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். அதேபோல் மன்னாரிலும் ஆண் சிறார்களுக்கான ஓர் இல்லத்தை ஆரம்பித்தார். இவ்வாறு இன்னும் பல துயர்துடைப்புப் பணிகளை முன்னெடுத்தார்.

தனது அன்புக்குரிய குருக்களான அருட்திரு. ஜிம்பிறவுன் அடிகளார் 2006ஆம் ஆண்டு யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் காணாமலாக்கச் செய்யப்பட்டபோதும் அருட்திரு. நீக்கிலாப்பிள்ளை பாக்கியறஞ்சித் அடிகளார் 2007ஆம் ஆண்டு வன்னியில் ஆழ ஊடுருவும்படையினரின் கண்ணிவெடித் தாக்குதலில் கொல்லப்பட்டபோதும் ஆயர் அவர்கள் ஆழ்ந்த துயரமடைந்தார்.

### தாக்குதல் அனர்த்தங்களின் போது களத்திற்கு விரைந்தார்

விமானக் குண்டுத்தாக்குதல்கள், எறிகணைத்தாக்குதல், கண்ணிவெடித் தாக்குதல்கள் என எப்படியான அனர்த்தங்கள் இடம்பெற்றாலும் பாதிக்கப்பட்ட மக்களைக் காப்பாற்ற முதல் ஆளாகக் களத்திற்கு விரைந்து சென்றார். காயப்பட்டவர்களை வைத்தியசாலைக்கு கொண்டுசென்றார். இழப்பின் சோகத்திலும், அச்சத்திலும், ஆபத்திலும் இருந்த மக்களுக்கு தனது பிரசன்னத்தால் ஆறுதலைக் கொடுத்தார். உண்மையான களநிலைவரங்களை அரசுக்கு சாட்சிபகர்ந்தார்.

> குரலற்ற மக்களின் குரலாக ஒலித்த ஆயர் மேதகு இராயப்பு யோசேப் ஆண்டகை நேற்று வெள்ளிக்கிழமையுடன் ஆயர் பணியில் 25 வருடங்கள் பூர்த்தி.

2006ஆம் ஆண்டு ஜூலை மாதம் 17ஆம் திகதி பேசாலையில் கடற்படையினருக்கு எதிராக இடம்பெற்ற தாக்குதலின்போது இரண்டாயிரத்திற்கும் அதிகமான மக்கள் பேசாலை புனித வெற்றிநாயகி அன்னை ஆலயத்தில் அடைக்கலம் புகுந்திருந்தனர். மிகுந்தகோபாவேசத்தோடு ஆலயத்தை நோக்கி துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக்கொண்டு கடற் படையினர் செல்கின்றசெய்தியை அறிந்துகொண்ட ஆயர் வீதியில் யாரும் இல்லாத, ஆபத்தான அந்தச் சூழ்நிலையில் அன்றைய மன்னார்பிரதேசசெயலாளர் திருமதி ஸ்ரான்லி டிமெல் சகிதம் மன்னாரில் இருந்து பேசாலைக்கு விரைந்து சென்று நிலைமையைக் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தார். ஆலயத்திற்குள் நடத்தப்பட்ட கைக்குண்டுத் தாக்குதலில் ஒரு வயோதிப மாது உயிரிழந்தமை மற்றும் ஆலயத்திற்குள் மேற்கொள்ளப்பட்ட துப்பாக்கிச் சூடுகள் தொடர்பாகத் திருத்தந்தைக்குத் தகவல்களை அனுப்பினார்.



(தொடரும்...)

தொகுப்பு: பொன்.வேணு கிருஷ்ணா




**வடகொரியாவுடனான வர்த்தகத்துக்கு எதிராக ஆக்ரோஷமான பொருளாதாரத் தடைகளை ட்ரம்ப் அறிவிக்கிறார்**

ஐ.நா. பொதுச் சபையைப் பாசிச வாத வெறிப் பேச்சுக்கான தளமாகப் பயன்படுத்தி அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் வடகொரியாவை ''முற்றிலுமாக அழிக்கப்போவதாக'' அச்சுறுத்தியமைக்கு இரண்டு நாள்களுக்குப் பின்னர் அண்மையில், பியோங்யாங் குடன் வர்த்தகத் தொடர்புடைய நிதி உறவுகளை வைத்திருக்கின்றது எனக் குற்றஞ்சாட்டிய நாடுகள் மற்றும் நிறுவனங்கள் மீதான தண்டனைக்குரிய அபராதங்களுக்கு அச்சுறுத்துகின்ற புதிய பொருளாதாரத் தடைகளை வெளியிட்டார்.

வடகொரியாவுடனான வர்த்தகம் தொடர்பான சர்வதேச நிதியளிப்பை நிறுத்துவதற்கு ட்ரம்ப் அதிரடியான நிர்வாக உத்தரவு ஒன்றை வெளியிட்டார். வெளிநாட்டு வங்கிகளையும், நிதி நிறுவனங்களையும் இலக்கு வைக்கின்றமை மூலமாக, இந்தத் தடையை மீறும் நிறுவனங்களைக் கொண்டிருக்கும் எந்தவொரு நாட்டுக்கும் எதிராகப் பதிலடி கொடுக்கும் அச்சுறுத்தலின் பின்னணியில், இந்த உத்தரவு வடகொரியாவுடன் வர்த்தகம் செய்வதற்கு அமெரிக்க வற்புறுத்தலிலான நிஜமான தொருதடையாணையை விதிக்கின்றது.

**வடகொரிய வர்த்தகத்தில் 90 சதவீதத்தைக் கொண்டிருக்கிறது எனக் கூறப்படும் சீனா மீது தான் முக்கியமாக தெளிவான இலக்கு வைப்பதாக ட்ரம்ப் நிர்வாகத்தின் நகர்வு இருக்கின்ற போதும், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய சக்திகள் உள்ளிட்ட பிற நாடுகளையும் அது அச்சுறுத்தும்**

இந்த அண்மைய ஒருதலைப்பட்சமான அமெரிக்கப் பொருளாதாரத் தடைகளின் அதிகரிப்பு, இந்த மாதம் ஐ.நா. பாதுகாப்புச் சபை மூலமாக அமெரிக்கா ஏற்கனவே அழுத்தம் கொடுத்திருந்த தண்டனைக்குரிய தடைகளை விடவும் வொஷிங்டன்



தனது சொந்த சூறையாடும் காரணங்களை முன்னிட்டுக் கொரிய தீபகற்பத்தின் மீது அதிகரித்துள்ள பதற்றங்களை மேலும் அதிகரிக்கவும், விரிவுபடுத்தவும் செய்கின்றது.



வடகொரிய வர்த்தகத்தில் 90 சதவிகிதத்தைக் கொண்டிருக்கிறது எனக் கூறப்படும் சீனா மீது தான் முக்கியமாக தெளிவான இலக்கு வைப்பதாக ட்ரம்ப் நிர்வாகத்தின் நகர்வு இருக்கின்ற போதும், ரஷ்யா மற்றும் ஐரோப்பிய சக்திகள் உள்ளிட்ட பிற நாடுகளையும் அது அச்சுறுத்தும்.

''வடகொரியாவின் ஆணுஆயுதத் திட்டம் நமது உலகின் சமாதானத்துக்கும் பாதுகாப்புக்கும் கடுமையானதோர் அச்சுறுத்தலாக உள்ளது. அதிலும் மற்றவர்கள் இந்தக் குற்றவியல்தனமான, போக்கிரித்தனமான ஆட்சிக்கு நிதிரீதியாக ஆதரவளிக்கின்றமை என்பது ஒத்துக்கொள்ள முடியாதது'', என்றும் ''வெளிநாட்டு வங்கிகள் தெளிவானதொரு தெரிவை எதிர்கொள்ளும்: அமெரிக்காவுடன் வணிகம் செய்யுங்கள் அல்லது சட்டவிரோத வடகொரிய ஆட்சியுடனான வர்த்தகத்தை எளிதாக்கிக் கொள்ளுங்கள்'' என ட்ரம்ப் அச்சுறுத்திக் கூறினார்.








இந்தக் கருத்துக்கள் மீண்டும் அதன் மீதுதான் யதார்த்தத்தைத் திருப்புகிறது. இது தான் அமெரிக்க அரசு, வேறு எந்த நாட்டையும் மீறுகின்ற அளவில் பெரிய இராணுவச் செலவினங்களையும், அணுஆயுதப் படைக்கலங்களையும் கொண்டிருக்கின்றமையோடு, கடந்த கால் நூற்றாண்டு காலமாக ஒன்றை அடுத்து மற்றொன்று என்பதாக அதன் ஆக்ரோஷமான போர்களைத் தொடுத்துள்ள நிலையில், தற்போது, பழைமையான ஆயுதத்திறன் கூட இல்லாத வடகொரியா போன்ற வளங்குன்றிய சிறிய நாட்டுக்கு எதிராக மிகப்பெரிய போர் அச்சுறுத்தலை முன்வைக்கின்றது.

அண்மையில், வடகொரியத் தலைவர் கிம் ஜோங் - உன் இற்கும், பியோங்யோங் ஆட்சிக்கும் மரண அச்சுறுத்தல் ஒன்றை ட்ரம்ப் விடுத்தார். ''ரொக்கெட் மனிதன் தனக்கும், தனது ஆட்சிக்குமான ஒரு தற்கொலைப் பணியில் ஈடுபட்டுள்ளார்.'' என்றும்

''அமெரிக்கா அதற்கு தயாராகவும், விருப்பமுடையதாகவும், வல்லமை கொண்டதாகவும் உள்ளது'' என்றும் ட்ரம்ப் அறிவித்தார். மேலும், வடகொரியாவுடன் ''வர்த்தகத்தை எளிதாக்கும்'' எந்தவொரு நாட்டை நோக்கியும் இந்தப் போர் வெடிப்பு அச்சுறுத்தல் விரிவுபடுத்தப்பட்டுள்ளது என்பது உட்குறிப்பாக தெரிகிறது.

**பரந்த பல்வேறுபட்ட வடகொரிய தொழில்கள், துறைமுகங்கள், வர்த்தகம் மற்றும் வங்கிச் சேவைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள எந்தவோர் அரசு அல்லது அமைப்பிற்கு அனுமதி வழங்கும் அதிகாரம் அமெரிக்க கருவூல செயலாளர் Steven Mnchin இன் கைகளில் உள்ளது**

வட கொரியாவுக்குப் பொருள்கள், சேவைகள் அல்லது தொழில்நுட்பங்களை வழங்குவதாகக் குற்றஞ்சாட்டப்பட்ட எந்தவொரு நிறுவனத்தையும் இலக்கு வைப்பதாக உள்ள ட்ரம்பின் நிர்வாக உத்தரவு அமெரிக்கக் கருவூலத்தின் அதிகாரத்தை வலுப்படுத்துகிறது. ''வடகொரிய வர்த்தகத்துடன் இணைந்த குறிப்பிட்ட பரிவர்த்தனைகளுக்குத் தெரிந்தே உதவுகின்ற எந்தவொரு வெளிநாட்டு வங்கியையும் இலக்கு வைக்கும் அதிகாரத்தை'' கருவூலத்துக்கு இது வழங்கும் என ட்ரம்ப் தெரிவித்தார்.

பரந்த பல்வேறுபட்ட வடகொரிய தொழில்கள், துறைமுகங்கள், வர்த்தகம் மற்றும் வங்கி சேவைகள் ஆகியவற்றில் ஈடுபட்டுள்ள எந்தவோர் அரசு அல்லது அமைப்புக்கு அனுமதி வழங்கும் அதிகாரம் அமெரிக்க கருவூல செயலாளர் Steven Mnchin இன் கைகளில் உள்ளது. ''இந்த ஆட்சிக்கு ஆதரவளிக்கும் எவரும். அவர்கள் எங்கு இருப்பினும் அவர்களை இலக்கு வைக்கும் வகையில் கருவூல அதிகாரத்தை இது கணிசமாக விரிவுபடுத்தும்'' எனவும் Mnchin தெரிவித்தார்.

கடந்த 180 நாள்களுக்குள் எந்தவொரு கப்பலோ அல்லது விமானமோ வடகொரியாவுக்குச் சென்றிருந்தால் அவை அமெரிக்காவுக்கு வருகை தருகின்றமையை இந்தப் புதிய நடவடிக்கைகள் தடை செய்யும் என்று வெள்ளை மாளிகைத் தகவல் அறிக்கை தெரிவித்தது. வடகொரியக் கப்பல்களுடன் கப்பலுக்கு - கப்பல் பொருள் பரிமாற்றங்களில் ஈடுபடும் எந்தவொரு கப்பலுக்கும் இந்தக் கட்டுப்பாடு பொருந்தும்.

(கேள்வி தொடரும்)

காலைக்கதிர்
Kalaikkathir





# சுதந்திர வேட்கை



முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.

132




**அத்தியாயம் - VIII**

## வன்னியில் அனுபவித்த இன்னல்கள்

கிளிநொச்சியில் கடும் சமர் நடந்து கொண்டிருந்த வேளை, நாம் கிளிநொச்சியிலிருந்து 10 கிலோ மீற்றர் தொலைவிலுள்ள இராமநாதபுரம் எனப்படும் வன்னியின் பூர்வீகக் கிராமத்தில் வசித்து வந்தோம். எமது வீட்டிலிருந்து சரியாக இரண்டு கிலோ மீற்றர் தூரத்தில் விடுதலைப் புலிகளின் பயிற்சி முகாமொன்று அமைந்திருந்ததால், அந்தப் பகுதி நோக்கித் தொடர்ச்சியாக விமானத் தாக்குதலும், பீரங்கிக் குண்டுவீச்சும் இடம்பெறுவதுண்டு. இதனால், மீண்டும் ஆபத்துக்கள் நிறைந்த யுத்த பூமிக்கு வந்துவிட்டது போன்ற உணர்வு. மீண்டும் போரின் முழக்கங்கள் காதுகளைச் செவிடாக்கின.

இரவு வேளைகளில், நாம் வசித்த பகுதிக்குள் வெடித்துச் சிதறிய பீரங்கிக் குண்டுகளின் அதிர்வால் எமது வீடு நடுங்கும். அந்த வேளைகளில், பாதுகாப்புக்காகப் பதுங்கு குழிக்குள் சென்று ஒதுங்கவும் நாம் துணியவில்லை. அந்த நிலவறைக்குள் கொடிய விச ஜந்துகள் குடியிருந்தன. பீரங்கிக் குண்டால் உடல் சிதறிச் சாவது எத்தனை சாத்தியமோ, அதே போன்றே பதுங்கு குழிக்குள் குடியிருந்த விசப் பாம்புகள் தீண்டிச் சாவதும் சாத்தியமாக இருந்தது. எமது பதுங்குகுழி, வீட்டுக்கு வெளியே அமைக்கப்பட்டிருந்தது. குழிக்கு மேலாகப் பனைமரக் குத்திகள். அதற்கு மேலாக மண்சாக்கு மூடைகள். எமது மெய்ப்பாதுகாவலர்கள், அடிக்கடி அந்தக் காப்பரணைச் சோதனை செய்வதுண்டு.

ஒரு நாள், எமக்குத் திகைப்பூட்டும் வகையில், ஒரு பெரிய நாக பாம்புத் தோல், பதுங்கு குழிக்குள், பனைமரக் குத்திகளின் அடுக்குகளுக்குள் இருந்து தொங்கிக் கொண்டிருப்பதை அவர்கள் கண்டுபிடித்தார்கள். ஒரு நாகபாம்பு குடியிருப்பது ஊர்ஜிதமாகி விட்டது. பனைமரக் குத்திகளின் இருண்ட இடைவெளிக்குள் பதுங்கி இருந்தது அந்தப் பாம்பு. சில சமயம் குடும்பமாகக் குடிநடத்தலாம். சீற்றம் கொண்ட நாகம் தீண்டி, மெல்ல மெல்லச் சாவதை விட, இரவில் மெய்ம்மறந்த தூக்கத்தில் திடீரெனக் குண்டு வெடித்துச் சாவது பரவாயில்லையென எமக்குத் தோன்றியது. நாம் அப்படியே தீர்மானித்து, அதிஷ்ட தேவதையின் கைகளில் எமது விதியை ஒப்படைத்தோம்.

எமது வீட்டுக்குச் சமீபமாக, எறிகணைகளும், விமானக் குண்டுவீச்சும் நிகழ்ந்தபோதும், இராமநாதபுரத்தில் நாம் வசித்த காலம் மிகவும் மகிழ்ச்சிக்குரியது. ரம்மியமான இயற்கைச் சூழலில் ஓர் அழகான வீடு; அதைச் சுற்றித் தென்னைமரச் சோலை கிழன்று விசாலித்து வளர்ந்து நின்ற வேம்புகள், முற்றத்தில் பல இனத்தைச் சேர்ந்த மாமரங்கள் செழிப்பாகக் காய்த்துக் கனியாகக் கொட்டின. மரச் சோலைகள், வன்னியின் வெப்பச் சூழலைத் தணித்து, வீட்டைக் குளிர்மையாக்கின. இதனால், அங்கு வசிப்பதற்கு இதமாக இருந்தது. எமது அயலில் வாழ்ந்தவர்கள் மரபுவழிவந்த வன்னி மக்கள், பல வேறு சாதிப் பிரிவுகளைச் சேர்ந்த இந்த மக்கள், ஏதோ ஒரு வழியில், விடுதலைப் போராட்டத்துக்குப் பங்களித்து வந்தார்கள்.

இராமநாதபுரத்தில் எமது வாழ்க்கை மகிழ்ச்சிகரமாக அமைந்தபோதும், சில இடையூறுகளும் இருக்கத்தான் செய்தன. ஒதுக்குப் புறமான கிராமம் என்பதால், சனப்பெருக்கம் நிறைந்த பகுதிகளிலிருந்தும், விடுதலைப் புலிகளின் செயலகங்களிலிருந்தும் அது தனிப்படுத்தப்பட்டும் இருந்தது. அப்பொழுது எரிபொருள் தட்டுப்பாடு நிலவியதால், நீண்ட தூரப் பயணத்தைப் போராளிகள் தவிர்க்க வேண்டியிருந்தது. இதனால், எமது வீட்டுக்கு அதிகமானோர் வருவதில்லை. இந்தச் சூழ்நிலையில், கிளிநொச்சி மீதான விடுதலைப் புலிகளின் தாக்குதல் நேரம் நெருங்கிய போது, எம்மை அங்கிருந்து விலகி, போராளிகளின் இருப்பிடங்களுக்குச் சமீபமாகக் குடியிருக்குமாறு பணித்தல் வந்தது. இதன்படி நாம் இராமநாதபுரத்திலிருந்து வெளியேறி, முல்லைத்தீவில் ஒட்டுசுட்டானுக்கு அண்மையிலுள்ள வரலாற்றுப் புகழ்மிக்க கற்சிலைமடுவில் குடிபுகுந்தோம். இங்குதான் வன்னியின் கடைசி மன்னன் பண்டாரவன்னியனின் நினைவுச் சின்னம் உள்ளது. பிரித்தானிய காலனித்துவ ஆட்சிக்கு எதிராகப் போராடிய இந்த மாவீரன் இறுதியில் ஆங்கிலேயரால் கைது செய்யப்பட்டுத் தூக்கிலிடப்பட்டான்.

## வன்னியில் எமது வாழ்க்கை

இலங்கையின் வடபாகத்திலுள்ள வன்னிப் பிரதேசம் மழை வீழ்ச்சி குறைந்த ஒரு வறண்ட பூமி. வன்னி இராசதானியை ஆட்சிபுரிந்த பழைய தமிழ் மன்னர்கள் இந்தப் பகுதியில் நூற்றுக்கணக்கான குளங்களை அமைத்து நீரியல் விஞ்ஞானம் தழுவிய விவசாய உற்பத்தி முறையை உருவாக்கினர். முற்காலத்தில், வன்னிப் பிரதேசத்தில் உணவு உற்பத்தி தழைத்தோங்கியதால் தேவைக்கு மிகுதியானவை யாழ்ப்பாணத்துக்கும் தென் இலங்கைக்கும் அனுப்பிவைக்கப்பட்டன என்று வன்னிக் கமக்காரர்கள் என்னிடம் சொன்னார்கள். சமூகக் கூட்டுறவு முறையிலான உற்பத்திக்கும் விநியோகத்துக்கும் ஊக்கமளித்த நீரியல் நீர்ப்பாசன கமச் செய்கைக்கு அந்நிய காலனித்துவம் முடிவுகட்டியது. இலங்கைத்தீவு சுதந்திரம் அடைந்த பின்னர் ஆட்சிப்பீடம் ஏறிய சிங்கள அரசுகள் வன்னிப் பிரதேசத்தை முற்றாகப் புறக்கணித்தன. எந்த விதமான பொருளாதாரத் திட்டங்களையும் செயற்படுத்தாமல் ஒதுக்கி வைத்தன. இதன் விளைவாக வன்னி மாநிலம் அபிவிருத்தியடையாத பின்தங்கிய பிரதேசமாக இருந்து வந்தது. பலநூற்றாண்டுகளுக்கு முன் நிர்மாணிக்கப்பட்ட பழைய மன்னர்களால் பேணிப் பாதுகாக்கப்பட்டு வந்த குளங்களும், கால்வாய்களும் பாவனையின்றித் தூர்ந்து உடைந்து போயின. இடையிடையே ஏற்பட்ட வெள்ளப்பெருக்கால், அணைகள் அடித்துச் செல்லப்பட்டமையால் குளங்கள் இருந்த இடம் தெரியாமல் மறைந்து போயின. நீர்ப்பாசன முறை சிதைவுற்றதன் விளைவாக வன்னியில் வேளாண்மை சமூகத்தின் வாழ்க்கை அவலத்துக்குள்ளானது. இது ஒருபுறம் இருக்கச் சிங்கள அரசால் விதிக்கப்பட்ட பொருளாதாரத் தடைகள் காரணமாக நடுத்தர நிலச் சொந்தக்காரர்களுக்கும் வித்தியாசமான புதிய நெருக்கடிகள் தோன்றின.

வன்னியிலுள்ள பெரும்பாலான விவசாயிகள் தமது வீட்டுப் பொருளாதாரத்தில் தங்கியிருப்பவர்கள். வீட்டு வருவாயுடன் வாழ்பவர்கள். தென்னை, வாழை, மாமரம், ஆடு, மாடு, கோழி வளர்ப்பு, இனி நெல் விளைச்சலில் கிடைக்கும் அரிசி, அத்துடன் தோட்டத்தில் உற்பத்தியாகும் காய்கறிகள் ஆகியன வன்னி மக்களின் வீட்டு வருவாய்களாக இருந்தன. இந்த வருவாயுடன் அவர்களால் தமது வாழ்க்கையைச் சமாளிக்க முடிந்தது. ஆயினும், உழவு இயந்திரங்கள், நீரிறைக்கும் இயந்திரங்கள் ஆகியனவற்றுக்குத் தேவையான எரிபொருளுக்குப் பெரும் தட்டுப்பாடு நிலவியது. அத்தோடு, உர வகைகளுக்கும் தடை விதிக்கப்பட்டிருந்தது. அரசால் விதிக்கப்பட்ட இந்தப் பொருளாதாரத் தடைகளால், வீட்டு வருவாயில் தங்கியிருந்த விவசாய சமூகம் மட்டுமன்றி வன்னியிலுள்ள ஏனைய சமூகங்களும் வெகுவாகப் பாதிக்கப்பட்டன. எரிபொருள் கிடைக்காததால், உழவு இயந்திரங்களைப் பாவிக்க முடியாத விவசாயிகள், பண்டைய முறைப்படி உழவு மாடுகளையும், கலப்பையையும் வயலுக்குக் கொண்டு சென்றனர். உழவு இயந்திரங்களைப் பாவிக்க முடியாமையால், வயல்வேலைக்கான கூலிச் சுமையும் விவசாயிகளுக்கு ஏற்பட்டது. உரவகைகளுக்கு விதிக்கப்பட்ட தடையால் விளைச்சல் வெகுவாகக் குன்றியது. இதனால், உற்பத்திப் பொருள்களை யாழ்ப்பாணத்திலோ கொழும்பிலோ விற்பனை செய்ய முடியவில்லை. அத்தோடு, சேமித்து வைக்கும் வசதியில்லாததால் அவை அழுகிக் கெட்டுப் போவதுமுண்டு.

உற்பத்திச் செலவு அதிகரிப்பு, உற்பத்திப் பொருள்களைச் சேமித்து வைக்கின்றமைக்கான களஞ்சிய வசதி இன்மை, சந்தைப்படுத்தும் வாய்ப்பின்மை ஆகிய காரணங்களால் மேலதிகப் பயிர்ச்செய்கை மேற்கொள்ளவதை விவசாயிகள் தவிர்த்தனர். இதனால், உணவுத் தட்டுப்பாடு ஏற்பட்டது. உணவுப் பொருள்களின் விலைகளும் அதிகரித்தன. புகையிலைச் செய்கையிலும் இதே சிக்கல் விவசாயிகளுக்கு ஏற்பட்டது. புகையிலையைத் தென்னிலங்கைக்கு ஏற்றுமதி செய்ய முடியவில்லை. இதனால், சேமித்து வைத்த புகையிலைகள் அழுகிக் கெட்டுப் போயின. செய்கைபண்ணிய செலவுத் தொகையைக் கூட எடுக்க முடியவில்லை. கடனையும் செலுத்த முடியவில்லை. பண நெருக்கடியால் அன்றாடச் செலவுக்கே அல்லற்பட நேர்ந்தது. இந்தப் பொருளாதாரப் பிரச்சினைகளுடன் தடுமாறிக் கொண்டிருந்த மக்களுக்கு, வன்னியில் போர் தீவிரமடைந்து பரவியதால், இடம்பெயர்வு என்ற இதுவரை காணாத புதிய நெருக்கடி தோன்றியது. கிளிநொச்சி மீதான தாக்குதலைத் தொடர்ந்து, வன்னி ஊடாகச் செல்லும் நெடுஞ்சாலையைக் கைப்பற்றும் நோக்குடன், 'ஜெயசிக்குறு' என்ற பெயரில் சிங்கள இராணுவம் பெரியதொரு படையெடுப்பை மேற்கொண்டது. இதனால், வன்னியில் பல்லாயிரக்கணக்கான குடும்பங்கள் இடம்பெயர நேர்ந்தது. வன்னி விவசாயிகள் தமது வீடுகள், வயல்கள், கால்நடைகள், வீட்டுப் பொருளாதார வாழ்வு ஆகியவற்றைத் துறந்து பாடசாலைகள், கோவில்கள், அகதி முகாம்களில் தஞ்சமடைந்தனர்.

(தொடரும்...)

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாகி இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன.**

## தமிழரின் ஒருமைப்பாட்டுக்காக

# 2001 இல் உருவான தமிழ்க் கூட்டமைப்பு இன்று இல்லையே...!



**குமுறுகின்றார் குமரகுருபரன்**

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கி இன்றுடன் 16 ஆண்டுகள் நிறைவு பெறுகின்றன .

தமிழ்த் தலைமைகளின் ஒருமைப் பாட்டின் வெளிப்பாடான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக்கும் எண்ணம் முதலில் கருக்கொண்டது கிழக்கு மாகாணத்தில் தான் ஆயுத போராட்டத்திற்கு இணையாக தமிழர் தம் அபிலாசைகளை திண்ணமாக எண்ணத்தில் கொண்டவர்கள் உச்ச பீடமான நாடாளுமன்றத்தில் தமிழ் மக்கள் பிரதிநிதிகளாக இருக்க வேண்டியதும் அல்லாது போனால் ஏற்படக்கூடிய விளைவுகளும் தமிழர் தம் அபிலாசைகளை நேசித்த வர்களால் நன்கு உணரப்பட்ட நேரம்.

2001 ஆம் ஆண்டு நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னர் 2001 ஒக்ரோபர் 20இல் நான்கு கட்சிகள் ஒன்றுபட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு உருவாக கைச்சாத்திடும் வைபவம் கொள்ளுப்பிட்டியில் உள்ள தமிழ் ஆர்வலர் வர்த்தக முக்கியஸ்தர் வி.ஆர். வடிவேற்கரசன் இல்லத்தில் மூன்று நாள்களாக மாலைபேச்சு வார்த்தைகள் இரவு நள்ளிரவுவரை இடம்பெற்றன. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு 2001 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 21 ஆம் திகதி நான்கு தமிழ் கட்சிகள் இணைந்து உருவாக்கப்பட்டது.

தமிழர் விடுதலைக் கூட்டணி சார்பாக செயலாளர் நாயகம்சட்டத்தரணி இராஜவரோதயம் சம்பந்தன் அவர்களும் ரெலோ செல்வம் அடைக்கலநாதன் சார்பாக அன்றைய ரெலோ முதல்வர் சட்டத்தரணி என்.ஸ்ரீகாந்தா அவர்களும் அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் சார்பாக முதல்வர் பொதுச் செயலாளர் கலாநிதி என்.குமரகுருபரன் ஆகிய நானும் ஈ.பி.ஆர்.எல்.எவ். சார்பாக செயலாளர் நாயகம் சுரேஷ் பிறேமச்சந்திரன்அவர்களும் கைச்சாத்திட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கினோம். சித்தார்த்தன் அவர்களின் புளொட் உம் உடனிருந்தது.

இதில் அனுசரணையாளர்களாக சில முக்கிய தமிழ் ஆர்வலர்கள் கப்பல்த் துறை வர்த்தக முக்கியஸ்தர் ஜெயபாலசிங்கம், வர்த்தக முக்கியஸ்தர் வடிவேற்கரசன், ஐ நா. ஆலோசகர் (தில்லைக்கூத்தன்) இளைய தம்பி நடராசா, சட்டத்தரணி க.நீலகண்டன் என்போர் கலந்து கொண்டனர்.

அன்று கைச்சாத்திட்டு உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் வரலாற்றுக்கருவூலம் இன்றில்லை என்றால் அதில் ஓர் உண்மை இருக்கின்றது என்பது பொய்மை ஆகாது. அன்று முதுமைக்கும் ஒவ்வொரு கட்சியின் பங்காண்மைக்கும் மதிப்பளிக்கப்பட்டது. அனைவரும் ஒன்றிணைந்தே முடிவுகளை எடுத்தோம்.

ஒரு கட்சி ஏனைய கட்சிகளின்றி முடிவுகளை எடுத்ததில்லை. இதனை மூத்த தலைவர் இரா சம்பந்தன் நன்கு அறிவார்,

அன்று உருவான தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்றில்லை என்பது உண்மை என்பதை மறுக்க முடியாது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு ஓர் அரசியல் கட்சியாக இலங்கை தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப் படாமையினால், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழர் விடுதலைக் கூட்டணியின் உதயசூரியன் சின்னத்தில் 2001 நாடாளுமன்றத் தேர்தலில் போட்டியிட்டு 15 இடங்களைக் கைப்பற்றியது.

இன்றிருக்கும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு, தமிழர் விடுதலை கூட்டணி, அகில இலங்கை தமிழ் காங்கிரஸ் என்பவற்றின் பங்காளிப் பற்றது. அன்று அனைத்துக் கட்சி களுமே ஒன்றுகூடி விட்டுக்கொடுத்து ஒருமைப்பட்டு முடிவெடுத்தோம் . அதன் தலைமையில் உள்ள சமஷ்டி கட்சி எனும் தமிழரசுக் கட்சிக் காரரும் பக்குவமாக நடந்து கொண்டனர். அனைவரையும் அரவணைத்தனர் விசுவாசமாக கூட்டு அமைப்பு என்பதை மனதில் கொண்டனர். இதனை மூத்த தலைவர் இரா சம்பந்தன் மறுக்க மாட்டார்.

ஆதலின் பெரும் விமர்சனங்கள் எழவில்லை. கூட்டமைப்பு கட்சிகளாக பிரிந்து நின்று முடிவுகளை அறிவித்ததில்லை. ஒருவரை ஒருவர் விமர்சித்ததில்லை.

அந்த ஒருமைப்பாடு பின்னர் சிதைந்து விட்டது தமிழர் விடுதலை கூட்டணியும் அதன் செயலாளர் நாயகம் ஆனந்த சங்கரியும் வெளியேற வேண்டிய சூழல் ஏற்பட்டது இதற்கும் அவர் கூறும் கரணங்கள் பல உண்டு. கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் கொள்கை மாறுபாடுகளை வெளிப்படுத்தி , முரண்பாடுகளை தெரிவித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை விட்டு அகன்றார்.

தேசிய பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் மு. சிவசிதம்பரம் அவர்களின் மறைவின் பின் நாம் கைசாத்திட்ட ஒப்பந்தப்படி தேசியப்பட்டியலில் அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸின் சார்பில் ஏற்கனவே நியமிக்கப்பட்ட அதன் பொதுச் செயலாளர் என் . குமரகுருபரன் நியமனம் பெற்றிருக்க வேண்டும் . இதுபற்றி ஆங்கிலப் பத்திரிகைகள் கூட பெயர் குறிப்பிட்டு செய்திகள் வெளியிட்டன. ஆனால் ஒப்பந்தத்தில் தெளிவாக குறிப்பிட்டிருந்தும் அதனை மீறி இரா சம்பந்தன் மு. சிவசிதம்பரம் அவர்களின் மரணச்சடங்கு முடிந்து வரும் வழியில் தமிழ்ச்செல்வனிடம் தன்னோடு திருகோணமலையில் போட்டியிட்டு தோல்வியடைந்த துரைரட்ணசிங்கத்தை நியமிப்பதற்கு முடிவை தெரிவித்துவிட்டு வந்தார். சட்ட ரீதியாக இடமிருந்து சட்டரீதியாக நீதியை நாட குமரகுருபரன் (நான்) விரும்பவுமில்லை அவர் சார்ந்து அதற்கான முன்னெடுப்பை அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் செய்யவுமில்லை. ஆதலினால் தமிழ்க் காங்கிரஸ் சார்பாக கையொப்பமிட்டு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை உருவாக்கிய குமர குருபரனும் வெளியேறி கொழும்பு அரசியலில் கொழும்பு மாநகர சபை உறுப்பினராகவும், பின்னர் மேல்மாகாணசபை உறுப்பினராகவும் அதிகப் படியான வாக்குகள் பெற்று தெரிவானார் .

பின்னர் பொதுச்செயலாளராக விருந்த கஜேந்திரகுமார் பொன்னம்பலம் அவர்களும் பெரிய கொள்கை பாடுகளைத் தெரிவித்துக் கூட்டமைப்பை விட்டு அகன்றார்.

இன்றிருக்கும் கூட்டமைப்பு , தமிழர் விடுதலைக் கூட்டணி, அகில இலங்கை தமிழ்க் காங்கிரஸ் என்பவற்றின் பங்களிப்பற்றது. அன்று அனைத்து கட்சிகளுமே ஒன்றுகூடி விட்டுக் கொடுத்து ஒரு மைப்பட்டு முடிவெடுத்தோம். அதன் தலைமையில் உள்ள சமஷ்டி கட்சி எனும் தமிழரசுக் கட்சிக்காரரும் பக்குவமாக நடந்து கொண்டனர். அனைவரையும் அரவணைத்தனர் விசுவாசமாக கூட்டு அமைப்பு என்பதை மனதில் கொண்டனர்.

எனவே, அன்று உருவாக்கப்பட்ட தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு இன்று அத்தனை அர்த்தம் பொருந்தியதாக அல்லது அர்த்தம் சற்றுக் குறைந்து இருப்பதாகவே உணரப்படுகின்றது . அரசியல் தீர்வு அடையப்படும்வரை தமிழ் மக்களின் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு எனும் ஒருமைப்பட்ட சக்தி ஒன்று தேவை என்பதும் அன்று உருவாக்கப்பட்ட கூட்டமைப்பை போல மக்கள் பிரதிநிதிகள் தமிழ் கட்சிகள் அனைத்தையும், உண்மையான ஆர்வலர்கள் அனைவரையும் உள்ளடக்கிய, உள்வாங்கிய கூட்டமைப் பொன்று கைச்சாத்திடப்பட்டு உருவாக்கப்பட வேண்டும். இதுவே அர்த்தபுஷ்டியுள்ளதாக அமையும் .

---

# உயிரிழந்த யாழ். பல்கலை மாணவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு!





துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்த யாழ். பல்கலைக் கழக மாணவர்களின் முதலாம் ஆண்டு நினைவேந்தல் நிகழ்வு நடைபெற்றுள்ளது.

இந்த நிகழ்வு நேற்றுக் காலை யாழ். பல்கலைக் கழகத்தில் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வில் மாணவர்கள், விரிவுரையாளர்கள் உட்பட பலரும் கலந்து கொண்டு உயிரிழந்த மாணவர்களின் படத்திற்கு மலர்மாலையிட்டு, மலர் தூவி, மெழுகுவர்த்தி ஏற்றி அஞ்சலி செலுத்தியிருந் தனர்.

கொக்குவில், குளப்பிட்டிச் சந்தியில் கடந்த ஆண்டு ஒக்டோபர் மாதம் 20 ஆம் திகதி நள்ளிரவு யாழ். பல்கலைக்கழக மூன்றாம் வருட கலைப்பீட, அரசறிவியல் துறை மாணவனான நடராஜா கஜன் மற்றும் ஊடகக் கற்கை மாணவனான பவுன்ராஜ் சுலக்சன் ஆகியோர் துப்பாக்கிச் சூட்டிற்கு இலக்காகி உயிரிழந்தமை குறிப்பிடத்தக்கது.

# 'சைட்டம்' தொடர்பில் அரசின் இறுதித்தீர்வு அடுத்த வாரம்!

### ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன அறிவிப்பு



கொழும்பு, ஒக். 21

'சைட்டம்' நிறுவனம் தொடர்பான அரசின் இறுதித் தீர்வு அடுத்த வாரம் வெளியிடப்படும் என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

அக்வினாஸ் பல்கலைக்கழகக் கல்லூரியில் நேற்று முன்தினம் நடைபெற்ற வருடாந்த பட்டமளிப்பு விழாவில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சைட்டம் நிறுவனம் தொடர்பான பிரச்சினைகளைத் தீர்ப்பதற்காகக் கடந்த காலத்தில் அரசு பல்வேறு நடவடிக்கைகளை எடுத்தபோதும் அந்தத் தீர்வுகள் தொடர்பில் பல்வேறு கருத்துக்கள் முன்வைக்கப்பட்டுள்ளன.

எவ்வாறான போதும் அடுத்த வாரம் அரசு வெளியிடும் இறுதித் தீர்வு ஆர்ப்பாட்டம் நடத்திய மாணவர்கள் உள்ளிட்ட எதிர்ப்புகளை வெளியிட்ட பெரும்பாலானவர்களுக்குப் போதுமானதாக இருக்கும்.

புதிய உற்பத்திப் பொருளாதாரத்துக்குத் தேவையான கற்றவர்களை உருவாக்குகின்ற போது அரச பல்கலைக்கழகங்களுக்கும் அரசசார்பற்ற பல கலைக்கழகங்களுக்கும் பொறுப்புள்ளது.

கல்வியில் இருக்கவேண்டிய நியமங்கள் மற்றும் பண்புகளைப் பாதுகாத்து அனைத்து நிறுவனங்களும் செயற்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வில், பட்டமளிப்பை ஆரம்பித்துவைக்கும் முகமாக பட்டம் பெறும் 15 மாணவர்களுக்கான பட்டங்களை ஜனாதிபதி வழங்கினார்.

இந்த நிகழ்வில் அக்வினாஸ் பல்கலைக்கழக நிறுவனத்தின் வேந்தர் பேராயர் மெல்கம் ரஞ்சித், உபவேந்தர் அருட்தந்தை சுசிக் மாக்லால் சில்வா, அமைச்சர் ஜோன் அமரதுங்க, ஜோசப் மைக்கல் பெரேரா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## மூன்று பிரிவுகளாக அரச நடனப்போட்டி

உள்ளக அலுவல்கள், வடமேல் அபிவிருத்தி மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சு கலாசார அலுவல்கள் திணைக்களம் மற்றும் அரச நாட்டிய ஆலோசனைக்குழு ஆகியன ஒன்றிணைந்து ஏற்பாடு செய்துள்ள அரச நடனப் போட்டி 2018 இற்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இந்தப் போட்டிக்குரிய விண்ணப்பப்படிவங்கள் பாடசாலைகளுக்கு அனுப்பப்பட்டுள்ளன.

இந்தப் போட்டிகள் மூன்று பிரிவுகளாக- 8-15 வயது வரை முதல் பிரிவு, 15-29 வயது வரை இரண்டாவது பிரிவு, 29 வயதுக்கு மேல் மூன்றாவது பிரிவாகவும் நடத்தப்பட உள்ளன.

நிபந்தனைகளுக்கு அமைவாக பூரணப்படுத்தப்பட்ட விண்ணப்பப் படிவங்களை எதிர்வரும் 27 ஆம் திகதி வெள்ளிக்கிழமைக்கு முன்னர் அனுப்பி வைக்குமாறு யாழ். பிரதேச செயலக நிர்வாக உத்தியோகத்தர் திருமதி வி.பாலசுப்பிரமணியம் அறிவித்துள்ளார். (இ)

## முதியோர் தினம்; இன்று நிகழ்வு

இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழகம் அரச சேவை ஓய்வூதியர்களின் நம்பிக்கை நிதியம், வடமாகாண ஓய்வூதியர் சங்கங்கள், ஓய்வூதியர்கள், நலன்விரும்பிகள் ஒன்றிணைந்து நடத்தும் சர்வதேச முதியோர் தினம் இன்று சனிக்கிழமை காலை 9.30 மணிக்கு இலங்கை முதியோர் சுக வாழ்வுக் கழக வடமாகாண தலைமையகத்தில் இடம்பெறும்.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வலிகாமம் வடக்கு உதவிப் பிரதேச செயலர் பா.ஜெயகரன் கலந்து கொள்வார். (இ)

## மூளாய் கூட்டுறவு மருத்துவமனை சீரமைப்பு இன்று ஆரம்ப நிகழ்வு

மூளாய் கூட்டுறவு மருத்துவமனையின் கட்டட மீள் சீரமைப்புக்கான ஆரம்ப நிகழ்வு இன்று முற்பகல் 10.30 மணிக்கு அலுவலக மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

மூளாயைச் சேர்ந்த சிற்றம்பலம் குடும்பத்தினர் இந்தக் கட்டட மீள் சீரமைப்புப் பணிகளை மேற்கொள்ள முன்வந்துள்ளனர் என்று அறிவிக்கப்படுகிறது. (இ)

## மஹானாம சமரவீரவின் ஜனனதினம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில்!





கொழும்பு, ஒக். 21

முன்னாள் பிரபல அரசியல்வாதியும் அமைச்சருமான மஹானாம சமரவீரவின் 100 ஆவது ஆண்டு ஜனனதினம் சபாநாயகர் கரு ஜயசூரிய தலைமையில் நடைபெற்றது.

இவர் நிதி மற்றும் ஊடகத் துறை அமைச்சர் மங்கள சமரவீரவின் தந்தையாவார். இதனை முன்னிட்டு மங்கள சமரவீரவின் இல்லத்தில் தேரர்களுக்குத் தான நிகழ்வு இடம்பெற்றது.

பின்னர் மாலை நூபே ஒல்லாந்து வர்த்தக கட்டடத்தொகுதியில் நினைவு வைபவம் இடம் பெற்றது.

இங்கு உரையாற்றிய சபாநாயகர் கரு ஜயசூரிய, நற்பண்புகளை கொண்ட சமரவீர இந்தப் பிரதேசத்தில் பெரிய பணிகளை மேற்கொண்டுள்ளார் என்று தெரிவித்துள்ளார்.

இந்த நிகழ்வின்போது ஓய்வு பெற்ற அந்ரா இந்தியால் எழுதப்பட்ட மஹானாம சமரவீரவின் நூலொன்றும் சபாநாயகரிடம் கையளிக்கப்பட்டுள்ளது. (க)

## இளைஞர் வேலைவாய்ப்புத் திட்டத்துக்கு நிதி உதவி வழங்கியுள்ளது அமெரிக்கா!



இளைஞர்களுக்கு வேலை வாய்ப்புக்களை பெற்றுக்கொள்வதற்கான யூலீட் என்ற இளைஞர் வேலைவாய்ப்பு திட்டத்துக்கான ஆரம்பக் கட்ட நிதி உதவியாக அமெரிக்கா, ஒரு கோடி 20 லட்சம் அமெரிக்க டொலர்களை வழங்கி உள்ளது.

இலங்கை அரசும் அமெரிக்காவும் இந்த யூலீட் என்ற திட்டத்தை முன்னெடுத்துள்ளன.

அமெரிக்காவின் சர்வதேச அபிவிருத்திப் பிரிவு இலங்கையுடன் இணைந்து முன்னெடுக்கும் இத்திட்டத்தின் ஆரம்ப நிகழ்வு இலங்கைவர்த்தகசம்மேளனத்தின் கொழும்புத் தலைமையகத்தில் இடம்பெற்றது.

இந்தத் திட்டத்தின் கீழ் இளைஞர்களுக்கு வேலை வாய்ப்பு தொழிற்பயிற்சி, தொழில் துறைகளின் மேம்பாட்டுத் திட்டங்கள் முன்னெடுக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

இந்த நிகழ்வில் இலங்கையிலுள்ள அமெரிக்கத் தூதுவர் அதுல் ஹெசாப், திறன்கள் அபிவிருத்தி மற்றும் தொழிற் பயிற்சி அமைச்சர் சந்திம வீரக்கொடி, பிரதி அமைச்சர் பரணவிதான ஆகியோர் கலந்து கொண்டனர். (க)

# ஓராண்டின் பின்னர் பொது நிகழ்வில் மக்கள் முன்னிலையில் கருணாநிதி

சென்னை,ஒக்.21

உடல்நலமின்றிக் கடந்த சில மாதங்களாக வீட்டிலேயே ஓய்வெடுத்துவந்த தி.மு.க. தலைவர் மு.கருணாநிதி சென்னை கோடம்பாக்கத்தில் அமைந்துள்ள கட்சியின் நாளிதழான முரசொலி அலுவலகத்துக்கு நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை மாலையில் வருகைதந்தார்.





மாலை சுமார் 7 மணியளவில் முரசொலி அலுவலகத்துக்கு வந்த மு.கருணாநிதி, அங்கு அமைக்கப்பட்டுள்ள முரசொலி பவளவிழா கண்காட்சியைப் பார்வையிட்டார்.

கருணாநிதியுடன் மு.க. ஸ்டாலின், மு.க.தமிழரசு, கருணாநிதியின் மகள் செல்வி, முன்னாள் அமைச்சர்கள் துரை முருகன், எ.வ. வேலு, பொன்முடி, கருணாநிதியின் உதவியாளர் சண்முகநாதன், மருத்துவர்கள் ஆகியோர் வந்திருந்தனர். சுமார் 40 நிமிடங்கள் முரசொலி கண்காட்சியை அவர் பார்வையிட்டார்.

இந்தக் கண்காட்சியில் கருணாநிதியின் அறையில் அவரது மெழுகுச் சிலை ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கிறது. அதனையும் கருணாநிதி பார்த்தார்.

கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் 25ஆம் திகதி முதலே உடல்நலம் பாதிக்கப்பட்டிருந்த கருணாநிதி, பொது நிகழ்ச்சிகளில் பங்கேற்கின்றமையைத் தவிர்த்து வந்தார்.

அதன் பிறகு கடந்த டிசெம்பர் மாதம் முதலாம் திகதியன்று ஊட்டச் சத்துக் குறைபாட்டின் காரணமாக மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கருணாநிதி, 7ஆம் திகதியன்று வீடு திரும்பினார்.

ஆனால், மூச்சுத் திணறல் பிரச்சினைக்காக மீண்டும் டிசெம்பர் 15ஆம் திகதியன்று மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட கருணாநிதிக்கு ட்ராக்யோஸ்டமி குழாய் பொருத்தப்பட்டது.

இதற்குப் பிறகு அவ்வப்போது தலைவர்கள், அவரை வந்து சந்திக்கும் படங்கள் வெளியிடப்பட்டுவந்த நிலையில், கடந்த ஆண்டுக்குப் பிறகு முதல் முறையாக மீண்டும் கருணாநிதி வெளியில் வந்துள்ளார்.

கருணாநிதி திடீரென முரசொலி அலுவலகத்துக்கு வருகை தந்தமை அவருடைய தொண்டர்களுக்குப் பெரும் உற்சாகத்தை ஏற்படுத்தியிருக்கிறது.

சமூக வலைத் தளங்களில் இது தொடர்பாகத் தி.மு.க. தொண்டர்கள் உற்சாகம் மிகுந்த கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர்.

## அப்பிளின் ஐபோன்கள் 2018 இல் மலிவு விலையில்


புதுடில்லி,ஒக்.21

அப்பிள் நிறுவனத்தின் ஐபோன் X வெளியாக சில வாரங்களே உள்ள நிலையில், 2018-இல் மலிவு விலையில் ஐபோன்களை வெளியிட அப்பிள் நிறுவனம் திட்டமிட்டுள்ளது எனத் தகவல்கள் வெளியாகி உள்ளன.

அப்பிள் நிறுவனம் செப்ரெம்பரில் அறிமுகம் செய்த ஐபோன் X இன்னும் சில வாரங்களில் விற்பனைக்கு வரவிருக்கும் நிலையில் அந்நிறுவனத்தின் 2018 ஐபோன்கள் சார்ந்த தகவல்கள் புதுடில்லி வலைத்தளத்தில் வெளியாகியுள்ளன.

அந்த வகையில், சீனாவில் இருந்து வெளியாகி இருக்கும் தகவல்களில் ஐபோன் 'ஸ்மார்ட்போன்' கொண்டிருக்கும் அம்சங்கள் நிறைந்த புதிய ஐபோன்களை அடுத்த ஆண்டு வாக்கில் அறிமுகம் செய்ய இருப்பதாகக் கூறப்படுகிறது.

மலிவு விலை 2018 ஐபோன்கள் லிஸ்பன் மற்றும் ஹங்ஷௌ என்ற குறியீட்டு பெயர் கொண்டிருக்கும் எனக் கூறப்படுகிறது. பிரீமியம் அம்சங்கள் நிறைந்த மலிவு விலை சாதனங்கள் சீன சந்தையில் நல்ல வரவேற்பைப் பெறும் என்ற வகையில் வெளியிடப்பட இருக்கின்றது எனத் தகவல்கள் வெளியாகியுள்ளன.




## நாகையில் பஸ் நிலையக் கட்டடம் இடிந்து வீழ்ந்ததில் 9 பேர் சாவு!

நாகபட்டினம்,ஒக்.21

தமிழ்நாட்டில் நாகப்பட்டினம் மாவட்டம் பொறையாறு அரசு போக்குவரத்துப் பணிமனைக் கழக ஊழியர் ஓய்வு அறைக் கட்டடத்தின் மேற்கூரை நள்ளிரவில் இடிந்து விழுந்து விபத்துக்குஉள்ளானதில் 9 பேர் உயிரிழந்துள்ளனர்.

நாகப்பட்டினம் மாவட்டத்தில் உள்ள பொறையாறில் அரசு போக்குவரத்து பணிமனைக் கட்டடம் உள்ளது. அதில் உள்ள பணிமனைக் கழக ஊழியர்களின் ஓய்வு அறையின் மேற்கூரை திடீரென நள்ளிரவு வேளை இடிந்து விழுந்தது.

இந்த விபத்தில் போக்குவரத்துக் கழக ஊழியர் 9 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். மேலும், கட்டட இடிபாடுகளில் சிக்கி 20 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். இடிபாடுகளில் சிக்கிய 3 பேர் பத்திரமாக மீட்கப்பட்டுள்ளனர்.



இதுதொடர்பாகத் தகவலறிந்து சம்பவ இடத்துக்கு விரைந்து வந்த தீயணைப்பு வீரர்கள் மற்றும் காவல் துறையினர், கட்டட இடிபாடுகளில் சிக்கியுள்ள போக்குவரத்துக் கழக ஊழியர்களை மீட்கும் பணியில் ஈடுபட்டனர்.

இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டவர்கள் சிகிச்சைக்காக காரைக்கால் அரசு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்டனர்.

பொறையாறு பணிமனை 1974 ஆம் ஆண்டு கட்டப்பட்டது.

இந்நிலையில், சம்பவ இடத்துக்கு வந்த மாவட்ட ஆட்சியர், அதிகாரிகள் மற்றும் அமைச்சரை உள்ளேவிடாமல் பணிமனை வாயிற் கதவைப் பூட்டி ஊழியர்களுடன் பொதுமக்களும் போராட்டத்தில் ஈடுபட்டனர். (உ)

## 'ஐபோன் 8 பிளஸ்' பற்றரி வெடித்துப் பிளக்கும் சம்பவங்கள் சீனாவிலும்!

பீஜிங்,ஒக்.21

அப்பிள் நிறுவனத்தின் புதிய ஐபோன்களில் உள்ள பற்றரி வெடித்து ஐபோன் பாதியாகப் பிளந்து கொள்ளும் சம்பவங்கள் சீனாவிலும் அரங்கேறி உள்ளன என அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

அப்பிள் நிறுவனத்தின் புதிய ஐபோன்களில் பற்றரியில் ஏற்பட்ட பிழை போனைப் பாதியாகப் பிளக்க வைத்த சம்பவங்கள் தாய்வான் மற்றும் ஜப்பான் உள்ளிட்ட நாடுகளில் அரங்கேறி வந்தன. இந்நிலையில், புதிய ஐபோன்களில் இதே பிரச்சினை சீனாவிலும் அரங்கேறியுள்ளது என அந்நாட்டு செய்தி நிறுவனங்கள் தெரிவித்துள்ளன.

முன்னதாக தாய்வான் மற்றும் ஜப்பான் நாடுகளில் ஐபோன் 8 பிளஸ் மொடல்களில் பிழை ஏற்பட்ட சம்பவம் தொடர்பாக அப்பிள் நிறுவனம் முறையான விசாரணையைத் தொடங்கியுள்ளது எனத் தெரிவித்திருந்தது.

சீனாவைச் சேர்ந்த வலைத்தளத்தில் லியூ என்ற வாடிக்கையாளர் தனது ஐபோன் 8 பிளஸ் பாதியாகப் பிளந்து கொண்டது எனக் கடந்த 5 ஆம் திகதி தெரிவித்துள்ளார் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஐபோன் வெடித்தமைக்கு எவ்வித அறிகுறிகளும் காரணங்களும் இல்லாத நிலையில் தனது ஐபோனை உரிமையாளர் தான் வாங்கிய இடத்திலேயே அதனைத் திரும்ப வழங்கி விட்டார் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஐபோன் 8 பிளஸ் பாதியாகப் பிளந்து கொள்ளும் சம்பவங்களை விசாரணை செய்து முறையான நடவடிக்கை எடுக்கப்படும் என அப்பிள் நிறுவனம் சார்பில் தெரிவிக்கப்பட்ட போதும், இது தொடர்பான மற்ற தகவல்களை வழங்கவில்லை. தற்சமயம் வரை ஐபோன் 8 சீரிஸ் முன்பதிவுகள் முந்தைய ஐபோன்களை விடக் குறைவாகவே காணப்படுகின்றன.

எனினும், பெரும்பாலான ஐபோன் வாடிக்கையாளர்கள் பத்தாவது ஆண்டு ஐபோன் பதிப்பாக அறிமுகம் செய்யப்பட்ட ஐபோன் X வாங்கக் காத்திருக்கின்றனர் எனக் கூறப்படுகிறது. சிறப்பு வெளியீடான ஐபோன் X விற்பனை நவம்பர் முதல் வாரத்தில் தொடங்க இருக்கிறது. இந்தியாவில் 64 ஜிபி ஐபோன் விலை 89 ஆயிரம் ரூபா எனநிர்ணயம் செய்யப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir

சனிக்கிழமை 21.10.2017 15

## காலிதா ஸியாவுக்கு பிணை!



ஊழல் மற்றும் அவதூறு வழக்குகள் தொடர்பாக பிடி யாணை பிறப்பிக்கப்பட்ட பங்களாதேஷ் முன்னாள் பிர தமர் கலிதா ஸியா டாக்கா நீதி மன்றத்தில் சரண் அடைந்து பிணை பெற்றார்.

பங்களாதேஷ் முன்னாள் பிர தமர் கலிதா ஸியா ( வயது72) மீது அந்நாட்டின் தேசிய வரை படத்தையும் கொடியையும் அவமதித்தார் என அவதூறு வழக்குத் தொடரப்பட்டுள்ளது.

மேலும், பாகிஸ்தானுக்கு ஆதரவாக வங்காளதேசத்தை முன்னர் அவமதித்த நபர்க ளுக்குத்தனது ஆட்சியின்போது மந்திரி பதவி அளித்தமை மற் றும் தனது கணவரும் அந்நாட் டின் முன்னாள் அதிபருமான ஸியாவுர் ரஹ்மான் பெயரிலான அறக்கட்டளைப் பணத்தை தவறாகப் பயன்படுத்தி ஊழல் செய்தமை ஆகியவற்றுக்காக அவருக்குஎதிராகவழக்குகளும் தொடரப்பட்டுள்ளன.

பங்களாதேஷ் தேசியவாதக் கட்சித்தலைவராகப் பொறுப்பு வகித்துவரும் கலிதா ஸியா ஊழல் வழக்கிலும், தேசியக் கொடி அவமதிப்பு வழக்கிலும் ஆஜராக தவறியமையால் அவருக்கு எதிராக இரு பிடி யாணைகள் பிறப்பிக்கப்பட்டி ருந்தன.இந்நிலையில், கடந்த மூன்று மாதங்களாக லண்ட னில் தங்கியிருந்த கலிதா ஸியா நேற்று முன்தினம் நாடு திரும்பினார். பழைய டாக்கா நகரில் ஆலியா மதார்ஷா திடலில் அமைக்கப்பட்டுள்ள தற்காலிக நீதிமன்றத்தில் இரண்டாவது வழக்கில் நேற்று அவர் ஆஜரானார்.

நீதிமன்றுக்குத் தெரிவிக் காமல் மீண்டும் வெளிநாடு செல்லக் கூடாது என்னும் நிபந்தனையுடன் ஒரு லட்சம் டாக்கா ரொக்கப்பணத்துடன் அவருக் குப் பிணை அளித்த நீதிபதி, இவ்வழக்கின் விசா ரணையை வரும் 26ஆம் திக திக்கு ஒத்தி வைத்தார்.

# ஆப்கானில் அமெ. தாக்குதலில் பாக். தீவிரவாதத் தலைவர் பலி!

## ஆளில்லா விமானம் மூலம் நடத்தப்பட்டதாம்

காபூல்,ஒக்.21

ஆப்கானிஸ்தானில்அமெ ரிக்கா மேற்கொண்ட ஆளில்லா விமானத் தாக்கு தலில் முக்கியமான பாகிஸ் தான் தீவிரவாதத் தலைவர் ஒமர் காலித் கொராசனியும் அவரோடு சேர்ந்து மேலும் 9 தீவிரவாதிகளும் கொல் லப்பட்டனர் என அறிவிக் கப்படுகிறது.

ஜமாத் - உல் - அஹ்ரர் என்ற பெயருடைய பாகிஸ் தானியதலிபான்குழுவுக்குத் தலைவராக இருந்தார் கொரா சனி.

அக்குழுவின் செய்தித் தொடர்பாளர் இதனைத் தெரிவித்தார்.

இவரது அமைப்பு, பாகிஸ் தானுக்குள் நடந்த பல வெடி குண்டுத் தாக்குதல்களின் பின்னணியில் இருந்தது.

கடந்த ஒரு வாரத்தில் ஆளில்லா விமானத் தாக் குதல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளதாக ஆப்கன் ஊடகங்கள் தெரிவிக்கின் றன. தீவிரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படுவோர் உள் ளிட்ட 40 பேர் இத்தாக் குதல்களில் கொல்லப்பட் டனர்.

அமெரிக்க வெளியுறவுச் செயலாளர் ரெக்ஸ் டில்லர் சன் பாகிஸ்தான் வருகை தரவுள்ள நிலையில் கொரா சனி கொல்லப்பட்டுள்ளார்.

பாகிஸ்தானில் தாக்குதல் நடத்திவிட்டு ஆப்கானிஸ்



தான் எல்லையில் பதுங்கிக் கொள்ளும்தீவிரவாதிகளைக் குறிவைத்துத் தாக்கும்படி அமெரிக்காவை பாகிஸ்தான் வலியுறுத்தி வந்தது என ஆய்வாளர்கள் கருத்துத் தெரிவித்துள்ளனர்.

கடந்த ஆண்டு ஈஸ்டர் தினத்தன்று பாகிஸ்தானில் உள்ள லாகூர் நகரில் ஒரு பூங்காவில் கிறிஸ்தவர் களைக் குறிவைத்து நடத்தப் பட்ட தாக்குதலில் குறைந் தது 70 பேர் பலியாகினர். இத் தாக்குதலை தாங்கள்தான் நடத்தினோம் என பொறுப் பேற்றது ஜமாத்- உல்- அஹ் ரர்.

குவெட்டாவில் உள்ள மருத்துவமனை மீது தாக் குதல் நடத்தி 74 பேரைக் கொன்றதும் இந்த அமைப்பு தான் என்ற குற்றச்சாட்டு உண்டு.

(உ)

# இளமைக் காலக் காதலிக்கு ஒபாமா எழுதிய காதல் கடிதங்கள் அம்பலம்!

நியூயோர்க்,ஒக்.21

அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி ஒபாமா கல்லூரியில் படித்த போது தமது காதலிக்கு எழுதிய இரகசியக் கடிதங்கள் விரைவில் வெளியாக உள்ளன்.

அமெரிக்க முன்னாள் ஜனாதி பதி ஒபாமா தற்போது ஓய்வில் இருந்து வருகிறார். இவரது மனைவி மிச்செலி. இவர்களுக்கு 2 மகள்கள் உள்ளனர்.

ஒபாமா தனது இளம் வயதில் கல்லூரியில் படித்த போது முதன் முறையாக அலெக்ஸ்சாண்ட்ரா என்ற பெண்ணைக் காதலித்தார். கடந்த 1980 ஆம் ஆண்டுகளில் அவ ருக்கு பல கடிதங்கள் எழுதியுள்ளார்.

அவற்றில் 9 கடிதங்கள் மட்டும் காதல் கடிதங்கள் ஆகும். அதில் அலெக்ஸ்சாண்ட்ராவை உருகி உருகி வர்ணித்து இருக்கிறார். அதன் மூலம் அவரின் தீவிர காதலை புரிந்து கொள்ள முடியும்.

இக்கடிதங்கள் 30மக்கும் அதி



## விரைவில் பகிரங்கமாகுமாம்

கமான பக்கங்கள் கொண்டவை. இவை அனைத்தும் அட்லாண்டா பல்கலைக்கழகத்தில் பொது மக்கள் பார்வைக்கு வைக்கப்பட உள்ளன. இதற் கான அனுமதியை ஒபாமா தனது குடும்பத்துடன் கலந்து பேசி வழங்கி இருக்கிறார்.

மேலும், இக்கடிதங்களில் தான் பட்ட பொருளாதாரக் கஷ்டங்கள், கறுப்பினத்தவராகப் பிறந்தமை யால் பட்ட துயரங்கள், அவருக்கு ஏற்பட்ட காதல் தோல்விகள் என அனைத்தையும் எழுதியுள்ளார்.

ஒபாமாவின் கடிதங்கள் வெளி யாகும் என அறிவிக்கப் பட்டதில் இருந்து அவர் குறித்த ஆய்வுக்கட் டுரை எழுத அநேகர் ஆர்வமாகக் காத்திருக்கின்றனர்.

# முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீபின் மீது பாகிஸ்தானில் மற்றோர் ஊழல் வழக்கு

இஸ்லாமாபாத்,ஒக்.21

வருமானத்துக்கு அதிகமாக வெளிநாடுகளில் சொத்து குவித்தார் எனக் குற்றஞ்சாட் டப்பட்டுள்ள பாகிஸ்தான் முன் னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப், மூன்றாவது ஊழல் வழக்கில் நேற்று குற்றவாளியாகச் சேர்க் கப்பட்டார்.

பாகிஸ்தானில் பிரதமர் நவாஸ் ஷெரீப் மற்றும் அவரது குடும்பத்தினர்மீது எழுந்துள்ள 'பனாமா கேட்' ஊழல் குற்றச் சாட்டுகள் குறித்து சிறப்பு கூட்டுப் புலனாய்வுக்குழு அமைத்து விசாரணை நடத்த கடந்த மே மாதம் பாகிஸ்தான் உயர் நீதிமன்றம் உத்தர விட்டது.

கூட்டுப் புலனாய்வுக் குழு வின்விசாரணை அறிக்கையை ஆய்வு செய்த உயர் நீதிமன் றம், நவாஸ் ஷெரீப் மீதான குற்றஞ்சாட்டுக்கு முகாந்திரம் இருப்பதாககூறி, அவரை தகுதி நீக்கம் செய்து உத்தர விட்டது. இதையடுத்து, கடந்த ஜூலை மாதம் 28ஆம் திகதி அவர் பதவியை விட்டு விலகினார்.

அவர் மீது விரிவான விசா ரணை நடத்துமாறும், ஆறு மாதங்களுக்குள் விசார ணையை முடிக்க வேண்டும் என்றும் பாகிஸ்தான் தேசிய பொறுப்புடைமை நீதிமன்றத் துக்கு உயர் நீதிமன்றம் உத்தர



விட்டிருந்தது. அவர் மீது இரு ஊழல் வழக்குகளில் குற்றப் பத்திரிகை தாக்கல் செய்யப் பட்டுள்ளது.

இந்த நிலையில், நவாஸ் ஷெரீப் குடும்பத்துக்கு சொந்த மான 'ஃபிளாக்ஷிப்' நிதி நிறு வனம் தொடர்பான வெளி நாட்டு பணப் பரிமாற்றம் மற் றும் வருமானத்துக்கு அதிக மாக வெளிநாடுகளில் சொத்து குவித்தமை தொடர்பாக நவாஸ் ஷெரீப் மீது தேசிய பொறுப் புடைமை நீதிமன்ற நீதிபதி முஹம்மது பஷீர்சும்மன்நேற்று குற்றப்பத்திரிகை பதிவு செய்தார்.

நவாஸ் ஷெரீப் லண்டனில் உள்ளமையால் அவரது வழக் கறிஞர் ஜாபிர் கான் குற்றப் பத்திரிகையின் நகலை பெற் றுக் கொண்டார். ஒரே ஊழல் குற்றச்சாட்டுக்காக தனித்தனி யாக மூன்று வழக்குகளை தொடர்ந்துள்ளமை தனது கட் சிக்காரரின் (நவாஸ் ஷெரீப் பின்) அடிப்படை உரிமையை மீறும் வகையில் அமைந்துள் ளது என ஜாபிர் கான் குறிப்பிட் டுள்ளார்.

(உ)

## மைலோ கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி:

# கிளிநொச்சியிலிருந்து 4 அணிகள் 'சுப்பர் 20' குழுமத்துக்குத் தெரிவு









மைலோ கிண்ண உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில், கிளிநொச்சி மாவட்டக் கழகங்களுக்கிடையில் நடைபெற்ற போட்டி யில், ஜெகமீட்பர், சென்.ஆன்ஸ், நாச்சிக்குடா சென்.ஜேம்ஸ் மற்றும் சென். ஜேம்ஸ் அணிகள், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்ட அணிகளை உள்ளடக்கி நடைபெறவுள்ள 'சுப்பர் 20' அணிகளுக்குள் உள்நுழைந்துள்ளன.

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களும் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள உதைபந்தாட்டக் கழகங்கள் மற்றும் பாடசாலை அணிகளுக்கிடையில் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி மாவட்டக் கழகங்களுக்கிடையிலான போட்டி முழங்காவில் விநாயகர் மைதானத்தில் கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை நடைபெற்றது.

முதற்சுற்று ஆட்டங்களில், அன்புஐக்கியம்விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் கரடிக்குன்று விளையாட் டுக்கழகத்தையும், கலை ஒளி விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் சென்.சிற்றி விளையாட்டுக் கழகத்தையும் வென்றன. செந்தமிழ், இரணை தீவுசென். மேரிஸ், நாச்சிக்குடா சென். மேரிஸ், சென்.ஜேம்ஸ் அணிகளுக்கான எதிரணிகள் வருகை தராமையால், அந்த நான்கு அணிகளும் முதற் சுற்றில் வெற்றிபெற்ற அணிகளாக அறிவிக்கப்பட்டன. இதனைவிட ஜெகமீட்பர், ஜின்னா, இளந்தளிர், சென். ஆன்ஸ், சென்.செபஸ்ரியன், இரணைமாதா நகர் சென். மேரிஸ், ஜொலிபோய்ஸ், ஐயனார், நாச்சிக்குடா சென். மேரிஸ், செந்தாரகை, சென். அன்ரனீஸ், விநாயகர்அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றில் இருந்து போட்டிகளில் பங்குபற்றின. அதிலும், சென். செபஸ்ரியன், சென்.அன்ரனீஸ், ஐயனார் அணிகள் வருகை தரவில்லை.

இரண்டாம் சுற்றில், ஜெகமீட்பர் அணி 2:1 என்ற கோல்கள் கணக் கில் அன்பு ஐக்கியம் அணியையும், இளந்தளிர் அணி, 4:2 என்ற கோல்கள் கணக்கில் ஜின்னா அணியையும், சென்.ஆன்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் செந்தமிழ் அணியையும், கலை ஒளி அணி, 3:2 என்ற பெனால்ட்டி உதையின் மூலம் ஜொலி போய்ஸ் அணியையும், சென். ஜேம்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் செந்தாரகை அணியையும் வென்றன.

இரணைமாதாநகர் சென். மேரிஸ், நாச்சிக்குடா சென். மேரிஸ், விநாயகர் அணிகளுக்கான எதிரணிகள் வருகை தராமையால் அந்த அணிகள் இரண்டாம் சுற்றில் வெற்றி பெற்ற அணிகளாக அறிவிக்கப்பட்டன.

மூன்றாவது சுற்றில், ஜெகமீட்பர் அணி, 3:2 என்ற பெனால்ட்டி உதையின் மூலம் இளந்தளிர் அணியையும், சென்.ஆன்ஸ் அணி, 1:0 என்ற கோல் மூலம் இரணைமாதாநகர் சென்.மேரிஸ் அணியையும், நாச்சிக்குடா சென். மேரிஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் கலை ஒளி அணியையும், சென். ஜேம்ஸ் அணி, 1:0 என்ற கோல் கணக்கில் விநாயகர் அணியையும் வென்றன.

## மைலோ கிண்ணம்

# பாரதி, சென். மேரிஸ் அணி 'சுப்பர் 20' அணிகளுக்குள்




**கங்கா**

நெஸ்லே லங்கா நிறுவனத்தின் மைலோ குழுமமும், யாழ் மற்றும் கிளிநொச்சி மாவட்ட செயலகங்களும் இணைந்து யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களிலுள்ள உதைபந்தாட்டக் கழகங்கள் மற்றும் பாடசாலைஅணிகளுக்கிடையில் உதை பந்தாட்டச் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றன.

கிளிநொச்சி - யாழ்ப்பாணம் ஆகிய மாவட்டங்களில் 11 இடங்களில் இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள்நடைபெற்று வருகின்றன.

இதில் மருதங்கேணிப் பிரதேச கழகங்களுக்கிடையிலான போட்டிகள் உதயசூரியன் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றன.

முதற்சுற்று ஆட்டங்களில், கணேசானந்தா விளையாட்டுக் கழகம் 4:3 என்ற கோல்கள் கணக்கில் அருணோதயா விளையாட்டுக்கழகத்தையும், சென்.மேரிஸ் விளையாட்டுக்கழகம் 4:3 என்ற கோல்கள் கணக்கில் சக்திவேல் விளையாட்டுக்கழகத்தையும் வென்றன. செந்தமிழ் விளையாட்டுக்கழகம், எதிரணியான தாளையடி சென்.அன்ரனீஸ் விளையாட்டுக்கழகம் வருகை தராமையால் வெற்றிபெற்றது. பாரதி விளையாட்டுக்கழகம், உதய சூரியன் விளையாட்டுக்கழகம், வெள்ளிநிலா, சென். செபஸ்ரியன், சென்.பிலிப்னேரியஸ் அணிகள் நேரடியாக இரண்டாம் சுற்றில் இருந்து பங்குபற்றின. இருந்தும், இவற்றில் சென்.பிலிப்னேரியஸ் அணி வருகை தரவில்லை.

இரண்டாம் சுற்றில், பாரதி விளையாட்டுக்கழகம் 3:1 என்ற கோல்கள் கணக்கில் கணேசானந்தா விளையாட்டுக்கழகத்தையும், செந்தமிழ் விளையாட்டுக்கழகம் 2:0 என்ற கோல்கள் கணக்கில் உதயசூரியன் விளையாட்டுக்கழகத்தையும், சென். செபஸ்ரியன் விளையாட்டுக் கழகம் 3:0 என்ற கோல்கள் கணக்கில் வெள்ளிநிலா விளையாட்டுக்கழகத்தையும் வென்றன. சென்.பிலிப்னேரியஸ் அணி வருகை தராமையால், சென். மேரிஸ் அணி வெற்றியைப் பெற்றுக்கொண்டது.

மூன்றாவது சுற்றில், பாரதி அணி, 1:0 என்ற கோல் கணக்கில செந்தமிழ் அணியையும், சென். மேரிஸ் அணி 1:0 என்ற கோல் கணக்கில் சென்.செபஸ்ரியன் விளையாட்டுக் கழகத்தையும் வென்றன.

பாரதி மற்றும் சென்.மேரிஸ் அணிகள், யாழ்ப்பாணம் - கிளிநொச்சி மாவட்டங்களின் கழகங்களை உள்ளடக்கிய வகையில் நடைபெறவுள்ள சுப்பர்- 20 அணிகளுக்குள் உள்நுழைந்துள்ளன.



# பொன் விபுலானந்தன் ஞாபகார்த்த கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி

(கங்கா)

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரியின் மாணவர் முதல்வர் சபையின் ஏற்பாட்டில், மறைந்த பொன் விபுலானந்தன் ஞாபகார்த்தமாக, வடமாகாண ரீதியில் கூடைப்பந்தாட்டச் சுற்றுப்போட்டி ஒன்று கடந்த 16 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் மத்திய கல்லூரி கூடைப்பந்தாட்ட திடலில் நடைபெற்று வருகின்றது.

இந்தச் சுற்றுப்போட்டியின் ஆட்டங்கள் லீக் முறையில் நடைபெற்று வருகின்றன.

## ஆரம்ப நிலை ஆட்டங்களின் முடிவுகள்



**வவுனியா தமிழ் மகா வித்தி யாலயம் வெற்றி**

17 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டத்தில் வவுனியா தமிழ் மகா வித்தியாலய அணியை எதிர்த்து சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி மோதியது. இதில் முதல்பாதியை சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணி, 26:23 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றியது.

இரண்டாவது பாதியை வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், 33:25 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றியது. முடிவில் வவுனியா தமிழ் மகா வித்தியாலயம், 56:51 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**கொக்குவில் இந்துக் கல்லூரி அணி வெற்றி**

17 ஆம் திகதி இடம்பெற்ற மற்றுமோர் ஆட்டத்தில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணியை எதிர்த்து மல்லாவி மத்திய கல்லூரி அணி மோதியது. முதல்பாதி ஆட்டத்தை, கொக்குவில் இந்துக் கல்லூரி அணி, 34:20 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது.

தொடர்ந்தும், அதே உத்வேகத்துடன் ஆடிய கொக்குவில், 59:15 என்ற புள்ளிகள் அடிப்படையில் இரண்டாவது பாதி ஆட்டத்தையும் கைப்பற்றியது. முடிவில் கொக்குவில் இந்துக் கல்லூரி அணி 93:35 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி வெற்றி**

18 ஆம் திகதி இடம்பெற்ற ஆட்டமொன்றில், யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணியை எதிர்த்து கொக்குவில் இந்துக் கல்லூரி அணி மோதியது. முதல்பாதி ஆட்டத்தை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 36:26 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. அதே உத்வேகத்துடன், இரண்டாவது பாதியை யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 36:33 என்ற புள்ளிகள் அடிப்படையில் பெற்றது. முடிவில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அணி 72:59 என்ற மொத்தப் புள்ளிகள் அடிப்படையில் வென்றது.

**சென்.பற்றிக்ஸ் அணி வெற்றி**

18 ஆம் திகதி இடம்பெற்ற போட்டியில் சென்.பற்றிக்ஸ் கல்லூரி அணியை எதிர்த்து மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி மோதியது. முதல்பாதி ஆட்டத்தை சென். பற்றிக்ஸ் கல்லூரி அணி, 30:18 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப்பற்றியது. இரண்டாவது பாதி ஆட்டத்தை மானிப்பாய் ஏஞ்சல் சர்வதேச பாடசாலை அணி 32:22 என்ற புள்ளிகள் அடிப்படையில் கைப் பற்றியது. முடிவில், சென்.பற்றிக்ஸ் கல் லூரி அணி 52:50 என்ற குறுகிய புள்ளிகள் வித்தியாசத்தில் வென் றது.



# துறையூர் ஐயனார் கிண்ணம் வென்றது

(கங்கா)

தீவக உதைபந்தாட்ட லீக்கின் அனுமதியுடன் வேலணை துறையூர் கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கத்தின் அனுசரணையில் ஐயனார் சனசமூக நிலையம் மற்றும் ஐயனார் விளையாட்டுக்கழகம் ஆகியன இணைந்து தீவுகளுக்கான கிண்ணம் - 2017 உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டியொன்றை நடத்தின.

ஐயனார் சனசமூக நிலையம் மற்றும் ஐயனார் விளையாட்டுக்கழகம் ஆகியவற்றின் 69 ஆவது ஆண்டு நிறைவையொட்டி இந்த உதைபந்தாட்டச் சுற்றுப் போட்டி நடத்தப்பட்டது. 29 அணிகள் பங்குபற்றிய இந்தச் சுற்றுப் போட்டியின் ஆட்டங்கள் நொக்கவுட் முறையில் இடம்பெற்றன.

சுற்றுப்போட்டியில் இறுதிப் போட்டியில் துறையூர் ஐயனார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சன்ஸ்ரார்ஸ் விளையாட்டுக்கழகம் மோதியது. இந்த இறுதிப் போட்டி கடந்த 17 ஆம் திகதி இரவு வேலணை துறையூர் விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்றது.

முதல்பாதி ஆட்டத்தில் துறையூர் ஐயனார் அணி 1 கோலைப் போட்டது. முதற்பாதியாட்டம் அந்தக் கோலுடன் முடிவுக்கு வந்தது. இரண்டாவது பாதியில் ஐயனார் அணி, மேலும் 3 கோல்களையும் போட்டது. முடிவில், துறையூர் ஐயனார் அணி 4:0 என்ற கோல்கள் கணக்கில் வென்றது.

## ஒரு நாள் ஆட்டத் தர வரிசை:

# இந்தியாவை இரண்டாவது இடத்துக்கு மீளவும் பின்தள்ளியது தென்னாபிரிக்கா

பங்களாதேஷுக்கு எதிரான ஒருநாள் கிரிக்கெட் தொடரை கைப்பற்றியதன் மூலம் இந்தியாவை பின்னுக்குத் தள்ளி தென்னாபிரிக்கா மீண்டும் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.

ஒருநாள் கிரிக்கெட் தரவரிசையில் தென்னாபிரிக்கா முதல் இடத்தில் இருந்தது. ஆஸ்திரேலியாவிற்கு எதிரான ஐந்து போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடரை இந்தியா 4:1 எனக் கைப்பற்றியது. இதன்மூலம் முதல் இடத்தில் இருந்த தென்னாபிரிக்காவை பின்னுக்குத் தள்ளி இந்தியா முதல் இடத்தைப் பிடித்தது.

தற்போது தென்னாபிரிக்கா - பங்களாதேஷ் அணிகளுக்கு இடையிலான மூன்று போட்டிகள் கொண்ட ஒருநாள் கிரிக்கெட் தொடர் நடைபெற்று வருகிறது.

முதல் இரண்டு போட்டிகளில் தென்னாபிரிக்கா வெற்றி பெற்றது. இதன்மூலம் மீண்டும் தென்னாபிரிக்கா முதல் இடத்தை பிடித்துள்ளது.

இரண்டு அணிகளும் 120 புள்ளிகள் பெற்றுள்ளன. ஆனால், தென்னாபிரிக்கா தசமபுள்ளி அடிப்படையில் முதல் இடத்தைப் பிடித்துள்ளது.




# பாக். வீரர் ஹபீஸின் பந்துவீச்சு சந்தேகம் தருவதாக முறைப்பாடு!



துபாய்,ஒக்.21

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பல்துறை ஆட்டக்காரர் முகமது ஹபீஸின் பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருக்கின்றது எனக் கள நடுவர்கள், ஐ.சி.சி. போட்டி நடுவரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

பாகிஸ்தான் கிரிக்கெட் அணியின் பல்துறை ஆட்டக்காரரான 37 வயதான முகமது ஹபீஸ், சுழற்பந்து வீசக்கூடியவர். இலங்கைக்கு எதிரான 3ஆவது ஒரு நாள் போட்டியின் போது அவர் 8 ஓவர்கள் பந்து வீசி 39 ஓட்டங்கள் விட்டுக்கொடுத்து ஒரு விக்கெட் எடுத்தார்.

இந்த நிலையில் அவரது பந்து வீச்சு சந்தேகம் அளிக்கும் வகையில் இருக்கிறது எனக் கள நடுவர்கள், ஐ.சி.சி. போட்டி நடுவரிடம் முறைப்பாடு தெரிவித்துள்ளனர்.

கடந்த 3 ஆண்டுகளில் அவர் 3 ஆவது முறையாக இத்தகைய சர்ச்சையில் சிக்கியுள்ளார். அடுத்த 14 நாள்களில் ஹபீஸ் தனது பந்து வீச்சை பரிசோதனைக்குட்படுத்தியாக வேண்டும். அதுவரை அவர் தொடர்ந்து பந்து வீசலாம் எனத் தெரிவிக்கப்படுகிறது.

# அநேக பாலியல் வல்லுறவுச் சம்பவங்கள் பெண்களின் இணக்கத்துடன்தானாம்!

இலங்கையில்68சதவீதமான பாலியல்வல்லுறவுச்சம்பவங்கள் பெண்களின்விருப்பத்தின்அடிப் படையிலேயேநடக்கின்றனஎனப் பொலிஸ்புள்ளிவிவர அறிக்கை யில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பாலியல் வல்லுறவு தொடர் பாகபொலிஸாருக்குக்கிடைக்கப் பெற்றமுறைப்பாடுகளை அடிப் படையாகவைத்தே இந்தத் தக வல் வெளியிடப்பட்டுள்ளது.

இலங்கைச்சட்டத்தின்படி16 வயதுக்கும் குறைந்த இளம் பெண்களை அவர்களது விருப் பத்தின்பேரில்பாலியல்உறவுக்கு உட்படுத்தினாலும்அதுபாலியல் வல்லுறவுஎனக்கருதப்படுவதே இதற்கு காரணம் எனவும் அந்த புள்ளிவிவர அறிக்கையில்தெரி விக்கப்பட்டுள்ளது.

இதன்படி கடந்த வருடம் (2016) இரண்டாயிரத்து முப்பத் தாறு முறைப்பாடுகள் பொலி ஸாருக்குக் கிடைக்கப்பெற்றுள் ளன. இதில் 350 சம்பவங்கள் 16 வயதுக்கும் மேற்பட்டவர்கள் தொடர்பாகஅமைந்துள்ளஅதே நேரம், 16 வயதுக்கும் குறைந்த ஆயிரத்து அறுநூற்று எண்பத் தாறு இளம் பெண்கள்பாலியல் வல்லுறவுக்குஉள்ளாகியுள்ளனர்.

இதில் ஆயிரத்து 394 சம் பவங்கள்குறித்தபதினாறுவயது கடக்காதபெண்களின்சுயவிருப் பத்தின் பேரில் இடம்பெற்றுள் ளன. 292 சம்பவங்கள் அவர் களின் சம்மதமின்றி பலவந்த மாகநடைபெற்றுள்ளன.மேலும் பதினாறு வயதுக்கு மேற்பட்ட 642 பெண்கள் பலவந்தமாகப் பாலியல் வல்லுறவுக்கு உள் ளாக்கப்பட்டுள்ளனர்.

இதனடிப்படையில் ஒட்டு மொத்தமாகப் பார்க்கும்போது 68 வீதமான பெண்கள் தமது விருப்பத்தின் பேரிலேயே பாலி யல்வல்லுறவுக்குஉள்ளாகியுள்ள னர் என தெரியவந்துள்ளது.

# ஓட்டோக்களை மட்டுப்படுத்த புதிய நடவடிக்கைகள், விதிகள்

நாட்டில்35வயதுக்குஉட்பட் டவர்கள்ஓட்டோக்களைச்செலுத் துவதற்குத் தடை விதிக்கும் புதிய சட்டம்விரைவில்அறிமுகப்படுத் தப்படும் எனப் போக்குவரத்து அமைச்சர் நிமால் சிறிபால டி சில்வா தெரிவித்துள்ளார்.

இறக்குமதிசெய்யப்படும்ஓட் டோக்களின்எண்ணிக்கையைக் குறைப்பதற்கும் நடவடிக்கை எடுக்குமாறு நிதி அமைச்சிடம் போக்குவரத்து அமைச்சர் நேற்றுப்பிரேரணையொன்றை முன்வைத்துள்ளார்.

நாட்டில் முப்பது லட்சத்துக் கும் மேற்பட்ட ஓட்டோக்கள் இயங்குகின்றன. வாகன நெரி சலுக்கும் அதிகமான விபத்துக் களுக்கும் ஓட்டோக்களே கார ணம் என்று கூறப்படுகிறது. (உ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதுவரை திங்களும், செவ் வாயும்தமிழ்அரசியல்கைதிகள் விடயத்தில் மக்களினதும் அரசி னதும் சிரத்தையைத் திருப்பும் விதத்தில் கவனவீர்ப்புப்போராட் டங்களில் ஈடுபடவும் மாணவர் கள் தீர்மானித்துள்ளனர்.

ஜனாதிபதியை நேற்று முன் தினம் கொழும்பில் சந்தித்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மாணவப் பிரதிநிதிகள் அது குறித்து நேற்று ஊடகவியலா ளர்களுக்கு விளக்கம் அளித்த னர்.

இந்த ஊடகவியலாளர் சந் திப்பில் யாழ்.பல்கலைகழக அனைத்துபீடமாணவர்ஒன்றியத் தலைவர் கிருஷ்ணமேனன், கலைப்பீட மாணவர் ஒன்றியத் தலைவர் அனுராஜ் மற்றும் சட்ட பீடமாணவன்தனஞ்ஜயன்ஆகி யோர் கலந்துகொண்டு கருத் துக்களைத் தெரிவித்தனர். அவர்கள் அங்கு மேலும் தெரி வித்தவை வருமாறு:-

இச்சந்திப்பில் பல்கலைக் கழக மாணவர்கள் சார்பில் பிர தானமாக ஐந்து கோரிக்கை களை நாம் ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தோம்.

1.அநுராதபுரத்திற்கு மாற்றப் பட்டதமிழ்அரசியல்கைதிகளின் வழக்குகள் மீளவும் வவுனியா மேல் நீதிமன்றத்திற்கு அல்லது யாழ்.மேல் நீதிமன்றுக்கு மாற் றப்பட வேண்டும்,

2.பாலியல் குற்றவாளிகள், மரண தண்டனைக் குற்றவாளி கள் போன்ற தரப்புகளுடன் இந்த அரசியல்கைதிகளை ஒன் றாகத் தடுத்து வைத்திருக்கக் கூடாது,

3.அனைத்து அரசியல் கைதிகளையும் நிபந்தனை யின்றி ஜனாதிபதி தனது நிறை வேற்று அதிகாரத்தினூடாக விடுதலை செய்ய வேண்டும்,

4.பயங்கரவாதத் தடைச் சட்டம் நீக்கப்பட வேண்டும்.

5.பொலிஸாரால் சுட்டுக் கொல்லப்பட்ட சுலக்ஷன், கஜன் ஆகியோரது குடும்பங்களுக்கு நஷ்டஈடு வழங்கப்பட வேண்டிய தையுடன்அவர்களதுகொலைக்கு நீதி பெற்றுக் கொடுக்கப்பட வேண்டும்.

– ஆகிய ஐந்து கோரிக்கை களை நாம் ஜனாதிபதியிடம் முன்வைத்திருந்தோம்.

ஆனால் நாம் முன்வைத்த கோரிக்கைகள் தொடர்பாக ஜனாதிபதி தீர்க்கமான பதில் எதனையும் வழங்கியிருக்க வில்லை.குறிப்பாகநாம்கோரிய கோரிக்கைகளுக்கு எம்மைத் திருப்திபடுத்துவதற்காக மழுப் பலான பதில்களையே வழங்கி யிருந்தார். வழக்கு நடவடிக்கை களைநீதிமன்றுக்கு மாற்றுவது தொடர்பாக நீதியமைச்சரே முடி வெடுக்க முடியும். அது தொடர் பில் தன்னால் எதுவிதமான முடி வையும் எடுக்க முடியாது எனக் கூறியிருந்தமையுடன் இது விடயத்தை நீதியமைச்சிடமே தான் விட்டுவிடுகிறார் எனவும் ஜனாதிபதி தெரிவித்திருந்தார்.

தற்போது நாட்டின் நீதிய மைச்சர் மற்றும் சட்டமா அதிபர் ஆகியோர் வெளிநாட்டில் இருப் பதால் அவர்கள் நாட்டிற்கு வந் ததுமே இப் பிரச்சினை தொடர் பாகக் கலந்துரையாடி முடி வொன்றை அறிவிக்க முடியும், அதற்காக எதிர்வரும் புதன் கிழமை வரை கால அவகாசம் தாருங்கள்எனஜனாதிபதிஎமக்கு தெரிவித்திருந்தார்.

எனினும் நாம் ‘இல்லை, இன்றே (நேற்று முன்தினமே) ஒரு தீர்வொன்று தரப்பட வேண் டும்' எனக் கூறி அன்று மாலை வரை அங்கே இருந்தோம். ஆனால் நாம் காத்திருந்தும் எந்தவிதமான பயனும் ஏற்பட வில்லை.

இவ்வாறான நிலையில் ஜனாதிபதி எமக்கு வாக்களித்து அதனை நிறைவேற்றாது விட்ட அனுபவமொன்றை நாம் ஏற்கனவே பெற்றுவிட்டோம்.

அதாவது, கடந்த வருடம் பல் கலைக்கழக மாணவர்கள் இரு வர்பொலிஸாரால்சுட்டுக்கொல் லப்பட்டபின்னர்அதுதொடர்பாக நாம் ஜனாதிபதியைச் சந்தித்துக் கலந்துரையாடியிருந்தோம்.

இதன்போது எமக்கு ஜனாதி பதி அளித்த உறுதிமொழி எத னையும் நிறைவேற்றவில்லை.

எனவே அந்தத்தவறை நாம் இனியும்விடமாட்டோம்.ஆகவே, ஜனாதிபதி கோரிய கால அவகா சத்துக்குள் அவர் கூறியதை போன்று நாங்கள்ஏற்றுக்கொள் ளக்கூடிய நியாயமான தீர் வொன்றை வழங்க வேண்டும் எனவலியுறுத்தி, அதற்கு அழுத் தம் கொடுக்கும் வகையில் எதிர் வரும் புதன்கிழமை வரை நாம் அனைத்து பீட மாணவர்களும் வகுப்பு புறக்கணிப்பில் ஈடுபடத் தீர்மானித்துள்ளோம்.

அத்துடன் எதிர்வரும் திங் கள், செவ்வாய்க்கிழமைகளில் கவனவீர்ப்புப்போராட்டங்களை யும் மேற்கொள்ளவுள்ளோம். ஜனாபதி கோரிய கால அவகா சத்துக்குள்அவர்கூறியபடிசெய் யாவிட்டால் எமது போராட்டம் சமூகமயப்படுத்தப்பட்ட தொடர் போராட்டமாக வடிவம் மாறும்.

அரசியல் கைதிகள் விட யத்தில் தமிழ் அரசியல் தலை வர்கள் தமக்குள்ளேயே முட்டி மோதிக்கொள்கின்றார்களே தவிர, இப்பிரச்சினையைத்தீர்ப் பதற்கு முன்னிற்கவில்லை.

குறிப்பாக இந்த வருடத் தீபாவளி பண்டிகையை நாம் அரசியல் கைதிகளுக்காகக் கறுப்புத் தீபாவளியாக அனுஷ் டித்து அவர்களுக்காக ஜனாதி பதியுடன் பேச்சுக்குச் சென்ற போது, ஜனாதிபதிசெயலகத்தில் நடைபெற்ற தீபாவளி நிகழ்வில் தமிழ்அரசியல்வாதிகள் கலந்து கொண்டிருந்தார்கள்.

இதனை விட அரசியல்கைதி கள் விடயத்தை மையமாகக் கொண்டுதமதுசுயலாபஅரசியல் மோதல்களை மேற்கொண்டு வருகின்றார்கள். எனவே இது நிறுத்தப்படவேண்டும்.தமிழ்அரசி யல் தலைமைகள் அரசி யல் கைதிகளதுபிரச்சினையைத்தீர்ப் பதற்கு ஓரணியில் இணைந்து செயற்படவேண்டும். - என்றார்.

## பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

களின் போராட்டம் வேறு வேறு வடிவங் களை எடுக்கும்.

யாழ். பல்கலைக்கழக மாண வர்ஒன்றியத்தலைவர்கிருஷ்ண மேனன் நேற்று நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்தார்.

இந்த விடயத்தில் மாணவர் கள் மட்டும் வகுப்புப் பகிஷ் கரிப்பு போராட்டம் உட்பட அனைத்துப் போராட்டங்களுக் கும் யாழ். பல்கலைக்கழக சமூ கத்தினரும், பொது அமைப்புக் களைச் சேர்ந்தோரும், பொது மக்களும் முழு ஆதரவு வழங்க வேண்டும் என்றும் அவர் கோரி னார். (உ)

## ரயில்வே...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ரயில்வே சேவையாளர்களின் தொழிற்சங்கம் அறிவித்துள் ளது.

பிரதமர்மற்றும்போக்குவரத்து பிரதி அமைச்சர் அசோக அபய சிங்க ஆகியோருடன் இடம் பெற்ற பேச்சுகளை அடுத்து, இந்தமுடிவுஎடுக்கப்பட்டுள்ளதாக தொழில் சங்கம் தெரிவித்துள் ளது.

வேதனம்உள்ளிட்டபல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து, நேற்று நள்ளிரவு முதல் பணிப் புறக்கணிப்பில் ஈடுபட ரயில்வே சேவையாளர் சங்கம் முன்னர் முடிவு செய்திருந்தமை குறிப்பி டத்தக்கது.

## திங்கள்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தீபாவளி நிகழ்வில் தமக்கு அருகில் இருந்த சம்பந்தனி டம், அன்று காலையில் யாழ். பல்கலைக்கழக மாணவர் பிரதிநிதிகள் மற்றும் சிவாஜி லிங்கம் தலைமையில் கைதி களின் உறவினர்கள் வந்து சந்தித்த விடயத்தை ஜனாதிபதி பிரஸ்தாபித்தாராம்.

சிவாஜிலிங்கம் கூறிய விட யங்களைத் தாம் கிரகித்தார் என்று குறிப்பிட்ட ஜனாதிபதி, இவ்விடயங்களை ஒட்டி சில தீர்மானங்களை திங்கள் அல் லது செவ்வாய்க்கிழமை தாம் எடுத்து அறிவிப்பார் என்றும் சம்பந்தனிடம் கூறினார் என்று தெரிகின்றது.

"அவர்கள் கூறிய விடயங் களில் சில என்னால் செய்ய முடி யும். சில என்னால் செய்ய இய லாதவை. செய்ய முடிந்தவற் றைச்செய்வேன்." – என்றும் சம் பந்தனிடம் ஜனாதிபதி குறிப் பிட்டார் என அறிய வந்தது. (உ)

## சட்டமா...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அரசியல் கைதிகள் விடயத் தில் சட்டமா அதிபர் மற்றும் நீதி அமைச்சரின் கருத்துக்களை உள்வாங்கியே ஜனாதிபதி செயற்படுகின்றார் என்று தெரி கின்றது.

எனவே ஜனாதிபதியைச் சந்திக்க முன்னர் மற்றைய இரு வரையும் சந்தித்து அவர்களின் கருத்து நிலைப்பாட்டைத் தெளி வாக அறிந்து கொள்ள விரும்பு கிறேன்.

இந்த இருவரும் இப்போது வெளிநாட்டில் உள்ளனர். திங் கள் அளவில் அவர்கள் நாடு திரும்பியதும் அவர்களைச் சந் திப்பேன்.

அதன்பின்னர்தான் ஜனாதி பதியுடன்இதுகுறித்துப்பேசுவேன்.

அரசியல் கைதிகள் விடயத் தில் ஜனாதிபதி சில விடயங் களைச்செய்யவேண்டிய–முடிவு களை எடுக்க வேண்டிய – கட்டா யத்தில் இருக்கின்றார். அதை அவர் செய்வதற்கு விட்டுப் பிடித் துப் பார்ப்பதுதான் நல்லது.

அவராகச் செய்ய வேண்டிய வற்றை அவர் செய்யாவிட்டால் விளைவுகளை அவர்தான் எதிர் கொள்ள வேண்டும்.

ஆகவேதான் நான் சற்றுப் பொறுத்துச் செயற்பட விழை கிறேன்.

உரிய சமயத்தில் ஜனாதிபதி யைச் சந்தித்துச் சொல்ல வேண்டியவற்றைஅதற்குஉரிய முறையில் கூறுவேன்.

– இப்படி சம்பந்தன் தமக்கு நெருக்கமானவர்களிடம் கூறி யிருக்கின்றார் என அறிய வந் தது. (உ)

## நடுக்கடலில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாட்டுப்படகுஒன்றுஏற்றிச்சென்று கொண்டிருந்தது. அப்போது கடல் சீற்றம் காரணமாக அந்தப் படகு கடலில் மூழ்கியது.

படகு மூழ்கியதால் செய்வதறி யாது கடலில் திண்டாடிய மீனவர் கள் ஏழு பேரும் உயிருக்குப் போராடியபடி இருந்தனர்.

சர்வதேச கடல் எல்லையில், கொழும்புக்குத் தென்கிழக்குப் பகுதியில்,28கடல்மைல்தொலை வில் இச்சம்பவம் நிகழ்ந்தது.

அப்போது, மீனவர்கள் சிலர் உயிருக்குப் போராடியபடி இருக் கின்றமையைக் கண்ட இலங்கை மீனவர்கள், உடனடியாக அப்பகு திக்கு விரைந்து சென்று, ஏழு மீனவர்களையும் பத்திரமாக மீட்டனர்.

மீட்கப்பட்ட மீனவர்கள் காலி கடற்படை முகாமில் ஒப்படைக்கப் பட்டுள்ளனர்.

## விடயத்தை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று நாடாளுமன்றத்தில் இத்தகவலை வெளியிட்டார் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க.

சில சட்டப் பிரச்சினைகள் காரணமாக உத்தேச உள்ளூ ராட்சித் தேர்தல்கள் வரும் ஜனவரி மாதத்தையும்தாண்டிப்பிந்தலாம் என எதிர்க்கட்சி உறுப்பினர் தினேஷ் குனவர்த்தன நாடாளு மன்றத்தில் நேற்று எச்சரித்தார்.

அதையடுத்தே அடுத்த வாரத் தில் கட்சித் தலைவர்களின் கூட் டத்தைக் கூட்டி இந்த விடயத்தை விரைந்து சுமுகமாகத் தீர்ப்பது குறித்து ஆராயலாம் என்று பிரத மர் பதிலளித்தார். (உ)

## யாழ். பல்கலை...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வித்துள்ளது.

அரசியல் கைதிகளின் விவ காரம் தொடர்பாக தமக்கும் ஜனா திபதிக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்புத் தொடர்பாக தெளிவு படுத்தும் ஊடகவியலாளர் சந்தி பொன்று நேற்று யாழ்ப்பாணப் பல்கலைகழகத்தின் மாணவர் ஒன்றியத்தினால் நடத்தப்பட்டி ருந்தது. இச்சந்திப்பின் போதே ஒன்றியப் பிரதிநிதிகள் மேற் கண்ட விடயத்தை தெரிவித் தார்கள்.

இந்த ஊடகவியலாளர் சந் திப்பில் சட்டபீட இறுதியாண்டு மாணவன் தனஜன் கருத்து தெரி விக்கையில்–

அநுராதபுரம் சிறைச்சாலை யில் தொடர்ச்சியாக உண்ணா விரதம் இருக்கும் மூன்று தமிழ் அரசியல்கைதிகளினதும் கோரிக் கைகளையும் நிறைவேற்றக் கோரியாழ்.பல்கலைகழக சமூகத் தால் பல்வேறு போராட்டங்கள் நடத்தப்பட்டிருந்தன.

அத்துடன் இவ்விடயம் தொடர் பாக ஜனாதிபதியுடன் நேரடியாகச் சந்தித்துக் கலந்துரையாடி அதற் கான தீர்வொன்றைப் பெற்றுத் தருவார் எனக் கூறி வடமாகாண ஆளுநர் றெஜினோல்ட் குரே எம்மை ஜனாதிபதியைச் சந்திக்க அழைத்துச் சென்றிருந்தார்.

நாம் ஆளுநருடைய பேச்சை நூற்றுக்குநூறு வீதம்நம்பியிருந் தோம். ஆனால் நேற்றுமுன்தி னம்ஜனாதிபதியுடன்இடம்பெற்ற சந்திப்பில் எமது நம்பிக்கைகள் அனைத்தும்பயனற்றுப்போயிருந் தன. ஏனெனில் எமக்குத் தெளி வான பதிலொன்றை ஜனாதிபதி வழங்கியிருக்கவில்லை. – என அவர் தெரிவித்தார்.

## தலைமறைவான...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசிய அமைப்பின் பொதுச் செயலாளர் வண. அரம்பே பொல ரத்னசார தேரர் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

கண்டியிலிருந்து கொழும்பு நோக்கிப் பஸ்ஸில் பயணித்துக் கொண்டிருந்தஅவரைநித்தம்பு வப் பிரதேசத்தில் வைத்துப் பொலிஸார் கைது செய்தனர்.

அகதிகள் மீதான தாக்கு தலை அடுத்துதலைமறைவாகி யிருந்த இந்தபிக்குவைக்கைது செய்வதற்கு பொதுமக்களின் ஒத்துழைப்பைப் பொலிஸார் கோரியிருந்த நிலையிலேயே நேற்று பொலிஸ் வலையில் அவர் சிக்கினார்.

இந்தசம்பவம்தொடர்பாகக் கைது செய்யப்பட்டிருந்த மற் றொரு பிக்குவான வண. அக்மீ மன தயாரத்ன தேரர் பிணை யில் விடுவிக்கப்பட்டிருந்தமை தெரிந்ததே. (உ)

# அரசின் செயற்பாடுகளால் முஸ்லிம் சமூகம் விரக்தி!

கொழும்பு, ஒக். 21

நல்லாட்சி அரசின் செயற்பாடுகளால் முஸ்லிம் மக்கள் நம்பிக்கை இழந்து, விரக்தி நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர் என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் தெரிவித்துள்ளார்.

மேலும், நாட்டில் வெறுப்பூட்டும் பேச்சுக்களையும், செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கு ஐக்கிய நாடுகள் காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என அமைச்சர் ரிஷாட் ஐ.நா. விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீஸிடம் வலியுறுத்தியுள்ளார்.

இலங்கைக்கு விஜயம் செய்துள்ள ஐக்கிய நாடுகள் விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீப்பை அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும், அமைச்சருமான ரிஷாட் பதியுதீன் நேற்றுக் காலை கொழும்பில் உள்ள ஐ.நா. தலைமை அலுவலகத்தில் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இந்தச் சந்திப்பில் முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் அமைச்சர் ரவூப் ஹக்கீமும் கலந்துகொண்டு, முஸ்லிம் சமூக அபிலாஷைகள் குறித்து தெளிவுபடுத்தினார்.

இதன்போது அகில இலங்கை மக்கள் காங்கிரஸ், முஸ்லிம் சமூகம் எதிர்நோக்கி வரும் பிரச்சினைகள் அடங்கிய மகஜர் ஒன்றையும் கையளித்தது.








அதனைப் பெற்றுக்கொண்ட ஐ.நா. விசேட அறிக்கையாளர் பப்லோ டி கிரீப், தங்களின் அறிக்கையில் இந்த விடயங்களையும் சேர்த்துக் கொள்ளப் போகிறோம் என உறுதியளித்துள்ளார்.

**அமைச்சர் ரிஷாட் பதியுதீன் சுட்டிக்காட்டு**

அத்துடன், முஸ்லிம்கள் தற்போது அரசின் நடவடிக்கைகள் தொடர்பில் மிகவும் கவலையடைந்து வருகின்றனர் எனவும், மீள்குடியேற்றம், காணிப் பிரச்சினை, யுத்த காலத்தில் நடந்த இழப்புகளுக்கான நஷ்டஈடு வழங்கப்படாமை போன்ற பிரச்சினைகளை இந்த சமூகம் நீண்டகாலமாக எதிர்நோக்கி வருகின்ற போதும், இன்னும் அவை தீர்க்கப்படாமல் இழுத்தடிக்கப்பட்டு வருகின்றன என்றும் அமைச்சர் ரிஷாட் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அரசு மேற்கொண்டு வரும் தேர்தல் முறை மாற்றம் மற்றும் புதிய அரசமைப்பு உருவாக்கம் உட்பட பல மறுசீரமைப்புக்களில், முஸ்லிம் சமூகத்தின் அபிலாஷைகளும், கோரிக்கைகளும் உள்வாங்கப்படாத நிலை காணப்படுகிறது.

எந்தவோர் அரசியல் மாற்றத்திலும் சிறுபான்மை இனமான முஸ்லிம் சமூகமும் புறக்கணிக்கப்படாது கவனத்தில் எடுக்கப்பட வேண்டும் என்பதை சர்வதேசசமூகம், உறுதிப்படுத்த வேண்டும்.

எந்தவொரு காலத்திலும் முஸ்லிம் சமூகம் இந்த நாட்டில் பிரிவினையையோ, பிளவினையோவிரும்பாது அனைத்து சமூகங்களுடனும் ஐக்கியமாகவும், ஒருமைப்பாடாகவும் வாழ்ந்து வருகின்றது.

எனினும், அண்மைய காலங்களில் இனவாதப் பேச்சுக்களும், செயற்பாடுகளும் முஸ்லிம் சமூகத்தை குறிவைத்து மேற்கொள்ளப்படுவதுடன், அவர்கள் கொச்சைப்படுத்தப்பட்டும், தூஷிக்கப்பட்டும் வருகின்றனர்.

எனவே, நாட்டில் வெறுப்பூட்டும் பேச்சுக்களையும், செயற்பாடுகளையும் நிறுத்துவதற்கு ஐ.நா. காத்திரமான பணிகளை ஆற்றி, இன ஐக்கியம் வலுப்பெற உதவ வேண்டும் எனவும் அமைச்சர் ரிஷாட் பதியுதீன் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இந்தச் சந்திப்பில் மக்கள் காங்கிரஸ் சார்பில் கட்சியின் தவிசாளர், பிரதி அமைச்சர் அமீர் அலி, நாடாளுமன்ற உறுப்பினர்களான நவவி, அப்துல்லாஹ் மஹ்ரூப், கட்சியின் அரசியல் விவகார சட்டப் பணிப்பாளர் ருஸ்தி ஹபீப் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

(க)

## நீர்வேலி விபத்தில் இளைஞர் படுகாயம்!

யாழ். நீர்வேலிச் சந்தியில் நேற்றுக் காலை காரும், மோட்டார் சைக்கிளொன்றும் மோதி ஏற்பட்ட விபத்தில் இளைஞர் ஒருவர் படுகாயமடைந் துள்ளார்.

இந்த நிலையில் விபத்தில் படுகாயம டைந்த இளைஞர் யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.



கோப்பாயிலிருந்து பருத்தித்துறை நோக்கிப் பருத்தித்துறை வீதியால் பயணித்துக் கொண்டிருந்த வைத்தியரின் கார் இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளுடன் மோதியுள்ளது.

இந்த விபத்தில் சில மீற்றர் தூரம் வரை மோட்டார் சைக்கிளை செலுத்தி வந்த இளைஞன் தூக்கி வீசப்பட்டுப் படுகாயமடைந்துள்ளார். படுகாயமடைந்த இளைஞர் வீதியில் பயணித்தவர்களால் மீட்கப்பட்டு யாழ். போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

சம்பவத்தில் இளைஞன் பயணித்த மோட்டார் சைக்கிளும், வைத்தியர் பயணித்த காரும் சேதங்களுக்குள்ளாகியுள்ளன. இருவரினதும் அதிகரித்த வேகமே இந்த விபத்துச் சம்பவத்துக்கான காரணமெனச் சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்துள்ளனர்.

## சித்த வைத்தியப் பயிற்சி நெறியை ஊக்கப்படுத்துவதற்கு நடவடிக்கை!

யாழ்ப்பாணம், ஒக். 21

வடமாகாணத்தில் அடுத்த வருடம் சித்த வைத்தியம் சார்ந்த பயிற்சி நெறியை கற்பதற்கு புலமைப்பரிசில் மூலமாக வெளிநாடுகளுக்கு பயிற்சி நெறிக்கு அனுப்பும் செயற்றிட்டங்கள் மேற்கொள்ளப்படவுள்ளன.

சித்த வைத்தியம் சார்ந்த பயிற்சி நெறியை ஊக்கப்படுத்துவதற்கும் இதன் மூலம் நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது



என வடமாகாண சித்த வைத்தியத்துறை திணைக்களப் பணிப்பாளர் மருத்துவர் திருமதி.சி.துரைரட்ணம் தெரிவித்துள்ளார்.

வட மாகாணத்தில் சித்த வைத்தியம் சார்ந்த துறையில் உள்ளவர்களுக்கு, அவர்களின் ஆற்றலை விருத்தி செய்வதற்கு திணைக்களத்தினால் பல்வேறு பயிற்சி நெறிகள் வழங்கப்பட்டு வருகின்றன என்று அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார்.

## தென்மராட்சி மக்களுக்கு உலர் உணவுப் பொருள்கள்!

தென்மராட்சி, ஒக். 21

தென்மராட்சி பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட மக்களுக்கான மூன்றாம் கட்ட உலர் உணவுப்பொருள்கள் குறித்த பிரதேச பலநோக்கு கூட்டுறவுச்சங்க கிளைகளில் விநியோகிக்கப்பட்டு வருகின்றன.

பிரதேசத்தில் வறட்சியால் பாதிக்கப்பட்ட 5 ஆயிரத்திற்கும் மேற்பட்ட குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்கள் விநியோகம் தற்போது நடைபெற்று வருகின்றன என பிரதேச செயலக இடர்முகாமைத்துவ பிரிவு தெரிவித்துள்ளது.



மேலும், இலகு வேலைத்திட்டத்தில் பங்குபற்றிய குடும்பங்களுக்கு உலர் உணவுப் பொருள்களுக்கு மேலதிகமாக அரிசியும் வழங்கப்பட்டுள்ளது.

காலைக்கதிர் Kalaikkathir



# யாழ். பல்கலை மாணவர் சுட்டுக்கொலை; நீதி விசாரணையைத் துரிதப்படுத்துங்கள்!

## சட்டமா அதிபருக்கு இலங்கை ஆசிரியர் சங்கம் கடிதம்

யாழ்ப்பாணம், ஒக்.21

"யாழ்.பல்கலைக்கழக மாணவர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பாக நீதி விசாரணைகளைத் துரிதப்படுத்த நடவடிக்கை எடுங்கள்."

– இவ்வாறு சட்டமா அதிபரைக் கடிதம் மூலம் கோரியிருக்கின்றது இலங்கை ஆசிரியர் சங்கம்.

கடந்த 2016.10.20 ஆம் திகதி சுன்னாகத்திலிருந்து வரும்போது கொக்குவில் குளப்பிட்டிச் சந்தியில் வைத்துச் சுட்டுப்படுகொலை செய்யப்பட்ட யாழ்.பல்கலைக்கழக மாணவர்களான நடராஜா கஜன், விஜயகுமார் சுலக்ஷன் ஆகியவர்களின் மரணம் தொடர்பாக – இன்றுடன் ஒருவருடம் கடந்த நிலையிலும் – மேல் நீதிமன்றத்தில் உரியமுறையில் வழக்குத்தாக்கல் செய்யப்படவில்லை. இச்சம்பவம் தொடர்பாக – முதலில் விபத்தினாலேயே மரணம் ஏற்பட்டதாக பொலிஸார் கூறிய நிலையில் – ஐந்து பொலிஸாரைக் கைது செய்து – அவர்களுக்கும் பிணைவழங் கப்பட்ட நிலையில் – மேல் நீதிமன்றத்தில் இதுவரை வழக்குத் தாக்கல் செய்யப்படாதமையால் மாணவர்களின் மரணம் தொடர்பாக உண்மைகள் வெளிப்படுத்தப்படவில்லை.

பெரிய விபத்துக்கள் ஏற்பட்டால் – உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் அவ்விடத்திற்குச் சென்று பார்வையிடுவது வழக்கம். அவ்வாறெனில் – உதவிப் பொலிஸ் அத்தியட்சகர் சூட்டுச் சம்பவம் நடந்த இடத்திற்கு சென்றிருப்பாரானால் – அம்மாணவர்கள் சுடப்பட்டு இறந்தார்கள் என்பது உறுதிப்படுத்தப்பட்டிருக்கும். இவ்விரு மாணவர்களின் மரணத்திற்கு நீதியான விசாரணை கோரி 25.10.2016 அன்று வடமாகாண ஆளுநர் அலுவலகம் முன் பல்கலைக்கழக மாணவர்கள் ஆர்ப்பாட்டம் செய்தபோது – இச்சம்பவம் தொடர்பாக உடனடியாக விசாரணை நடைபெறும் என ஆளுநரால் உறுதியளிக்கப்பட்ட நிலையிலும் – அதற்குரிய நடவடிக்கைகள் இன்றுவரை மேற்கொள்ளப்படவில்லை. எனவே – உடனடியாக மேல் நீதிமன்றத்தில் வழக்குத் தொடர்ந்து இருமாணவர்களின் மரணம் தொடர்பாக – விசாரணையைத் துரிதப்படுத்துங்கள்.

– இவ்வாறு இலங்கை ஆசிரியர் சங்கம் சட்டமா அதிபருக்கு கடிதம் மூலம் கோரியுள்ளது. குற்றத்தோடு தொடர்புடைய அனைவருக்கும் எதிராக உரிய நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் அதில் கோரப்பட்டுள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் பொதுச்செயலாளர் ஜோசப் ஸ்ராலின் தெரிவித்தார்.

# வடமாகாண விவசாய அமைச்சின் உப அலுவலகம் மாங்குளத்தில்

## நேற்றுத் திறந்து வைக்கப்பட்டது







மாங்குளம், ஒக்.21

வடக்கு மாகாண சபையின் விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சினுடைய உப அலுவலகம் நேற்று வெள்ளிக்கிழமை காலை மாங்குளத்தில் திறந்துவைக்கப்பட்டது.

முன்னதாக மாங்குளம் இத்தியடி சித்தி விநாயகர் ஆலயத்திலிருந்து சுவாமிப் படங்கள் எடுத்துவரப்பட்டு சம்பிரதாயபூர்வ நிகழ்வுகள் இடம்பெற்றமையைத் தொடர்ந்து, வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரனினால் பெயர்ப்பலகை திரைநீக்கம் செய்யப்பட்டது.

வடமாகாண சபைக்கான அலுவலகங்கள், மாங்குளத்தில் அமைக்கப்பட வேண்டும் என்ற நீண்டநாள் கோரிக்கைக்கு முன்னுதாரணமான செயற்பாடு இது என நிகழ்வில் கலந்து கொண்ட பலரும் சுட்டிக்காட்டினர்.

இந்நிகழ்வில் வடமாகாண விவசாயமும் கமநல சேவைகளும், கால்நடை அபிவிருத்தி, நீர்ப்பாசனம், மீன்பிடி, நீர்வழங்கல் மற்றும் சுற்றாடல் அமைச்சர் க.சிவநேசன், வடமாகாண சபை பிரதி அவைத்தலைவர் வ.கமலேஸ்வரன், வடமாகாண சபை உறுப்பினர்களான து.ரவிகரன், ஆ.புவனேஸ்வரன், தியாகராசா, நடராஜா, இந்திரராசா, சிவயோகன், தர்மலிங்கம், தவநாதன், ஜெயதிலக மற்றும் முன்னாள் வடமாகாண சபை உறுப்பினர் மயூரன், திணைக்களத் தலைவர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

# அரசியல் கைதிகள் விடயம்: விரைந்த தீர்வு அவசியம்

## சட்ட மாணவர் சங்கம் அறிக்கை

அரசியல்கைதிகள் விடயத்துக்கு விரைந்த தீர்வு அவசியம் என யாழ். பல்கலைக்கழக சட்ட மாணவர் சங்கம் ஓர் அறிக்கையில் கோரியுள்ளது.

இது தொடர்பாக அந்தச் சங்கம் விடுத்துள்ள அறிக்கையில் கூறப்பட்டவை வருமாறு:-

இலங்கைத் தீவில் யுத்தம் முடிவுக்கு வந்து பல ஆண்டு காலம் ஆகிய விட்ட போதிலும், ஆட்சிக்கு வரும் ஒவ்வொரு அரசாங்கங்களும் அரசியல் கைதிகளின் விடுதலை தொடர்பில் அசமந்த போக்கைப் பின்பற்றி வருவது நாட்டின் நல்லாட்சி யையும் குறிப்பாக சட்டவாட்சியின் பொறுப்புக்கூறும் தன்மையையும் கேள்விக்கு உட்படுத்துகின்றது. தற்போதைய சூழ்நிலையில் ஆட்சியில் உள்ள அரசாங்கம் தேசிய இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாணுதல் தொடர்பில் அதிகளவில் பேசினாலும், அரசியல் கைதிகளின் நீதி விசாரணையில் கடும் இனவாதத்தைக் காட்டியபடி பேரினவாதப் போக்குடனேயே செயற்படுகின்றது.

கடந்தகாலங்களில் நாட்டில் மாபெரும் சதிப் புரட்சிகளை இலங்கை அரசின் இறையாண்மைக்கு எதிராக செயற்படுத்திய மக்கள் விடுதலை முன்னணியினர் பகிரங்கமான பொது மன்னிப்பில் விடுவிக்கப்பட்ட வரலாறுகள் தாராளமாக உண்டு.

ஆயினும் சிறுபான்மையினராகிய இந்த அரசியல் கைதிகள் விடயத்தில் ஆட்சிக்கு வந்த அரசாங்கங்களின் போக்கு மிகவும் வேதனையானது. இது நாட்டில் பெரும்பான்மையினருக்கு ஒரு நீதி, சிறுபான்மையினருக்கு ஒரு நீதியா என்ற கேள்வியையும் இது விதைக்கின்றது. இப்போது அரசியல் கைதிகளின் விடுதலை என்ற பதத்தினை விட, அவர்களுக்கான துரிதமான பக்கசார்பற்ற விசாரணையையே சட்டமாணவர் சங்கம் வலியுறுத்துகின்றது.

இலங்கை அரசின் இறைமையாண்மைக்கும் பாதுகாப்புக்கும் எதிராக செயற்பட்ட அமைப்பு எனத் தடைசெய்யப்பட்ட அமைப்பாகிய தமிழீழ விடுதலைப் புலிகளின் அமைப்பினுடைய 12000 புலிஉறுப்பினர்கள் புனர்வாழ்வு அளிக்கப்பட்டுதற்பொழுது விடுவிக்கப்பட்ட சூழ்நிலையில், வெறும் சந்தேகத்தின் பெயரில் கைது செய்யப்பட்ட இந்த அரசியல் கைதிகளின் விசாரணையை நீதிமன்றம் ஆரம்பிப்பதில் என்ன தவறு இருக்கமுடியும்? எனவும் சட்டமாணவர் சங்கம் வினாஎழுப்புகின்றது.

ஆகவே சட்டத்தின் ஏற்பாடுகளுக்கு மிகவும் தவறான வழியில் செயற்படும் அரசாங்கத்தின் போக்கு சட்டத்துறை மாணவர்களாகிய எமக்குப் பெரும் அதிர்ச்சியையும் வேதனையையும் தருகின்றது. எனவே துரிதமான முறையில் இலங்கை அரசாங்கம் அரசியல் கைதிகளின் விசாரணைகளை ஆரம்பித்து உரிய தீர்வினை எவ்வித இழுத்தடிப்புமின்றி வழங்க வேண்டும். அதுவரை நியாயமான முறையில் சட்ட மாணவர் சங்கத்தின் போராட்டம் தொடரும். – என்று உள்ளது.

# இடைக்கால அறிக்கையின் உள்ளடக்கம் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு விளக்கம்

## 28, 29ஆம் திகதிகளில் கொழும்பில் நடக்கும்

கொழும்பு, ஒக்.21

அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைக் குழு தயாரித்து முன்வைத்துள்ள இடைக்கால அறிக்கை குறித்து தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் எம்.பிக்களுக்கு விசேட பயிற்சிப் பட்டறை மூலம் விளக்கமும் வியாக்கியானங்களும் அளிக்கப்பட விருக்கின்றன என அறியவந்தது.

இவ்விடயம் குறித்து நேற்றும், முன்தினமும் கூட்டமைப்பின் நாடாளுமன்றக் குழு கூடி ஆராயும் எனக் கூறப்பட்டிருந்தது.

ஆனால் அக்கூட்டம் நடைபெறவில்லை.

எனினும், அதற்குப்பதிலாக இடைக்கால அறிக்கையின் அம்சங்கள் குறித்து, கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு விளங்கப்படுத்தி, புரிய வைப்பதற்கான விசேட பயிற்சிப்பட்டறை எதிர்வரும் 28, 29ஆம் திகதியில் (சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்) கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவரின் அலுவலகத்தில் நடைபெறும் எனத் தெரிய வந்தது.

இந்தப் பயிற்சிப் பட்டறையில், மேற்படி இடைக்கால அறிக்கைத் தயாரிப்புப் பணியில் வள ஆளணியினராகப் பங்கு பற்றிய சிலரும் விசேட வருகை தந்து, இடைக்கால அறிக் கையின் அம்சங்கள் குறித்து கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு விளக்கமளிப்பர் எனக் கூறப்பட்டது.

இந்த இடைக்கால அறிக்கை குறித்து விவாதிப்பதற்காக நாடாளுமன்றம் அரசமைப்புக் கவுன்சிலாக 30, 31 மற்றும் முதலாம் திகதியில் ஒன்றுகூட இருக்கையிலேயே அதற்கு முதல் இரண்டு நாள்களும் கூட்டமைப்பு எம்.பிக்களுக்கு அது குறித்து விரிவுரைகள் நடத்தப்படவிருக்கின்றன. (உ)

# ஈழத்தில் இந்தியப் படையால் படுகொலைகள்:

## தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவையின் செயலகத்தில் நாளை நினைவஞ்சலி

யாழ்ப்பாணம், ஒக்.21

ஈழத்தில் இந்தியப் படைகளால் படுகொலை செய்யப்பட்ட பொது மக்களுக்கானநினைவஞ்சலிசெலுத்தும்நிகழ்வு, நாளை ஞாயிற்றுக்கிழமை மாலை 4 மணிக்கு இல. 34 கோயில் வீதி யாழ்ப்பாணத்திலுள்ள தமிழ் தேசிய பண்பாட்டுப் பேரவை தலைமைச் செயலகத்தில் இடம்பெறும் எனஅறிவிக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பில்பேரவை வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

ஈழப் போராட்டத்தின் எழுச்சிக்கும் வீழ்ச்சிக்கும் மிக முக்கியமானது இந்திய அரசே ஆகும். தன் பிராந்திய வல்லாதிக்கத்திற்காக ஈழத்தமிழர்களின் சுயநிர்ணய உரிமைப் போராட்டத்தை கடபத்தனமாக பயன்படுத்திக் கொண்டது இந்திய அரசு. இதற்கு தமிழ் அரசியல் தலைமைகளும் துணை போனமையை யாரும் மறுக்க முடியாது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன – ராஜீவ் காந்தி ஒப்பந்தத்தின்பின்னர் அமைதிப்படை என்ற போர்வையில் ஈழத்திற்கு வந்த இந்தியப் படை நேரடியாகவும் மறைமுகமாகவும் ஈழப்போராட்டத்தை நசுக்கி இல்லாதொழிக்க முனைந்த வேளையில், அவர்களுக்கெதிராக விடுதலைப் புலிகள் யுத்தத்தை நடத்தினர். இச் சந்தர்ப்பத்தில் புலிகளை அழிக்கின்றோம் என்ற போர்வையில் ஈழத்தில் கொலைகளையும் வன்புணர்வுகளையும் சித்திரவதைகளையும் பெரும் உடைமை அழிவுகளையும் மேற்கொண்டது இந்தியப் படை. காலம் கடந்து போனதால் மறக்கடிக்கப்பட்ட இந்த மனிதப் பேரவலத்திற்கு சாட்சியாக இன்னும் பலர் வாழ்ந்து கொண்டிருக்கின்றார்கள்.

ஈழத்தில் இறுதியுத்தம் தொடர்பான யுத்தக் குற்றங்களுக்காக இலங்கை அரசின் மேல் ஐக்கிய நாடுகள் சபையில் பிரேரணை கொண்டுவரும் தமிழ் அரசியல் தலைமைகள் இந்திய இராணுவத்தால் ஈழத்தில் கொல்லப்பட்ட இருபத்தையாயிரத்திற்கு மேற்பட்ட பொதுமக்களுக்காகவும் சித்திரவதைக்கு உட்படுத்தப்பட்டவர்களுக்காகவும் வடக்கு, கிழக்கு பகுதிகளில் அழிக்கப்பட்ட பொது மக்களின் சொத்துக்கள் உடைமைகளுக்காகவும் இதுவரை குரல்கொடுக்காதமை மிக வேதனையான விடயமாகும்.

நாளைய நிகழ்வில் இந்திய அமைதிப்படை மேற்கொண்ட மனித பேரவலத்திற்கு எதிராக ஐக்கிய நாடுகள் சபையில் விசாரணை மேற்கொள்ளப்பட வேண்டும் என்று தீர்மானமும் நிறைவேற்றப்பட இருக்கின்றது. எனவே தமிழ் உணர்வாளர்கள் மற்றும் இந்திய அமைதிப் படையால் பாதிக்கப்பட்டவர்கள் அனைவரும் இந் நிகழ்வில் கலந்துகொண்டு தங்கள் தார்மீக கடமையை நிறைவேற்றுங்கள். – என்று மேற்படி பேரவையின் செயலாளர் எம்.உதயசிறி அந்த செய்திக் குறிப்பில் குறிப்பிட்டுள்ளார். (இ)

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 21.10.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.